# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 18 ஞாயிற்றுக்கிழமை (03.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 219




09 வடக்கின் உள்ளூராட்சி தேர்தல் ஏன் முக்கியம்?



11 உல்லாச பயணிகளைக் கவரும் பெரிய பெருக்க மரம்



27 நன்னீர் அபாயம் குடாநாட்டில

# சரணடைந்தோர் கொலை; விசாரிக்க மூன் இணக்கம்

## ஐ.நா. வெளியேறியது குறித்தும் ஆராயப்படும்



நியூயோர்க், ஜூலை 03

வன்னியில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது, போராளிகளைச் சரண் அடைவதற்கு ஐக்கிய நாடுகள் சபை வழங்கிய உறுதி மொழிக்கு முரணாக அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்து விசாரிக்க வேண்டும் என்று - ஐ.நா.நிபுணர் குழு வழங்கிய பரிந்துரைக்கு இணங்க விசாரணை நடத்தப் படும். ஐ.நா.பொதுச் செயலாளர் பான்-கீ-மூன் இதற்கு இணக்கம் தெரிவித் திருப்பதாக அவரின் பேச்சாளர் பர்ஹான் ஹக் ''இன்னர் சிற்றி பிறஸ்'' ஊடகத்துக்குத் தெரிவித்தார்.

(31 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸ் திடீர் சுகவீனம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக யாழ். ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் கொடியேற்றிய கையோடு அமைச்சர் திடீரென தமக்கு மயக்கம் வருவதாக தெரிவித்ததை அடுத்து உடனடியாக யாழ். ஆஸ்பத்திரி அவ சர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட் டார். அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்படுவதாக வைத்தியசாலை

(31 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தேர்தல் பிரசாரத்துக்கு முகாமிடவரும் 23 அமைச்சர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்காக 23 அமைச்சர்கள் வடக்கில் முகாமிடவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தை ஐந்து வலயமாகப் பிரித்து ஒவ்வொரு வலயத்திலும் சிரேஷ்ட அமைச்சர், அமைச்சர், பிரதி அமைச்சர் கொண்ட ஒவ்வொரு குழு பிரசார நடவடிக்கையில் ஈடுபடும்.

இன்றுமுதல் அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வருவர் என்றும் அவர்கள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் தங்கியிருந்து பிரசாரப் பணிகளை முன்னெடுப்பர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்களுடன் அவர்களது செயலர்களும் வருகை தந்து மக்களின் குறைபாடு

(31 ஆம் பக்கம் பார்க்க)

## கடவுச் சீட்டு அலுவலகம் விரைவில் யாழ்ப்பாணத்தில் இயங்கத் தொடங்கும்

### அமைச்சர் பஸில் நேற்று உறுதிமொழி



யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்.மாவட்டத்தில் கடவுச்சீட்டு அலுவலகத்தின் கிளையொன்றைத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உறுதியளித்தார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவை நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார் பஸில்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்கள் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கால விரயத்துடன் பெருந்தொகையான பணத்தைச் செலவழித்து தென்னிலங்கைக்குச் சென்று வர வேண்டியுள்ளது.

(31 ஆம் பக்கம் பார்க்க)

### மாற்று வலுவுடையோருக்கான ஒலிம்பிக்கில்

## சிவபூமி மாணவன் துஷ்யந்தன் வெள்ளிப் பதக்கம் பெற்று சாதனை



யாழ்ப்பாணம், ஜூலை 3

கிறீஸின் தலைநகர் ஏதென்ஸில் நடைபெற்று வரும் மாற்று வலுவுடையோருக்கான ஒலிம்பிக் போட்டியில் யாழ். மாணவன் சிவராசா துஷ்யந்தன் வெள்ளிப்பதக்கம் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவனான இவர் இந்த ஒலிம்பிக்

(31 ஆம் பக்கம் பார்க்க)

### போர்க்குற்றங்களில் தத்ரூபக் காட்சிகள் அடங்கிய

## 'இலங்கையின் கொலைக்களம்' படத்தை ரணில் - மூன் ஒரே நேரத்தில் பார்ப்பர்

ஜெனீவா, ஜூலை 3

அமெரிக்கா சென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனும் ஒன்றாக இருந்து 'இலங்கையின் கொலைக்களம்' சனல் 4 ஆவணத் திரைப்படத்தை பார்வையிடுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் பான் கீ - மூனைச் சந்தித்து ரணில் பேச்சு நடத்தவுள்ளார். அந்த நேரத்தில் இருவரும் ஒன்றாக அமர்ந்து போர்க் குற்றங்கள் மற்றும் திகிலூட்டும் காட்சிகள் அடங்கிய இந்த ஆவணப்படத்தை பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ரணில், அரசின்

(31 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழருக்குத் தீர்வு வழங்க அரசு மறுத்தால் ஜனநாயக ரீதியான போராட்டம் வெடிக்கும்



யாழ்ப்பாணம், ஜூலை 3

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு ஒன்றை வழங்க இலங்கை அரசு மறுக்குமானால் அல்லது தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றுமானால் ஜனநாயக ரீதியான போராட்டம் வெடிக்கும்.

இந்தப் போராட்டத்துக்கு இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் ஆதரவை வழங்கும் என்ற முழு நம்பிக்கையும் எமக்கு உண்டு.

### ஏழாலை பிரசாரக் கூட்டத்தில் மாவை முழக்கம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா இத்தகவலைத் தெரிவித்தார்.

ஏழாலை உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற உள்ளூராட்சிச்

(31 ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வெப்பமான காலநிலை காணப்படுவதுடன் தெளிவான காலநிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

# வடமராட்சி கிழக்கின் 4 பிரிவுகளில் இன்று மக்கள் மீளக்குடியமர்வு

## நிகழ்வில் பஸிலும் பங்குபற்றுவார்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடமராட்சி கிழக்கில் உள்ள நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இன்று மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

பொருளாதார மற்றும் அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்த நிகழ்வில் கலந்து கொள்கிறார்.

போக்கறுப்பு, வெற்றிலைக்கேணி, முள்ளியான், சுண்டிக்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 385 குடும்பங்களே மீளக் குடியமர்த்தப்படவுள்ளன.

இதுவரை காலமும் இராமாவில், குடத்தனை ஆகிய இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த இந்த மக்கள் இன்று முதல் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படுகின்றனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை-

நீண்டகாலமாக மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்த பருத்தித்துறை - மருதங்கேணி வீதி இன்று திறந்து விடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-9-236)

## மாநகர சபைக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்த

# றெமீடியஸ் மீது நடவடிக்கை கூட்டமைப்பு ஆராய்கின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 3


யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.றெமீடியஸ் நடந்து கொண்ட விதம் குறித்து ஆராய்ந்து அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை நடந்த மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் பரஞ்சோதி மீது தண்ணீர் போத்தலை எறிந்து அவரை அநாகரிக வார்த்தைகளால் ஏசியிருந்தார் மற்றொரு உறுப்பினரான றெமீடியஸ்.

இது தொடர்பாக றெமீடியஸையும் ஏனைய உறுப்பினர்களையும் தனித்தனியாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கூட்டமைப்பின் தலைமையுடன் கலந்துரையாடிய யாழ். தலைவர்கள், இந்த விவகாரம் குறித்து ஆராய குழு ஒன்றை அமைத்து அதன்மூலம் ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-ஐ)

# நாட்டில் அமைதி நிலவ மடு அன்னையின் ஆசி



மடு அன்னையின் திருச்சொரூபப் பவனி இடம்பெறுவதையும் பக்தர்கள் அன்னையின் அருள் பெறக்கூடியிருப்பதையும் காணலாம்.

# 'இந்துபோர்ட்' நினைவு நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 3

சைவப் பெரியார்களில் ஒருவரான இந்துபோர்ட் இராசரத்தினத்தின் 127 ஆவது பிறந்த தின நினைவு நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திருநெல்வேலியில் உள்ள சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் மா.வேதநாதன் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார். (ஒ-9)

## கிளிநொச்சி ஊரியானில் வைத்து

# செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவம் கைதான நபர் விளக்கமறியலில்

கிளிநொச்சி, ஜூலை 3

கிளிநொச்சி மாவட்ட உதயன் செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் கைது செய்த நபர் நாளைவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஊரியான் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்குச் செய்தி சேகரிக்கச் சென்றவேளையில் செய்தியாளர் தாக்கப்பட்டார்.

மறுநாள் வியாழக்கிழமை காலை சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சிப் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர் சன்னதி கிருபாகரன் என்பவரைக் கைது செய்தனர்.

பிரஸ்தாப நபரைப் பொலிஸார் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிவான் பெ.சிவகுமார் முன் ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் பிரஸ்தாப நபரை நாளைவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-ஐ-6)

# விரிவுரையாளர் சம்பள உயர்வு கோரிக்கையில் சாதகமான நிலை

## அடுத்த வாரத்தில் இறுதி முடிவு தெரியும்

கொழும்பு, ஜூலை 3

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை தொடர்பாக இறுதி முடிவு எட்டுவதற்கு முக்கிய கலந்துரையாடல் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனமும் இதை உறுதி செய்தது.

சம்மேளனத்தின் பிரதிநிதிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, உயர்கல்வி அமைச்சு செயலாளர் ஆகியோருடன் கடந்த சில தினங்கள் பேச்சுக்கள் இடம்பெற்றன.

முன்னேற்றகரமான முடிவுகளை எட்டியுள்ளோம். எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மாற்றுத் திட்டத்துக்குச் சாதகமான பதில் கிட்டியுள்ளது என்று சம்மேளனத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

நாம்முன்வைத்துள்ளகோரிக்கை தொடர்பாக சாதகமான பதில் அடுத்த வாரத்தில் கிட்டுமானால் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தத்தைவாபஸ்பெறுவோம் - என்றார் அவர். (ஒ-ஐ)

# நிகழ்வுகள்

## மணிமண்டபத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 3

சங்கானை, மாவடி இந்து இளைஞர் மன்றத்தின் அனுசரணையுடனும், பொதுமக்களின் உதவிகளுடனும் கட்டி முடிக்கப்பட்ட மாவடி ஞான வைரவர் மணி மண்டபம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு திறந்து வைக்கப்படும். (ஒ-ஐ)

## வித்தியா பூசையும் தரிசனமும்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வித்தியாமாலை அணிந்த மாணவர்களுக்கான வித்தியா பூசையும் ஸ்ரீ பகவானின் யாழ்.இளங்கலைஞர் மன்றம் மற்றும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இன்று காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளன. (ஐ)

## திருமுறை விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஜூலை 3

இணுவில் ஸ்ரீ பராராஜசேகரப் பிள்ளையார் திருநெறிய தமிழ் மறைக் கழகம் நடத்தும் திருமுறை விழாவும், பண்ணிசைப் போட்டிப் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்குப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி பத்மராணி சிவஞானராஜாவும், சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் த.பிரதீஸ்வரனும் கலந்துகொள்வர்.

இதில் வாழ்த்துரையை பேராசிரியர் க.தேவராசா நிகழ்த்தவுள்ளார். (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு முன்பள்ளி ஆசிரியருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

## யாழ்.நகர் நிகழ்வில் அமைச்சர் பஸில் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 3

வடமாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் விரைவில் நிரந்தர நியமனத்துக்குள் உள்வாங்கப்படுவார்கள் என்று உறுதியளித்தார். நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

நேற்றுப் பிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட் முன்பள்ளி ஆசிரியர்கள் முன்னிலையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். விமலநாதன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர் பஸில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாணத்திலுள்ள முன்பள்ளிகளின் மேம்பாட்டுக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகளவான நிதியை ஒதுக்கியுள்ளார். சர்வதேச தரத்திலுள்ள முன்பள்ளிகளுக்கு ஒப்பாக சகல வசதிகளும் கொண்ட முன்பள்ளிகளாக அவை தரமுயர்த்தப்படும்.

அத்துடன் முன்பள்ளி சிறார்களின் உள ஆரோக்கியத்துக்கு ஏதுவான பாடத்திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டு வருகிறது. அது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

நாட்டில் ஏனைய மாகாணங்களுக்கு முன்மாதிரியாக வடமாகாணமே முன்பள்ளிகளுக்கான உதவிக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாவை வழங்கி வருகிறது. ஏனைய மாகாணங்கள் தம்மிடம் நிதி இல்லை எனக் கூறி கைவிரித்துள்ளன.

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு கணினி மற்றும் இசைக் கருவிகள் வழங்கும் வைபவத்திலும் அமைச்சர் பஸில் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நேற்று மாலை வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் சமாதானத்துக்கான குழுவின் பிரதிநிதிகளுடன் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்துரையாடலில் ஈடுபட்டார். (ஒ-14-319)

# இலங்கையின் நிலையான அமைதிக்கு இன, மத பேதமின்றி மன்றாடுவோம்

## மடுத் திருப்பதியில் மன்னார் ஆயர்

மன்னார், ஜூலை 3

இலங்கையின் நிலையான அமைதிக்கும் சமாதானத்துக்கும் மடு அன்னையின் அருள் நிறைவாகக் கிடைக்கட்டும். அதற்காக இன, மத பேதமின்றி மன்றாடுவோம்.

இவ்வாறு மடுப் பதியில் நேற்று இடம்பெற்ற ஆடித் திருவிழாவில் மறையுரையாற்றிய மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாம் அனைவரும் இந்தத் தாயினுடைய மண்ணிலே ஒரே குடும்பமாக ஒன்று கூடியிருக்கின்றோம் இந்த வேளையில் பல்வேறு மொழிகளை நாம் பேசி இருந்தாலும் பல்வேறு பின்னணிகளில் இருந்து நாம் வந்திருந்தாலும் நாம் அனைவரும் ஒரே தாயின் பிள்ளைகளாக ஒரே மனத்தோடு ஒன்று கூடியிருக்கின்றோம்.

இந்த நிகழ்வானது மடுத் திருத்தலத்தில் இடம்பெறுவது எமது நாடு முழுவதும் மக்கள் ஒற்றுமையாகவும் சகோதரத்துவமாகவும் வாழ்வதற்கு முன் மாதிரியாக அமைந்துள்ளது.

இந்தவேளையில் இந்த நாட்டின் விடிவுக்காகவும் சமாதானத்துக்காகவும் அன்னையிடம் வேண்டிக் கொள்வோம்.

இந்த நாட்டிலே பல்வேறு துன்பங்களுக்கு உட்பட்டவர்களாக இங்கு வந்திருப்பவர்களை நாம் நினைவு கூருகின்றோம். சிறைச்சாலைகளிலும், முகாம்களிலும் வாழ்ந்து வருபவர்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

அதற்கு மேலாக எமது மக்கள் சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டும். குறிப்பாக எமது நாட்டை வழிநடத்துபவர்களுக்காகவும் சிறப்பான திருப்பலியை ஒப்புக் கொடுப்போம் - என்றார். (த-601)

# தெரிவுக்குழு தொடர்பான பிரேரணை செவ்வாயன்று சபைக்கு வருகிறது

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நாடாளுமன்ற தெரிவுக்குழு தொடர்பான பிரேரணை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் வருகிறது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

மொத்தம் 31 பேர் இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறுவர் என்றும் அரசு சார்பில் 19 பேரும் எதிர்க்கட்சிகள் சார்பில் 12 பேரும் இந்தக் குழுவில் இடம்பெறுவர் என்றும் அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரப்பரவலாக்கல், அதிகாரப் பகிர்வு ஆகியன தொடர்பாக விவாதிக்கப்படும் என்று அந்தப் பிரேர்ணையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் குழு என்று மட்டுமே அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டபின் சபாநாயக்கர் தலைமையில் இடம்பெறும் 'கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் உறுப்பினர்களின் பெயர் விவரங்களை தருமாறு சகல கட்சிகளின் தலைவர்களிடம் அவர் கோருவார்.

ஐ.தே.கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தெரிவுக் குழுவில் பங்கு பற்ற மாட்டா என்று அறிவித்துள்ள நிலையில் இந்தப் பிரேரனை நாடாளுமன்றம் வருகிறது. (ஒ-ஐ)

# அரசியல் கட்சிகளின் பின்னணியில் செயற்படும் ஆயுதக் குழுக்கள்

## கிழக்குத் தளபதி ஒப்புக்கொள்கிறார்

கிழக்கு மாகாணத்தில் அரசியல் கட்சிகளின் பின்புலத்தில் சில ஆயுதக்குழுக்கள் செயற்பட்டு வருவதாக சிறிலங்கா இராணுவத்தின் கிழக்குப் படைத் தலைமையக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

கிழக்கில் செயற்படும் ஆயுதக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே சிறிலங்கா இராணுவத்தின் கிழக்குப் படைத் தளபதி இவ்வாறு கூறியுள்ளார்,

திமிலைத்தீவு மக்கள் வங்கிக் கிளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெரும் கொள்ளைச் சம்பவத்தை அடுத்து வங்கி முகாமையாளர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றிய போது, கிழக்கு மாகாணத்திலேயே மட்டக்களப்பில் தான் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் கொலைகள் , கொள்ளைகள் அதிகரித்துள்ளன அதேசமயம் ஆயுதக்குழுக்கள் தம்மிடம் உள்ள ஆயுதங்களைக் காவல்துறையிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் தேடுதல் நடவடிக்கைகளின் மூலம் ஆயுதங்களை மீட்க நடவ்டிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ஒ-323)

# போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்குமாறு மலேசிய அரசியல் கட்சி ஐ.நாவிடம் மனு

கோலாலம்பூரில் உள்ள ஐ.நா பணியகத்துக்கு மூன்று பேருந்துகளில் நேற்று முன்தினம் சென்ற மலேசிய மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு எதிராக ஐ.நா. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விடயம் அடங்கிய மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

கட்சியின் பொதுச்செயலர் ஆர்.கண்ணன் தலைமையிலான இந்தக் குழுவினர் மலேசியாவுக்கான ஐ.நா செயலக பாதுகாப்பு அதிகாரி தேவேந்திர பட்டேலிடம் இரண்டு பக்க மனுவைக் கையளித்தனர்.

இந்த மனுவில் இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ அரசினால் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் பட்டியலிடப்பட்டுள்ளதாகவும் ஆர்.கண்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மோசமான மனிதஉரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ள அதிர்ச்சியான சாட்சியங்களை ஐ.நா அறிக்கை வெளிப்படுத்தியுள்ள நிலையில், அதன் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ மீதும் அவரது அரசின் மீதும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றில் ஐ.நா நடவடிக்கை எடுக்க முடியும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ஒ-323)

இணையச் செய்திகள்

# ஆஸி. தொலைக்காட்சியிலும் 'கொலைக்களம்'!

ஆஸ்திரேலியாவின் ஏபிசி தொலைக்காட்சியில் நாளை திங்கட்கிழமை 'இலங்கையின் கொலைக்களம்' ஒளிபரப்பப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை இரவு 8.30 மணிக்கு ஏபிசி1(அஆஇ1) இன் Four Corners என்ற நிகழ்ச்சியிலேயே இந்த ஆவண திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது. இதனை மீண்டும் செவ்வாய்க்கிழமை இரவு 11.30 மணிக்கும் தொடர்ந்தும் ஏபிசி24(அஆஇ24) இல் சனிக்கிழமை இரவு 8.00 மணிக்கும் மீள் ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியை ஏபிசி தொலைக்காட்சியின் கெரி ஓ பிரையன் தொகுத்து வழங்குகின்றார்.

நடந்துமுடிந்த போரில் எதுவித மக்களின் உயிரிழப்புக்களும் இடம்பெறவில்லை (Zero Civilian Casulaties) என சிறீலங்கா அரசு இப்போதும் தெரிவித்துவரும் நிலையில் இக்காணொளியை பார்ப்பதன் மூலம் நீங்களே அதுபற்றிய முடிவினை எடுங்கள் என அத் தொலைக்காட்சி வெளியிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நியுசிலாந்து போன்றவை சுதந்திரமான விசாரணைக்குழுவை அமைக்குமாறு கோரிவரும் நிலையில் இதுவரை ஆஸ்திரேலியா அவ்வாறான கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

இவ்வாறான நிலையில் ஆஸ்திரேலியாவின் ஏபிசி தொலைக்காட்சியில் ஒளிபரப்பவுள்ள இந்த ஆவணப்படம் முக்கியமானது எனக் கருதப்படுகின்றது. (ஒ-323)

# கனகராயன்குளத்தில் தோன்றிய புத்தபெருமானும் வெள்ளரசும்

வவுனியா மாவட்டத்தின் கனகராயன் குளம் பிரதேசம் சிங்கள மயப்படுத்தும் கால்கோள் விழா ஒன்று கடந்த வாரம் இடம்பெற்றுள்ளதாக இணையத்தள செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

தொன்று தொட்டு தமிழ் மக்கள் மட்டுமே வசித்து வந்த கனகராயன்குளத்தில் ஸ்ரீ சம்புத்த ரஜமகா விகாரை என்ற பெயரில் ஒரு விகாரை அமைக்கப்படவுள்ளது. குறித்த இடத்தில் முதலில் சிறிய அளவிலான புத்தர் சிலை ஒன்றும் அதன் பின்னர் கடந்த வாரம் வெள்ளரசுமரம் ஒன்றும் நடப்பட்டது.

இராணுவத்தினரும் சில பௌத்த பிக்குகளுமே கடந்த திங்கள் கிழமை அன்று பெருமெடுப்பில் கூடி வெள்ளரசு மரத்தை நட்டு வைத்தனர் என்று அந்தச் செய்தி கூறுகிறது.

குறித்த நிகழ்வுக்கு அந்தக் கிராமத்தில் உள்ள தமிழ் மக்கள் பலாத்காரமாக வரவழைக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. (ஒ-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு

**AAT Intermediate Level**
**AAT Final Level**

சிறந்த அனுபவம் வாய்ந்த
விரிவுரையாளர்களால் நடத்தப்படுகின்றது.
தங்கள் பதிவுகளை முற்கூட்டியே
மேற்கொள்ளவும். ஏனெனில் அனுமதிகள்
வரையறுக்கப்பட்டுள்ளன.

பரீட்சை எழுதும்
மாணவர்களுக்கான
துரித மீட்டல்
வினாவிடைகள்
உள்ளடங்கலான
கருத்தரங்கு.

இடம்:- Spectraskills
No-19, Stanley Road,
(People's Bank 2nd Floor), Jaffna.
T.P- 0212221422, 0212221423

## மரண அறிவித்தல்கள்

### சதாசிவம் நாகராசா



புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 4ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் நாகராசா (01.07.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- செல்வநாயகி தம்பதியரின் மருமகனும் சிவஞானேஸ்வரியின் அன்புக் கண வரும் நகுலேஸ்வரி( பிரான்ஸ்) , விக்கினேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் டிசம்பரநாதன் , ரவிக்குமார்( பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தட்ஷினி, சிவாகினி,குருராம், டானியல், ஸ்ரிபனி, டாவிட், ஜோனார்த்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்ற அருளையா மற்றும் லோகநாதன் (பாலன்) ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம் , நடேசபிள்ளை மற்றும் விமலாதேவி, பவ்ானி தளையசிங்கம்( ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்), திருலோகவதி, காலஞ்சென்ற இராஜேஸ்வரன் மற்றும் சாந்தசிவரூபி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சபாராணி மற்றும் செல்வரத்தினம், சாந்தகுமாரி காலஞ்சென்ற சாந்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2011) ஞாயிற்றுக் கிழமை அரவது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
4ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (5429)

### விஸ்வநாத ஐயர் மகாதேவசர்மா



காரைநகர், மணற்காட்டைப் பிறப்பிடமாகவும் தற்போது இல. 93,டி6, பீற்றர்சன் தொடர்மாடி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாத ஐயர் மகா தேவ சர்மா நேற்று (02.07.2011 )சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் பத்மாவதி அம்மாவின் அன்புக் கணவரும் சிவகுமாரசர்மா (மயூரபதி பத்திர காளி அம்மன் கோயில்), நாகேஸ்வரி (ஆசிரியை, இரத்மலானை இந்துக் கல்லூரி), நந்தினி( ஆசிரியை, புகப்பிட்டிய சி.சி.தமிழ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பவாணி, சங்கர நாராயணன் (ஸ்ரீ இரங்கநாதன் கோயில், களனி), சபேசக் குருக் கள் (செண்பக விநாயகர் ஆலயம், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சந்தியா, சிந்தனா , யுகந்தரி, நிமேஷன் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.07.2011) ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
T.P: 0113159415, 0714023366

## 3 பெண்கள் காயம்

தென்மராட்சி, ஜூலை 3

மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கி 3 பெண்கள் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் சிக்கி காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மீசாலை மேற்குப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் மோதிக்கொண்டதில் இதே இடத்தைச் சேர்ந்த கு.குணகீதா (வயது- 37) என்பவரும், கச்சாய்ப்பகுதியில் மோட்டார் சைக்கிள் நாயுடன் மோதியதில் இதே இடத்தைச் சேர்ந்த கே. கவிதா (வயது-26) என்பவரும், மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் மீசாலை வடக்கைச் சேர்ந்த சந்திர நாதன் கனகாம்பிகை (வயது-51), அல்லாரையைச் சேர்ந்த என்.நர்த்தனன் (வயது-21) ஆகியோரும் காயமடைந்துள்ளனர். (த-207)

### வீடு விற்பனைக்கு உண்டு

பருத்தித்துறை கடற்கரை வீதி, கினிப்பிள்ளையார் கோயிலடியில் (கொட்டடி) 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு- 0776660422

### விற்பனைக்கு

36 -1xxx உழவு இயந்திரம் பெட்டியுடன் விற்பனைக்குண்டு

தொடர்பு- 0777804493

### விற்பனைக்கு

2 வயது நிரம்பிய அல்சேசன் ஆண் நாயும், பெண் நாயும், கூக்கஸ் பெரியன் குட்டியும், பொக்சர் குட்டியும் அல்சேசன் குட்டியும், பொமனேரியன் குட்டிகளும் விற்பனைக்குண்டு.

T.P- 0779185723, 0214903565

### கன்டர் வாடகைக்கு

PQ XXXX தொடரிலக்கமுடைய டிமோ பட்டா கன்டர் வாடகைக்கு/ குத்தகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு- 0776311934

### அறைகள் வாடகைக்குண்டு

கிளிநொச்சி, ஜெயந்தி நகரில் அறைகள் வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு- 0779208889(Regi)

### தேவை

அச்சகமொன்றில் கணினியில் பணியாற்றுவதற்கு ஆள்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கவும்.
தொடர்புகளுக்கு: 383/16, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
0777165589, 021 7912885

## VISA - வீசா
Consultancy Service

*UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,*

Visit / Tourist, Business, Family
Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

SIC, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

## WORDS WORTH INTERNATIONAL SPELLING BEE (INDIA)

இந்தியாவில் பல மாநிலங்களுக்கிடையே உலக மொழியான ஆங்கில மொழி அறிவை மாணவர்களிடையே வளர்க்கும் நோக்குடன் பல நிலைகளில் இலங்கையில் நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைகளில் பங்குபற்றி தகைமைச் சான்றிதழ்களையும், பெறுமதிமிக்க பரிசில்களையும் பெற்றுக் கொள்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு. தரம்-1 தொடக்கம் தரம் 12 வரையான மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

தொடர்புகளுக்கு- இலங்கைக்கான அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனம்.
**GENIUS ACADEMY**
T5, Golpatte Street, Colombo-13, 0779914260, 0113134067

## மரண அறிவித்தல்கள்

### ஷண்முகநாதக் குருக்கள் காண்டீப சர்மா
*(மணிஐயா)*



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஷண்முகநாதக்குருக்கள் காண்டீப சர்மா (01.07.2011) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமிக்குருக்கள் - நாராயணி அம்மா தம்பதியரினதும் மாவிட்டபுரம் குமாரசாமிக்குருக்கள் - அன்னம்மா (கீரிமலை) தம்பதியரினதும் பேரனும், காலஞ்சென்ற மஹாராஜஸ்ரீ ஷண்முகநாதக்குருக்கள் மற்றும் நகுலேஸ்வரி அம்மா தம்பதியரினதும் புத்திரனும், இரத்தின சபாபதிக்குருக்கள் (ஆதீன கர்த்தா, மாவைக்கந்தன்), கனக சபாபதி சர்மா, திரிபுரசுந்தரி, சாண்டில்ய சர்மா, வாருணிதேவி, பிரியதர்சினி, பரமேஸ்வரன் சர்மா, ஜெகதீஸ்வரி, வந்தியதேவ சர்மா ஆகியோரின் சகோதரனும், கலாவதி, ஜெயந்தி, சுப்பிரமணிய குருக்கள், செல்வராணி, கைலாசநாதக் குருக்கள், சங்கர் ஐயர், வாகீஸ்வரி, பிரதீப சர்மா, சோபிதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.30 மணிக்கு மாவை ஆதீன இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புண்ணிய தீர்த்தக்கரையில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அடியார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் குடும்பம்.
மாவிட்டபுரம்.

### கட்ட வேலைகள் செய்யப்படும்

கட்டடம் கட்டுதல், வயறிங், பெயின்ரிங், தளபாட வேலைகள், கிறில் வேலைகள் என்பன செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு- தவா கொன்ஸ்ரக்சன்ஸ்- (0776082032)

### விற்பனைக்கு

Panasonic MD 9000, MD 10,000, DVC 15 பாவித்த கமராக்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு- 0779515187

மாவை ஆதீன முதல்வர் அமரர் மகாராஜஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள் அவர்களின்
அன்பு மகன் காண்டீப சர்மா (மணிஐயா)
அவர்களின் அமரத்துவம் குறித்த

## கண்ணீர் அஞ்சலி



மாவைப் பெருமான் மயில்வா கனனை
மனதினி லேநினைந்தும்
மங்கா தவனருள் பூசனை யாவும்
சிறந்திடும் வழிவழியே
தேவை யவனருட் பூசனை குரிய
நிவேதனம் மிகுபடைத்தும்
தெய்வநன் னருளை பெற்றீர் ஐயா
தேசுடன் முருகனடி
மலரே யார்க்கும் உறுதி எனத்தினம்
பாடும் மொழியறிந்தும்
மாதவ ரூபன் காங்கேயன் யவனடி
தொழுத திறமறிந்தோ
ஞாலம ளந்ததோர் புண்ணியன் சேவடி
மலரே உறுதியென
மாண்புடன் தொழுதவன் பதமே அடைந்தீர்
பெறுவீர் ஓம் சாந்தி



மாவைக் கந்தன்
மகேஸ்வர
பூசைத்
தொண்டர்சபை.

## Micro Cars Ltd

MICRO HOLDINGS — MICRO Agri

மைக்ரோ எக்ரி பிரிவிற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்காக திறமையுடை பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

SONALIKA INTERNATIONAL TRACTOR

**Position:**
- Area Managers, Area Sales Executives,
- Tractor Spare Parts Executives, &
- Demonstrators.

**Skills & Attributes:**
விவசாயம் மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம் இருப்பின் மேலதிகத் தகைமைகளாகக் கொள்ளப்படும்.

**Age:** 22- 40 வயது

விவசாயப் பிரதேசங்களை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பலப் பொதி வழங்கப்படும்.

உறவினரல்லாத இருவருடைய விபரங்களுடன் கூடிய உங்களுடைய விண்ணப்பங்களை இவ்விளம்பரம் பிரசுரமான 07 நாட்களுக்குள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் (கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்)

Manager Administration,
**Micro Cars Ltd,**
No 34, Shady Grove Avenue,
Castle Strees,Colombo 08.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வன்னியில் மொட்டவிழும் 'சர்வாதிகாரம்'

சுமார் பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் திட்டத்தைக் கைவிடுவதாக அரசாங்கம் முடிவு செய்துள்ளது. பிரதிக் கல்வி அமைச்சர் ரி.பி.எக்கநாயக்கா இதனை நாடாளுமன்றத்தில் சமீபத்தில் உத்தியோகபூர் வமாக அறிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே பிரதி அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

பாடசாலைகளில் ஏற்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறையை சீர்செய்வதற்காக, தொண்டர் ஆசிரியர் சேவைத் திட்டம் அப்போதைய அரசாங்கத்தினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. குறிப்பிட்ட வருடங்களுக்குத் தொண்டர் ஆசிரியர்களாகப் பணி புரிந்தவர்களை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் உள்வாங்கி, பயிற்சி முடிவுற்றதும் ஆசிரியர்களாக நியமிப்பது என்பதே அரசின் திட்டமாக இருந்தது.

ஆனால், அந்தத் திட்டம் நேர்த்தியாகவும் சரிவரவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற குறைபாடுகளும் அவை குறித்த முறைப்பாடுகளும் பெருகின.

அத்தகைய ஒரு கட்டத்திலேயே, பல வருடங்களாகத் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்கள் ஆசிரிய உதவியாளர்கள் என்ற பதவிப் பெயருடன் தென்னிலங்கையில் அவ்வப்போது நியமிக்கப்பட்டனர்.

ஆனால், தமிழ்ப் பகுதிகளில் நிலவிய போர்ச் சூழலைக் காரணம் காட்டி ஆசிரிய உதவியாளர் நியமனம், காலத்துக்குக் காலம் தள்ளிப் போடப்பட்டு வந்தது. உள்ளூர் அரசியல் "சித்து விளையாட்டுக்களும்" பெரும் எண்ணிக்கையான இளைஞர் யுவதிகள் வருடக்கணக்கில் சொற்ப சம்பளத்தில் பணிபுரியும் நிலையை உருவாக்கியது.

பாடசாலைகள் வழங்கிய ஊதியம் தொண்டர் ஆசிரியர்களின் உடை, உணவு போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே போதுமானதாக இருக்கவில்லை.

இத்தகைய பின்னணியில், தமிழ்ப் பிரதேசங்களில் சம்பந்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள், மகஜர் போராட்டங்களின் பின்னர், 2009 ஆம் ஆண்டு நவம்பரில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்வி வலயங்களில் பணியாற்றியவர்களும், வவுனியா, மன்னார் மற்றும் வடமராட்சி கிழக்கில் செயற்படும் கல்வி வலயங்களைச் சேர்ந்தவர்களும் ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்படவில்லை. இந்தவகையில் 750க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள், எப்போது தாமும் புதிய சேவையில் உள்வாங்கப்படுவர் என்று கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாகக் காத்திருந்து கண்பூத்த நிலையில் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தவேளையில்-

இனிமேல் ஆசிரிய உதவியாளர் சேவைக்கு எவரும் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிவிப்பு-

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு கல்வி வலயங்களிலும் மன்னாரில் மடு கல்வி வலயம், யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கிழக்கு கல்வி வலயம் ஆகியவற்றிலும் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களின் வயிற்றில் புளி கரைத்துள்ளது!

இத்தனைக்கும் இவர்கள் போர்க்காலத்திலும் தமது சேவையில் சோர்ந்துவிடாது, ஆசிரியப் பணி புரிந்தவர்கள். இவர்களில் மிகப் பலர் 1998ஆம் ஆண்டிலிருந்து வேதனம் எதுவுமின்றிப் பணியாற்றியவர்கள் என்பது இன்னொரு இருண்ட பக்கம்!

வன்னிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் நிலவிய காலத்தில், சம்பந்தப்பட்ட பாடசாலைகளில், அதிகாரிகளின் அனுமதியுடன் நியமிக்கப்பட்ட பலர், பாடசாலைகளின் நிதிவளங்கள் போதாது இருந்தமையால் பல வருடங்களுக்கு ஊதியம் எதுவும் பெறவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. அது மட்டுமன்றி, நாட்டின் ஏனைய பகுதிகளில் தொண்டர் ஆசிரியர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டதால் தாம் வேறு வேலை தேடி விண்ணப்பிக்கவில்லை என்றும் அபலைகளாக மாற்றப்பட்டுள்ள இளைஞர், யுவதிகள் தெரிவிக்கிறார்கள்.

இந்தநிலைமை அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும். ஆனால் இது விடயத்தில் அவர்கள் கையாலாகாதவர்களாக மாறிவிட்டனர் என்று ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் மனம் குமுறுகின்றனர்.

சம்பந்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் பணிபுரிந்த கல்வி வலயங்களை மட்டும் இலக்குவைத்து, நியமனத்தில் ஓரவஞ்சகம் காட்டப்பட்டிருப்பது அரசின் வஞ்சம் தீர்க்கும் செயல் என்றே கருத வேண்டியுள்ளது.

போர் முடிந்துவிட்டது. வன்செயல்களை முடிவுக்குக் கொண்டு வந்தாயிற்று. நாட்டின் சகல பிரதேசங்களிலும் வாழும் மக்களை சம பிரசைகளாகவே நடத்துகின்றோம், மதிக்கிறோம்; வசதிகளைச் செய்கிறோம் - என்று அரசின் மந்திரி பிரதானிகள் வடக்கே வரும்போது அந்தர் கணக்கில் பீற்றுகின்றனர்! ஆனால் வன்னியில் குறிப்பிட்ட பகுதிகளில் பணியாற்றிய இளைஞர் யுவதிகளின் வாழ்க்கையில் நெருப்பைக் கொட்டியுள்ளனர். இது திட்டமிடப்பட்ட ஒரு பெரிய விவகாரம் என்பதில் ஐயமில்லை.

காரணம் தெரிவிக்கப்படாமல் உள்ளாடும் கள்ளாடுமாக, அரசு தான் நினைத்தவாறு செயற்படுவது, பழிவாங்குவது சுத்தச் சர்வாதிகாரம் அன்றி வேறல்ல. அது வன்னியில்தான் மொட்டவிழ்கிறதோ என்ற ஐயம் எழுகிறது. சந்தேகம் தீர்க்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமும் நீதியும் கிடைக்க வகை செய்யப்படுமா, என்ன?

# மதிய உணவு வேண்டும் - ஆளும் கட்சி அது எமக்கு வேண்டாம் - எதிர்க்கட்சி

## 20 நிமிடங்கள் மாநகர சபையில் சூடான விவாதம்

யாழ்ப்பாணம், ஜூலை 03

மதிய உணவு குறித்த சூடான விவாதம் ஒன்று யாழ். மாநகர சபையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தின்போது இடம்பெற்றுள்ளது.

உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்குவதா? வேண்டாமா? என ஆளும்கட்சி, எதிர்கட்சி உறுப்பினர்களிடையே இந்த விவாதம் சுமார் 20 நிமிடங்கள் வரை நீடித்தது.

மாதாந்தக் கூட்டத்தின்போது உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவினால் வீண்செலவு ஏற்படுவதால் அதை நிறுத்துமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தொடர்ந்தும் அதனை வழங்கவேண்டும் என ஆளும்கட்சி உறுப்பினர்களும் தமது வாதங்களை முன்வைத்தனர்.

யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா இந்த வாதப் பிரதிவாதங்களைக் கேட்டுச் சபையில் சிரித்துக் கொண்டிருந்தார்.

யாழ். மாநகர சபையின் பொதுக் கூட்டத்தின்போது உறுப்பினர்களுக்கு வழங்கும் மதிய உணவை இனிவரும் காலங்களில் நிறுத்துமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சார்பாக உறுப்பினர் பரஞ்சோதி பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார்.

யாழ். மாநகர சபையிடம் நிதியில்லை, அதனால் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது என ஆளும் கட்சி உறுப்பினர்களும் முதல்வரும் அடிக்கடி கூட்டங்களின்போது குறிப்பிடுகின்றனர்.

மக்களின் வரிப்பணத்திலிருந்து சபையின் உபசரிப்புக்காக மாதாந்தம் சுமார் 45 ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவிடப்படுகிறது. எனவே உபசரிப்புக்குச் செலவாகும் பணத்தை அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தவேண்டும். ஆகவே மாதாந்தக் கூட்டங்களின் போது வழங்கப்படும் மதிய உணவை நிறுத்தவேண்டும் எனக் காரணம் கூறியே அந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

மதிய உணவை நிறுத்துவது தொடர்பான பிரேரணையை முதல்வரின் செயலாளர் அறிவித்ததும் ஆரம்பமானது சூடான விவாதம்.

வழமையாக சபைக்கூட்டங்களில் வாய் திறக்க பின்னடிக்கின்ற ஆளும் கட்சியைச் சேர்ந்த பிரதிமேயர் தனது கருத்தை முன்வைக்கத் தவறவில்லை.

எல்லாப் பிரச்சினையும் முடிந்து தற்போது சபையில் சாப்பாட்டுப் பிரச்சினை எழுந்துள்ளது. சாப்பாடு என்பது முக்கியமானது. அதனை நிறுத்தமுடியாது எனப் பிரதிமேயர் தனது கருத்தை தெரிவிக்க சபையில் முதல்வர் உட்பட ஆளும்கட்சி உறுப்பினர்கள் 'கொல்' எனச் சிரித்தனர்.

சபை நட்டத்தில் போகிறது எனக் கூறுகிறீர்கள் எனவே மதிய உணவை நிறுத்துவது அவசியம் என ஆளும் கட்சி உறுப்பினரைப் பார்த்துக் கூறினார் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன்.

சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அலவன்ஸ், தொலைபேசிக் கட்டணங்கள் என்பவற்றையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விட்டுக் கொடுக்கத்தயார் என்றால் நாம் மதிய உணவை விட்டுக் கொடுக்கத் தயார் எனப் பதிலடி கொடுத்தனர் ஆளும்கட்சி உறுப்பினர்களான அஸ்ருமி பதூர்கின் மற்றும் மங்கள நேசன் ஆகியோர்.

ஆளும் கட்சி உறுப்பினர் விஜயகாந்த் குறிப்பிடும்போது நாம் சபையின் கௌரவ உறுப்பினர்கள். சாப்பிட வழியில்லாமல் இங்கு வரவில்லை. சாப்பாடு என்பது கௌரவமாக வழங்கப்படுவதாகும்-என்றார்.

இவ்வாறு வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் எழுந்தார் ஆணையாளர் மு.செ. சரவணபவ. சிற்றுண்டி, மதிய உணவு வழங்குவதற்கான அனுமதி உள்ளூராட்சிச் சபைச் சட்டத்தில் இருக்கிறது. அதேபோல தொலைபேசிக் கட்டணம், அலவன்ஸ் வழங்கவும் சட்டத்தில் இடமுண்டு. ஆனால் இவை மாநகர சபையின் நிதியிருந்தே செலவழிக்கப்படவேண்டும் என ஆணையாளர் தனது விளக்கத்தை விவரித்தார்.

இதனை அடுத்து சபைக் கூட்டத்தின் போது மதிய உணவுக்கான இடைவேளை அறிவிக்கப்பட்டபோது மதிய உணவைப் புறக்கணித்து அங்கிருந்து வெளியேறினார்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள். (த-14)

# பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தில் நாளைய தினம் சொற்பொழிவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 03

பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் 'சாந்தி மற்றும் பொறுமைப் பண்புகள்' என்னும் தலைப்பிலான சொற்பொழிவு நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் இல.140, யாழ். நாவலர் வீதியிலுள்ள பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

ரஷ்யாவின் மொஸ்கோ நகர பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தின் பணிப்பாளரும் ரஷ்யா மற்றும் போல்டிக் நாடுகளிலுள்ள இந்த நிலையங்களின் நம்பிக்கையாளர் சபைத் தலைவருமாகிய பி.கே. சுதாராணி குப்தா சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார்.

ரக்ஷா பந்தன் பண்டிகையை முன்னிட்டு இந்தச் சொற்பொழிவு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கடந்த மாதம் முழுவதும் செயலிழந்த

# அக்கராயன் பிரதேச வைத்தியசாலை முதலாம் திகதி முதல் மீண்டும் ஆரம்பம்

அக்கராயன், ஜூலை 3

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச வைத்தியசாலை இரு மருத்துவர்களுடன் கடந்த முதலாம் திகதி முதல் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த மே 5ஆம் திகதி அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் இடம் பெற்ற மருத்துவ ஊழியரின் உயிரிழப்பையடுத்து வைத்தியசாலை செயலிழந்தது.

வைத்தியசாலையின் செயலிழப்பினால் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம், ஆரோக்கியபுரம், விநாயகர் குடியிருப்பு, மணியங்குளம், ஸ்கந்தபுரம், முக்கொம்பன், கோணாவில், யூனியன் குளம், அமைதிபுரம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 3000 வரையான குடும்பங்களின் மருத்துவத் தேவைகள் பாதிக்கப்பட்டன.

இந்த நிலையில் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், கிளிநொச்சி பொது மருத்துவமனையின் பணிப்பாளர் ஆகியோரின் பெரும் முயற்சியினால் இருமருத்துவர்கள் அக்கராயன் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

(த-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகர மையப் பகுதியில் எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக ஏ-9 வீதியும் டச்சு வீதியும் இணைந்த 5 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

விலை விவரம் நேரில்.

தொடர்பு: 077 3144756, 021 2227339, 021 2270038

## வள்ளிபுனம் பாடசாலை ஆசிரியர் கவனத்துக்கு

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புக் கல்விக் கோட்டத்தின்கீழ் இயங்கும் வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தரப் பாடசாலை நாளை திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனால் இடமாற்றம் செய்யப்பட்டு இணைப்பு இரத்துச் செய்யப்பட்ட ஆசிரியர்களை கடமையில் ஈடுபடுவதற்கு பாடசாலைக்கு நாளை சமுகம் தருமாறு புதுக்குடியிருப்புக் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-313)

## வீடு வாடகைக்கு உண்டு

பலாலி வீதி, உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு ஓரளவு அருகில் நிறுவனம் அல்லது வியாபார ஸ்தாபனம் நடத்துவதற்கு உகந்த விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: மே/பா உதயன் விளம்பர இல: 4158, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் கட்டட வேலைகளுக்கு மேசன், உதவி ஆள்கள் உடன் தேவை.

தொடர்புகளுக்கு: M.I. Group
077 9110666

## சாரதி தேவை

J.C.B பக்கோ லோடர் (சக்கரம் ரயர் பூட்டியது) 3DX, 3CX இந்தியன், லண்டன், மொடல் இவற்றை இயக்குவதற்கு நல்ல அனுபவமுள்ள திறமையான சாரதி தேவை.

ஆவணங்களுடன் சமுகம் தரவும்.

தொடர்புகொள்ள வேண்டிய இடம்:

**வேணி களஞ்சியம்**

165, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 2222046, 077 1611865

(5418)

## விற்பனைக்கு

நல்லூர் மருதடி வீதியில் (நல்லூர்ப் பக்க மாக), 5 விசாலமான அறைகள் 2 குளியலறைகள், கார்த் தரிப்பிடம், சிமெந்திலான தண்ணீர்த்தொட்டி, குழாய்க் கிணறு மற்றும் சுற்றுமதிலுடன் அமைந்த 64ஆம் இலக்க வீடும் அதன் பின்னாலுள்ள தனியான பாதையும் சுற்றுமதிலும் கொண்ட வெற்றுக் காணியும் (மொத்த விஸ்தீரணம் 1பரப்பு 15.8 குளி) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
மேற்படி முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

## திறப்பு விழா

நாளை (04.07.2011) திங்கட்கிழமை கிளிநொச்சியில் உதயமாகின்றது

**நல்லூர் பாம் சென்ரர்**

பிறிமா ஒறிஜினல் கோழித்தீன் வகைகள், சகலவிதமான கால்நடை மருந்து வகைகள், உபகரணங்கள், பிறிமா ஒறிஜினல் புறொயிலர் கோழிக்குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**நல்லூர் பாம் சென்ரர்**

(அங்கீகரிக்கப்பட்ட பிறிமா கொம்பனியின் ஏக விநியோகத்தர்)

கனகபுரம் வீதி, அம்பாள்குளம், கிளிநொச்சி.

தொ.பே.இல.: 0776225944.

(சி/1334)(38)

## பிறந்தநாள் வாழ்த்து



சுபேஸ் – மேகலா தம்பதியினரின் செல்வப் புதல்வி

**திஷானா**

இன்று (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை தனது இரண்டாவது பிறந்தநாளை உசன் மிருசுவிலில் அமைந்துள்ள தனது இல்லத்தில் வெகுசிறப்பாக கொண்டாடுகிறார் இவரை உசன் கந்தனின் அருளாசி பெற்று சீர் சிறப்புடன் சகல செல்வங்களையும் பெற்றுவாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்
அப்பா, அம்மா
தாத்தா, அம்மம்மா
பெரியமாமா குடும்பம்
குட்டிமாமா



தகவல் – சிவகுமார்
உசன் மிருசுவில்

# UK Westminster Academy

யின் சர்வதேச சான்றிதழ்களை பெற அரியதொரு சந்தர்ப்பம் @ London Metropolitan College

Westminster Academy LONDON

### DIPLOMA IN COMPUTER STUDIES

Windows XP, Vista Operating System
Ms Word 2007, Ms Excel 2007,
Ms Power Point 2007, Ms. Access 2007,
Visual Basic 6.0, Internet & E-mail

2 Months 48 Hours

### Diploma in 3D Modeling & Animation

Maya — Course Fee: 11,750/=
3D Max — Course Fee: 11,750/=

4 Months 95 Hours

### DIPLOMA IN GRAPHIC DESIGN

Adobe InDesign, Adobe Photoshop Cs3
Adobe Illustrator Cs3
Cs3 Coral Draw X4

2 Months 50 Hours

### DIPLOMA IN WEB DESIGN

Introduction to InterNet, HTML, Adobe Fireworks CS3
Adobe Photoshop Cs3,
Adobe Flash CS3 Professional
Adobe Dream weaver Cs3, Uploading

2 Months 50 Hours

### Diploma in Computerized Accounting

1 Month 25 Hours

- Tally.7.2
- MYOB
- Quick Book
- Accpac

### Diploma In Advance Multimedia

6 Months 150 Hours

> Adobe Photoshop Cs3
> Adobe Illustrator Cs3
> Adobe InDesign Cs3
> Adobe Premier Cs3
> Adobe After Effects Cs3
> Adobe Flash Cs3
> Coral Draw X4
> Scanning & Printing
> 3D Studio Max
> Alias Maya
> Sound Forge 8.0
> Swish MAX

### Diploma in Computer Hardware with Networking

- Computer Parts Identifications
- Assembler or Upgrade own PCs
- Troubleshooting & Repair all Kind of Pcs
- System Configuration & Software Installation (Vista / Linex / Windows XP / 98 )
- Installation VGA/TV/Radio/Sound/ Etc.
- Networking to Computers

1 Month 25 Hours

### Fundation Degree Programme

வெளிநாடு செல்ல இருக்கும் மாணவர்களுக்கான விஷேட பாடநெறி



> Information Technology
> Microsoft Office Applications
> Web Multimedia
> Computer Programming
> Computer Hardware Technology
> Spoken English with Grammar

3 Months 240 Hours

### Diploma in English



Full Time/ Part Time

O/L, A/L, முடித்த மாணவர்கள், தொழில் புரிவோர்; வெளிநாடு செல்ல இருபோர்களுக்கான பாடநெறி.

> ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம்
> இரண்டே மாதங்களில் ஆங்கிலம் பேசுவதற்கான உத்தரவாதம்
> பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

| DAYS | TIME | DURATION |
|---|---|---|
| Mon - Fri | 9:30 am - 2:30 am | 1 Months |
| Mon - Fri | 2:30 am - 5:30 am | 1 Months |
| Mon / Wen/ Fri | 6:00 pm - 8:00 pm | 3 Months |
| Sunday | 2:00am - 5:00 am | 3 Months |

Morning or Evening Classes

100% GUARANTEED

WORK, STUDY IN, OR MIGRATE TO UK, CANADA, AUSTRALIA, NEW ZEALAND OR THE USA!

# IELTS

மாணவர்களின் தேவைக்கு ஏற்ப காலை/மாலை நேர வகுப்புகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்

LMC
LONDON METROPOLITAN COLLEGE

# London Metropolitan College

No. 197 Arasady Road, Jaffna
(Between Kantharmadam Juction & Hindu Ladies College)
Tel:021 222 7230 / 021 753 8395

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் 40 வீதமான நிலப்பரப்பில் கண்ணிகள்

## அவற்றை அகற்றும் நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்.மாவட்டத்தில் இன்னும் 40 வீதமான நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றப்பட வேண்டும். தற்போது அந்த நிலப்பரப்பிலும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் இடம் பெற்று வருவதாக யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகப் பொறுப்பதிகாரி வ.முருகதாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:


யாழ்.மாவட்டத்தில் தற்போது 3 நிறுவனங்கள் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. 'ஹலோட்ரஸ்', 'டனிஸ்' கண்ணிவெடி அகற்றும் பிரிவு, மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் இராணுவத்தின் முதலாம் பொறியியல் பிரிவு ஆகியனவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

இந்த வருடம் ஜூன் மாதம் 14 ஆம் திகதி பெறப்பட்ட இறுதி அறிக்கையின்படி இன்னும் 22 சதுர கிலோமீற்றர் பரப்பில் கண்ணிவெடி அகற்றல் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன் 3 சதுர கிலோமீற்றர் பரப்பில் தற்போது வேலை இடம்பெற்றுவருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி அபாயமுள்ள பிரதேசமாக இனங்காணப்பட்ட 530 பிரதேசங்களில் 445 பிரதேசங்களில் அதாவது 38 சதுர கிலோமீற்றரில் முற்றாகக் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன.

எஞ்சிய இடங்களில் தற்போது மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் அவை மிக விரைவிலேயே பூர்த்தியடையலாம் எனவும் தெரிவித்தார். (த-15)

# புற்றுநோய் சிகிச்சை மேம்பாட்டுக்கு தெற்கு நோக்கி சைக்கிள் பயணம்




யாழ்ப்பாணம், ஜூலை 3

வடமாகாணத்தின் புற்றுநோய்ச் சிகிச்சையை மேம்படுத்துவதற்கான நிதி திரட்டும் நோக்கில் சுப்பிரமணியம் சிறிகாந்தன் என்ற இளைஞன் தெற்கு நோக்கி நேற்றுச் சனிக்கிழமை தனது சைக்கிள் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் புற்றுநோய் மருத்துவ நிபுணர் டாக்டர் என். ஜெயக்குமரன் மற்றும் பல வைத்தியர்கள், சமூகத்தொண்டர்கள், நலன்விரும்பிகள், மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இவர் செல்லும் வழிகளில் புற்றுநோய் பற்றிய தகவல்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள்இறுவட்டுகள் என்பவற்றை மக்களுக்கு இலவசமாக வழங்கிச் செல்வார்.

நேற்று முன்தினம் காலி தெய்வேந்திரமுனையில் நடை பயணத்தை ஆரம்பித்த குழுவினர் பருத்தித்துறை முனையை வந்தடைய ஏற்பாடாகி உள்ளது. இந்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் இளைஞர் வவுனியா, புத்தளம், கொழும்பு ஊடாகச் சென்று நடைபயணக் குழுவினரை எதிர்வரும் 6 ஆம் திகதி பாணந்துறையில் சந்திப்பார். அவர்களுடன் இணைந்து 7ஆம் திகதி காலி முகத்திடலை அடைவார். இந்தப் பயணத்தின் மூலம் 200 மில்லியன் ரூபா சேகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (த-149)

## எதிர்காலத் தலைவர்களாக...



வளரவாழ்த்து: பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெற்ற உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பொறியியலாளர் செல்வி சாந்தாதேவி தர்மரட்ணம், பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் மற்றும் விருந்தினர்கள் மாணவிகளினால் மாலையிட்டு வரவேற்கப்படுகின்றார்கள். (த-190)

# அங்கவீனமுற்றவர்களுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு

தென்மராட்சி, ஜூலை 3

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த அங்கவீனமுற்ற நபர்களைக்கொண்ட குடும்பங்களுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு பெற மேலும் ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கொடுப்பனவுத் தொகை சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீன முற்றோருக்கான தேசிய செயலகத்தினால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

பின்வரும் பயனாளிகள் தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வை.குணராசா( நுணாவில் மேற்கு), பொன்னுத்துரை ஜெயரூபன்( நாவற்காடு, வரணி), சரவணமுத்து சிவலிங்கம் (நாவற்குழி தெற்கு), நடேசு மகேந்திரன் (நுணாவில் மேற்கு), அருளப்பு தவராசா(சந்திரபுரம், மட்டுவில்), எட்வேட் பிரான்சிஸ்( அல்லாரை தெற்கு).

பிரதேசத்தில் ஏற்கனவே 28 பேர் இந்தத் திட்டத்தில் மாதாந்தம் தலா 3 ஆயிரம் ரூபாவீதம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (த-207)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்குத் தளபாடங்கள்

தென்மராட்சி, ஜூலை 3

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை வளாகத்தில் அமைக்கப் பட்டுவரும் இரு விடுதிகளுக்கென ஒரு தொகுதி தளபாடங்கள் வந்துள்ளன.

பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தினரின் நிதி உதவியுடன் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டுதலில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களே வந்துள்ளன.

பின்லாந்துச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் வைத்தியசாலை வளாகத்தில் பல மில்லியன் ரூபா செலவில் பொது மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சை ஆண்,பெண் இருமாடி விடுதிக் கட்டடங்களையும் வைத்திய அதிகாரிகள் வாழ்விடங்களையும் நிர்மாணித்து வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-207)

# மாநகர சபைக் கூட்டக் குறிப்புகள் இனி ஒலிப்பதிவு செய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்.மாநகர சபைக் கூட்ட அறிக்கைக்கான குறிப்புகள் ஒலிப்பதிவுக் கருவிகள் மூலம் பதிவுசெய்யும் செயற்பாடு இனி வருங்காலங்களில் நடைமுறைப்படுத்தப்படும்.

இதன் மூலம் மாதாந்தக் கூட்டங்களின் போது சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் ஏற்பட்டு வந்த தவறுகளைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற யாழ்.மாநகர சபையின் ஆறாவது மாதாந்தப் பொதுக் கூட்டத்தின்போதே ஆணையாளர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது அறிக்கையிடுவதற்காக குறிப்பெடுக்கும் முறையே தற்போது நடைமுறையில் உள்ளது. இதன் காரணமாக சில சந்தர்ப்பங்களில் அறிக்கையிடலின்போது தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். இனிவருங்காலங்களில் ஒலிப்பதிவுக் கருவிகள் மூலம் குறிப்புகள் எடுக்கப்பட்டு அறிக்கையிடப்படும் என்றார் - ஆணையாளர்.

மாதாந்தக் கூட்டங்களின் போது சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்கள் உரிய முறையில் இடம்பெறுவதில்லை என்று எதிரணியினர் கடந்த பல கூட்டங்களின்போது வலியுறுத்தி இருந்தனர். நேற்றுமுன்தினம் கூட அவர்கள் இதனைத் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-14)

# யாழ்.மாநகர சபைக்கு விரைவில் புதிய நவீன தீயணைப்பு இயந்திரம்

## குடாநாடு முழுவதும் சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்.மாநகர சபை தீயணைப்புப் பிரிவின் சேவை யாழ். குடாநாடு முழுவதுக்கும் விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளது. அதற்கு ஏற்றவாறு புதிய நவீன தீயணைப்பு இயந்திரம் ஒன்று தீயணைப்புப் பிரிவுக்கு எடுத்துவரப்படவுள்ளது.

யாழ்.மாநகர சபையில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற இந்த வருடத்துக்கான 6 ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டத்தின் போது முதல்வர் [illegible] தார்.

1986 ஆம் ஆண்டு கனேடிய அரசினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட தீயணைப்பு இயந்திரம் ஒன்றைப் பயன்படுத்தியே யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டப் பகுதியில் தீயணைப்புப் பிரிவு தனது சேவையை வழங்கி வந்தது.

யாழ்.நகரில் அவ்வப்போது ஏற்படும் தீ விபத்துக்களின் போது யாழ்.மாநகர சபையின் தீயணைப்புச் சேவையினர் உரிய நேரத்தில் சம்பவ இடத்துக்கு வருவதில்லை என மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டு வந்தது.

தீயணைப்புப் பிரிவினரை தொலைபேசி மூலம் அழைக்கும் வேளைகளில் இயந்திரம் பழுதடைந்துள்ளது, பவுஸரில் தண்ணீர் இல்லை எனப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு வந்ததாகவும் பொதுமக்கள் மற்றும் நகர வர்த்தகர்கள் அவ்வப்போது அதிருப்தி தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் யாழ்.மாநகர சபைக்குப் புதிய தீயணைப்பு இயந்திரம் கிடைத்துள்ளது.

இனிமேலாவது இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு இடமளிக்காது சபையின் தீயணைப்புப் பிரிவு செயற்பட வேண்டும் என்று கூறப்பட்டது. (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
03 ஜூலை 2011 ஞாயிற்றுக்கிழமை

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr. P. ஆறுமுகம்**

T.P-0719315664, 0777569205

**மீண்டும் யாழில்**

05.07.2011 முதல் 10.07.2011 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/=

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

சிகிச்சைபெற விரும்புவோர் 05.07.2011 முன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

**காமல் ருரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)**
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

## நினைவஞ்சலி

பத்தாம் ஆண்டு இருபத்தைந்தாம் ஆண்டு



| அமரர் | | திருமதி |
|---|---|---|
| **பொன்னையா** | | **அன்னபூரணி** |
| **சோமசுந்தரம்(பத்தர்)** | | **சோமசுந்தரம்** |
| 14.01.1927 | மலர்வு | 03.09.1929 |
| 03.07.2001 | உதிர்வு | 13.09.1986 |
| ஆனி திரயோதசி | திதி | ஆவணி திருதியை |

எங்கள் நெஞ்சங்கள் இருக்கும்வரை
உங்கள் நினைவுகளைச் சுமந்திருப்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்

நவாலி கிழக்கு, மானிப்பாய். பொன். சோமசுந்தரம் நகைமாடம்

(சி/1316) (28-15-21)

## நீங்காத நினைவுகளில்

தோற்றம்
06
-
05
-
1959



மறைவு
01
-
06
-
2011

### அமரர் பாமதி பரமேஸ்வரநாதன்

(ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், களனி)

எமது முன்னாள் ஆசிரியை அமரர் பாமதி பரமேஸ்வரநாதன் அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

யா/வயாவிளான் ம.ம.வி.
வயாவிளான்.


பாடசாலைச் சமூகம்

(சி/5396) (28-19-21)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் புதியார் கிருஷ்ணபிள்ளை

பிறப்பு : 22.12.1932
இறப்பு : 13.07.2010



அன்பின் திருவுருவே!
பாசத்தின் பிறப்பிடமே!
அண்டவன் பாதத்தில்
அணையாத விளக்காய்
வேண்டியே விரைந்தோடிச் சென்று
ஆண்டு ஒன்று ஓடி மறைந்ததையா!
உன் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்
வடமேற்கு அல்வாய்.

### மர அரிவு இயந்திரத்தில் கை சிக்கி காயம்

மர அரிவு இயந்திரத்தினுள் இளைஞர் ஒருவரின் விரல்கள் அகப்பட்டு காயமேற்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த 30 ஆம் திகதி பூநகரியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கே.புவியழகன் (வயது-35) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கெண்டுவரப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.(த-207)

### யுவதி காயம்

மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டு யுவதி காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி சாவகச்சேரியில் இடம்பெற்றது. காயங்களுக்கு உள்ளான ர.வாசுகி (வயது-24) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகிறார். (த-207)

## வீட்டுத்தோட்ட வேலையாள்/ காவலாளி(பகல்) தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் மேற்குறிப்பிட்ட வேலைக்கு 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்க்கலாம்.
தொடர்பு: 0771965666

## தொடர்பு கொள்ளவும்

பொமேரியன் நாய்க்குட்டி, முயல்குட்டி, லவ்பேட்ஸ், பிஞ்சஸீ விற்பனை செய்யக் காத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.
யாழ் அக்கூரியம், 941, கே.கே.எஸ்.வீதி,
தாட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

றோஸ் - 100/=, மொசந்தாஸ் 60/=, சைப்ரஸ் 60/=, செவ்வரத்தை 60/=, மினி எக்ஸ்சோறா 60/=, இன்னும் பல இன மீன்கள், குருவிகள், கூடுகள் பூச்சாடிகள்
யாழ் அக்கூரியம், 941, கே.கே.எஸ்.வீதி,
தாட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

## வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் ராம் Food Cityக்கு கீழ்காணும் பணியாளர் தேவை.

1) பண வசூலிப்பாளர் (Cash collector)
2) விநியோக உதவியாளர்

04.07.2011 அன்று மு.ப. 11 மணிக்கு கீழ்காணும் ஆவணங்களுடன் சமுகம் தரவும்.

1) பிறப்புத்தாட்சிப் பத்திரம்
2) கிராம சேவையாளரின் சிபார்சுக் கடிதம்
3) சுயவிவரம்
4) தேசிய அடையாள அட்டைப் பிரதி

## Diploma in Mobile Phone Repairing

இலங்கை முழுவதும் பல நூற்றுக் கணக்கான Phone திருத்துனர்களை உருவாக்கிய பிரபல ஆசிரியரின்

**Free!** Study Packs (Faults Solutions) Schematics Diagram Cd's Applications Software codes Special Web Site

**Hardware**
- அறிமுகம் (Spares / ICs / Tools / Faults / Web sites)
- தவறுகளை கண்டுபிடிக்க Trouble Shooting ஒழுங்கு முறைகள்
- Ic/Ribbon/Spares மாற்றுதல் / ஒட்டுதல் போன்ற பயிற்சி (All brand)
- Phone கலற்றும் முறை (சகலவிதமான), Ribbon/Slide / Touch....Etc.
- Hotgun / Multumeter / Power supply / U S cleaner. உபயோகம்
- விசேட Hardware குறிப்புகள்
- Forum மூலம் தீர்வுகாணல் (Jumper System)

**Software** Setup Installation, Unlocking, Flashing

JAF, SE Tool, NS Pro, Infinity, Pin Finder, Spiderman, MX-Key...Etc. போன்ற Deviceகளை பயன்படுத்தி Unlock, Flash செய்யும் முறை முழுமையான செயன்முறை விளக்கத்துடன் கற்பிக்கப்படும்

**4 DAYS COURSE** JULY 11 MON, JULY 12 TUE, JULY 13 WEN, JULY 14 THU — 10.00 am 03.00 pm

LONDON METROPOLITAN COLLEGE
**London Metropolitan College**
No: 197 Arasady Road,Jaffna
(Between Kantharmadam Juction & Hindu Ladies College)
Tel: 071 4 241873, 021 222 7230

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில்07.07.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

- ★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு - 0776904590
- ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
- ★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944

## கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தின் நீண்ட கால உறுப்பினரும் முன்னாள் பொருளாளருமாகிய

**வல்லிபுரம் மயில்வாகனம்**
(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible] காங்கேசன்துறை.
[illegible] கலைமகள் [சமூக நிலைய] அங்கத்தவர்கள்.

## காணி விற்பனைக்கு

அரியாலை நெடுங்குளம் வீதியில்(சந்திக்கு மிகவும் அருகில்) உள்ள 4 பரப்புக் காண
விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0772571253

## உதவியாளர் தேவை

கொழும்பு, வெள்ளவத்தையில் கௌரவமான தமிழ் குடும்பத்துடன் பாதுகாப்பாகத் தங்கியிருந்து பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு 30-40 வயதுக்கிடைப்பட்ட பெண் உதவியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம்.
தொ.பே. 0777570182

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் சந்தியிலிருந்து ஒரு கிலோ மீற்ற ர் தூரத்தில் டாக்டர் சுப்பிரமணியம் வீதியருகே அரிசி ஆலையுடன் கூடிய பத்துப் பரப்புக் காணியும் நீர் வடிகாலமைப்புடன் கூடிய பத்துப் பரப்புத் தென்னங்காணியும் (மொத்தம் 20 பரப்பு) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0775101 092, 0776282614

## வேலையாள்கள் தேவை

மாபிள் கடைக்கு அனுபவம் உள்ள கணக்காளர் தேவை.
ஸ்டார் செரமிக்ஸ், இல 06, ஸ்ரேசன் வீதி,
யாழ்ப்பாணம் தொ.பே. 0777578277

## தவறிவிட்டது

4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை எனும் முகவரியுடைய அமிர்தநாதர் அமலதாஸ் என்பவரின் தே.அ.அ.(912493032V) கொழும்புத்துறைக்கும் புனித மடுத்தீனார் குருமடத்துக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத் தவர்கள் பின்வரும் முகவரியுடனோ தொலை பேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். புனித மடுத்தீனார் குருமடம், யாழ்ப்பாணம், 0212223689

## விற்பனைக்கு

வீணை, DVD Player, குளிர்சாதனப் பெட்டி (2) மற்றும் வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0718148150
0212222444
29/53, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள NP / HW XXXX தொடரிலக்கமுடைய CB 125 T , Twin - Deluxe மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 2444
0774528818
29/53, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

## மணமகள் தேவை

யாழ்.இந்து கனடா பிரஜாவுரிமையுடைய தாரத்தை இழந்த 42 வயது மணமகனுக்குத் தகுந்த மணப்பெண் தேவை கணவனை இழந்தவர்கள், விவாகரத்து ஆனவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு : 0776153725

## சவுண்ட் செய்வதற்கு ஆள் தேவை

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியில் மஹாமினி சவுண்ட் ஸ்தாபனத்தில் பணிபுரிவதற்கு [18-25] வயதுக்குட்பட்ட திருமணமாகாத ஆண்கள் இருவர் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். முன் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது. தகுதியானவர் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி எண்: 021 2225237
0776127793

## வீடு வாடகைக்குண்டு

நல்ல சூழலில் 07 அறைகளையும், 02 குளியலறைகளையும், 01 சமையலறையையும் கொண்டதுமான வீடு வாடகைக் குண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. பூங்கனிச்சோலைக்கு அருகில்.
தொடர்புகளுக்கு:-0777207260,
0750406396.

## மணமகள் தேவை

UK யிலிருந்து வந்திருக்கும் யாழ் இந்து கௌரவ குடும்பம், வயது 33, உயரம் 6 அடி, மூலம் 4 ஆம் பாதம், பாவம் 36 தனுராசி உள்ள மணமகனுக்கு மெல்லிய உயரமான மணமகள் தேவை.
தொடர்பு:- 0774012091

## "பீ" வெங்காய நாற்று விற்பனைக்கு உண்டு

நன்கு பராமரிக்கப்பட்டு நடுகைக்கு உகந்த வீரியமான 'பீ' (பம்பாய்) வெங்காய நாற்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
செல்லப்பா- விஸ்வநாதர்,
அராலி மத்தி, அராலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஏன் முக்கியம்? - உணர்ந்து செயற்படுங்கள்

மீண்டும் மீண்டும் உள்ளூராட்சி அரச முறைமையை இலங்கையின் ஆளுகை அமைப்பில், மூன்று மட்ட அரச அமைப்பில் ஒரு ஆளுகை அமைப்பாக வர்ணிக்கப்பட்டாலும், அத்தகைய அந்தஸ்தை அரசியல் யாப்பில் குறிப்பிட்டு வழங்கவில்லை. இதற்கான கோரிக்கை அரசின் உள்ளூராட்சிக் கொள்கைப் பிரகடனத்தில் மிக வலுவாக அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் திட்ட மாற்றத்துக்கான நிர்ப்பந்தங்களும் தோன்றியுள்ளன. உள்ளூராட்சி மன்றங்கள் யாவும் ''உள்ளூர் அரசாங்கங்கள்'' என்ற அந்தஸ்தைப் பெறுவது தவிர்க்க முடியாத ஒரு தேவையாகும்.

ஒரு மட்டத்தில் உள்ள அரசின் அதிகாரம் எவ்வளவு என்றால் அது அந்தந்த் மட்ட அரசுகளின் மக்கள் பிரநிதிகளின் தரத்தைப் பொறுத்ததாகும். இது ஜனநாயக அரசுகளில் உள்ள பண் பாகும். உதாரணமாக மக்கள் தெரிந்தெடுக்கும் பிரதி நிதிகள் ஊடாகவே மக்கள் தமது நாட்டில் இன்ன இன்ன அதிகாரங்களைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என பிரகடனப்படுத்துகின்றார்கள். இது சட்டவாக்கங்கள் ஊடாக நடைபெறுகின்றது. கூர்ந்த அறிவுள்ள மக்கள் சட்டத்தை ஆக்கினால் கூர்மையான அதிகாரங்களைக் கொண்ட சட்டங்களூடாகவும், தரம் குறைந்த பிரதிநிதிகளைத் தெரிந்தால் தரம் குறைந்த அதிகாரங்களைக் கொண்ட தரம்குறைந்த சட்டங்களூடாகவும் மக்களின் அதிகாரம் வெளிப்படுத்தப்படும்.

இவ்வாறே மாகாண அரசின் சட்டங்களின் தரமும் அங்கு தெரியப்படும் பிரதிநிதிகளைப் பொறுத்து இருக்கும். அரசியல் திட்டத்தில் இந்த இந்த விடயங்கள் தொர்பாக மாகாண சபைகளுக்கு சட்டவாக்கம் செய்யும் அதிகாரம் உண்டு என்று மட்டுமே கூறப்படும். அந்தந்த விடயங்களின் கீழ் என்னென்ன அதிகாரங்களை மாகாணசபை கொண்டிருக்கும் என்று கூறுவது மாகாணசபை அங்கத்தவர்களின் அறிவையும், திறமையையும் பொறுத்ததாகும். அதேபோல் உள்ளூராட்சி மன்றங்களால் உருவாக்கப்படும் உபவிதிகள், திட்டங்கள் என்பவற்றின் தரமும் அங்கு நாம் தெரிந்தெடுத்து அனுப்பும் பிரநிதிகளின் தரத்தைப் பொறுத்தே உள்ளது.

மக்களின் ஜனநாயக உரிமைகள் இந்தப் பிரதிநிதிகளின் ஊடாகவே செயற்படுத்தப்படுகின்றன. அத்துடன் மக்கள் இந்த இடத்தில் விழிப்பாக இருந்து தகுதியான பிரதிநிதிகளைத் தெரியாவிட்டால் தாமே தம்மை அவமானத்துக்கு உட்படுத்துபவர்களாவார்கள்.

2011.07.23 ஆம் திகதி நடைபெற உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பொருட்டு அரசு, அரச ஆதரவு அரசியல் கட்சிகளையே முன் வைத்து தேர்தலில் இறங்கியுள்ளது. அடாவடித்தனங்களுடன் மிரட்டல், தண்டித்தல் போன்ற வழிகள் கையாளப்படுகின்றன.

பலமில்லியன் கணக்கான பணம் செலவழிக்கப்படுகின்றது. அபிவிருத்தி நடவடிக்கைகள் திணிக்கப்படுகின்றன. குறு கடன்கள், வாழ்வாதார உதவிகள், கட்டடங்கள், தெருக்கள் என்பன திடீரெனப் போடப்படுகின்றன. முல்லைத்தீவிலும், கிளிநொச்சியிலும் மாத்திரம் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த பெருந்தெருக்களைவிட 98 தெருக்களை இராணுவம் முன்னின்று நிர்மாணிக்கின்றது. அரச வளங்களும், அரச உத்தியோகத்தர்களும் தேர்தல் பிரசாரத்துக் காக நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். அத்தனை சபைகளையும் அரசு கைப்பற்றியாக வேண்டும் என்று முழு முனைப்புடன் செயற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. வெல்வதற்காக என நடத்தப்பட்ட தேர்தல்களின் வரிசையில் இதுவும் ஒன்றாக அமையக்கூடும். இத்தகைய உத்வேகத்தோடும் ஆக்ரோஷத்தோடும் இவர்கள் ஏன் வேலை செய்கின்றார்கள் என அறிவது இங்கு தேவையானதாகும். அரச ஆதரவுக்




கட்சிகள் மற்றும் குழுக்களின் சலுகைகள், மானியம், பாதுகாப்பு என்பன கேள்விக் குறியாகி அதன் தலைவர்கள் கிழக்கில் கருணா எப்படி அரசினால் அவமதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றாரோ. அத்தகைய ஒரு சூழ்நிலை வடக்கிலும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பது ஒரு பிரதான காரணமாகும். அதைவிட முக்கியமான தேவை தொடர்ச்சியாக வடபகுதி மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு காண்பித்த ஆதரவால், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதை தகர்த்துக் கொள்ளல் என்பன ஏனைய காரணங்களாகும்.

**தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைபைத் தவிர வேறு தெரிவு உண்டா?**

தொடர்ச்சியான கொலை, கொள்ளை, அடாவடித்தனங்கள், அடிவருடித்தனங்கள், காட்டிக் கொடுத்தல்கள் என்பனவற்றின் மூலம் மக்களது ஜனநாயக உரிமைகளைத் தொடர்ந்து பாதித்துக்கொண்டிருக்கும் அரச ஆதரவுக் கட்சிகளைத் தெரிவுசெய்தால் தமிழ் மக்களுக்கு எதிரான நிரந்தரமான பெரு நட்டம் தவிர்க்க முடியாது. மறுபுறத்தில் உள்ளூராட்சி மட்டத்திலும் தமது நடத்தையால் முன் மாதிரியாகத் திகழும் ஏனைய திறமை மிக்கவர்களைத் தெரிவு செய்து உள்ளூர் மட்டத்தில் நல்ல முறைமையை நிறுவும் வாய்ப்பு தவறவிடப்படும். வரலாறு இன்னும் பின்தள்ளப்படும். இவை எல்லாவற்றையும் விட அனுபவம், விலை போகாத் தன்மை, கொள்கைப் பிடிப்புக் கொண்ட தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேச்சு வார்த்தைகளில் சரியான, உறுதியான நிலைப்பாடுகளை எடுக்க அவர்களுக்கு எமது ஒப்புதலைத் தருகின்ற வகையில் இந்தத் தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

நாட்டின் அபிவிருத்தித் திட்டமிடலின் அடித்தளமாக உள்ளூராட்சி மன்றங்கள் மாறிவருகின்றன என்பதை கவனத்துக்கெடுத்தால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் முக்கியத்துவம் உணரப்படும். தமிழரசுக் கட்சியோ. தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அபிவிருத்தியை எந்தக் காலத்திலும் புறக்கணித்தவை அல்ல. மாறாக அபிவிருத்தியில் ஆழமான அக்கறையுள்ள காரணத்தினால் அரசியல் உரிமைப் போராட்டங்களில் நீண்ட காலமாக ஈடுபட்டு வருகின்றோம். அதன் ஒரு படியாகவே இந்தத் தேர்தலை நாம் எதிர்கொள்கிறோம்.

தென்னிலங்கை அரசியல் கட்சிகளும், பேரினவாதக் குழுக்களும் எம்மினத்துக்குச் செய்த அழிவுகளை நாம் மறக்கக்கூடாது. அவர்களது அரசியல் உபதேசம் எமக்கு வேண்டாம். நமக்கு நாமே திட்டமிட்டு செயற்படக்கூடிய ஆற்றலுள்ளவர்கள் என்பதை இந்தத் தேர்தல் மூலம் நிலைநிறுத்த வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர வேறு எவரையும் தெரிதல் மூலம், ஆயிரக்கணக்கில் தம் உயிரை வழங்கிய மக்களின் அரசியல் வேட்கை அறுபடும்.

சர்வதேச மட்டத்தில் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்பவர்களின் ஏற்புடைத் தன்மை உடைபடும். இதன் மூலம் வடக்கில் Quisling ஆட்சி தொடர்ந்து நடைபெறும். முள்ளிவாய்க்கால் படுகொலை நடக்கும்போது, ஜெனிவா சென்று மனிதாபிமான நடவடிக்கை நடைபெறுகின்றது என்றும் தேர்தல் முடிவடைந்த பின்னர் மக்களை அரசு கொலை

**சீ.வி.கே.சிவஞானம்**

செய்யவில்லை என்றும் கூறிய ஜனநாயக விரோத செயற்பாடுகள் மேலும் பலம்பெற்று ராணுவ ஆட்சி தொடர்ந்து நடைபெற வழிபிறக்கும். அடக்கு முறை, ஆள்கடத்தல், காணாமற்போதல், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, அடாவடித்தனம் ஆகியன தொடரும். தீர்வுத் திட்ட முன் மொழிவுகள் சீர் குலை யும்.

எனவே கற்றோரும், மற்றோரும், மூத்தோரும், இளைஞர்களும், யுவதிகளும், வர்த்தகப் பெருமக்களும், உழைக்கும் வர்க்கத்தினரும் அரசு சார்பானவர்களின் வாக் குறுதிகளிலும் நம்பிக்கை கொள்ளாது தவறுகளைச் சுட்டிக்காட்டத் தைரியம் இல்லாதவர்களை நம்பும் நிலைமையைத் தவிர்த்து, நேர்மையான, கண்ணியமான தமிழின தனித்துவ பேணலுக்கான எதிர்காலத்துக்காக வடக்கு உள்ளூராட்சித் தேர்தலில் தமது பொன்னான வாக்குகளை பொறுப்புடன் வழங்க வேண்டும். ✱

# எம்மவர் திருமணங்களும் காலமாற்றங்களும்

தமிழர் தமது பண்பாட்டு மரபில் திருமணம் மனித வாழ்வின் நீடித்த தன்மைக்கு உதவும் ஒன்றாக உள்ளது. திருமணம் தொடர்பாக எம்மவர் கடைப்பிடித்த ஒழுங்குமுறைகளும் காலமாற்றத்தால் பெரிதும் மாற்றமடைந்து உள்ளன.

கடந்த இருபது வருட காலப் பகுதியிலேயே பெரும் மாற்றங்களைக் கண்டுள்ளோம். அதற்கு முந்திய காலப் பகுதியில் 1980 ஆம் ஆண்டுக்கு முன் யுத்தத்தின் சத்தங்கள் பெரிதும் கேட்காத காலப் பகுதியைப் பார்ப்போம்.

அந்தக் காலப்பகுதியில் இரவுநேரத் திருமணங்கள் தான் கூடுதலாக இடம்பெற்றன. திருமணம் மணமகள் வீட்டில் அல்லது கோயிலில்தான் நிகழும். திருமணம் நடைபெறப்போகும் வீட்டில் பந்தல் போடுதல், பலகாரம் சுடுதல் போன்ற சடங்குகள் ஆரவாரமாக ஆரம்பமாகும். பந்தல் போடுவதற்கென தயாரிக்கப்பட்ட பந்தல் கால்கள், மரங்கள் ஊரில் சிலரிடம் இருக்கும். அவற்றைப் பெற்றுப் பந்தல்போடும் நிகழ்வை அந்த வீட்டாரின் உறவுகள் சில நாள்கள் முன்பாகவே ஆரம்பிப்பார்கள். பந்தல் உயரமாகப் போடப்பட்டு கிடுகால் வேயப்படும். அதற்குரிய அலங்காரங்கள் செய்யப்படும். பலகாரம் சுடுவதற்காக சுற்றத்தார், அயலவர் அந்த வீட்டில் கூடுவார்கள். எமது பாரம்பரியம் வழிவந்த அரிசிமாவினால் பெரிதும் செய்யப்படும் போசனைப் பெறுமானமுள்ள பலகாரங்களே செய்யப்பட்டன. பந்தல் போடுதல், பலகாரம் சுடுதல் ஆகியவை உறவுகள் இணைந்த ஒரு சந்தோஷச் சங்கமமாகவே இருக்கும். திருமணம் இரவு நேரத்தில் நிகழ்ந்து மணமக்களை பெற்றோமக்ஸ் ஏந்தியவாறு வெளிச்சத்தில் ஊர்வலமாக அழைத்துச் செல்வார்கள்.

## வீடியோக்காரனின் எண்ணப்படிதான் எல்லாமே!

காலம் உருண்டோடியது. யுத்தம், இடம்பெயர்வு, நாகரிக மாற்றம், பண வசதிகளின் உயர்வு திருமண நடைமுறைகளையும் பெருமளவில் மாற்றி விட்டன.

பந்தல் கால்களும், கிடுகுகளும் காணாமல் போகத்

**வே.தபேந்திரன்**

தகரப்பந்தலும் நவீன சோடனைகளும் அந்த இடத்தைப்பிடித்தன. இது ஓர் இடைக் காலமாகும்.

இப்போதெல்லாம் ஊருக்கு ஊர், கோயிலுக்குக் கோயில் திருமண மண்டபங்கள் வந்துவிட்டன. மாளிகை மாதிரி வீடும், பெரிய வளவும் வைத்திருந்தால் கூட திருமண மண்டபத்தில் செய்தால்தான் மதிப்பார்கள். வீட்டில் திருமணம் நிகழ்ந்தால் நாகரிகம் தெரியாதவர்கள் என்ற நினைப்பும் பலரிடம் வந்து விட்டது.

பலகாரம் சுடுதல் என்பது சிறிய நிகழ்வாகி விட்டது. பாரம்பரியப் பலகாரங்கள், குடிபானங்கள் மதிப்பிழந்து போய்விட்டன. போசனைப் பெறுமானங்கள் பற்றிக் கவலைப்படாது உடனடிப் பண்டங்கள் ஆக்கிரமித்துக் கொண்டன. வீடியோப் படப்பிடிப்பாளர்களின் எண்ணப்படிதான் சடங்குகளின் அணி வகுப்பும் இடம்பெறுகின்றன. மணமகனின் பட்டுவேட்டியில் மட்டுமன்றி மணப்பெண்ணின் கூறையிலும் காலமாற்றம் வந்து விட்டது. மணமக்களை வாழ்த்தி டிஜிற்றல் பனர் கட்டுதல், வாழ்த்துக் கொடுத்தல் வந்து விட்டது.பத்திரிகை, இணையத்தளங்களிலும் வாழ்த்துத் தெரிவிக்கும் வழக்கமும் பரவலாகின்றது. திருமணம் முடிந்த பின் வரவேற்பு உபசாரம் கட்டாயச் சடங்கு போலாகி விட்டது. வாழையிலையில் மட்டும் உணவு பரிமாறிய முறை போய் தட்டிலும் உணவு பரிமாறப்படும் முறை சாதாரணமாகிவிட்டது.

மணமகன் வெளிநாட்டிலிருக்க மணமகளாக வெளிநாடு செல்லவுள்ள பெண்ணை மட்டும் வைத்து இங்கு கொண்டாடிய நிகழ்வுகளும் 1990களில் பரவலாக நிகழ்ந்தன. வெளிநாடு செல்லவுள்ள பெண்ணுக்கு மணமகள் அலங்காரம் செய்து மணமகனின் சகோதரியைத் தோழியாக அலங்கரித்துக் கொண்டாட்டம் ஒன்று நிகழ்ந்தது.

வெளிநாடு செல்லவுள்ள அந்தப் பெண்ணுடன் இரு வீட்டாரும் இணைந்து புகைப்படம், வீடியோ எடுப்பார்கள். மணமகனின் இல்லத்தில் மணமகள் சிலநாள் வைத்து உபசரிக்கப்படுவார்.

பின்பு வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார். இதுவும் ஓர் வகைப் பண்பாடாக இப்பொழுதும் ஆங்காங்கே நிகழ்கின்றது. எளிமையாகத் திருமணங்கள் நடந்தகாலம் போய் ஆடம்பரங்கள் கொலுவிருக்கும் பண்டிகைகள் போலாகிவிட்டது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சித் தோட்டம்

# அருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான

## பஞ்சகுண்ட பக்ஷ புனராவர்த்தன

## மஹாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை





### தேவஸ்தான பிரதமகுரு வேதாகம கிரியா கலாமணி சிவாகமகிரியா திலகம் பிரம்மஸ்ரீ ச.மு. ரவிக்குருக்கள் அவர்களின் வாழ்த்துச் செய்தி

சமயமும் சமய சாதனங்களும் முக்திக்கு வழிகாட்டுவனவாம். ஆலயங்களில் நடைபெறும் வைபவங்கள் அனைத்தும் ஒருவனை நல்வழிப்படுத்துவன. மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயத்தானும் அரனெனத் தொழுமே? என்பது சிவஞானபோதம். ஆலயத்தை முறைப்படி கட்டியமைத்து திருவருள் நிரம்பச் செய்வதே மஹாகும்பாபிஷேகம். நம்மவர்கள் பக்குவத்திற்கேற்ப இறைவன் எழுந்தருளி வந்து திருவருளைத் தருகின்றான்.

பரம்பொருளாகிய இறைவன் பற்பல மூர்த்திபேதங்களாக வடிவங்கொண்டு உலகை இரட்சிப்பதே இறைவனுடைய திருவுளப் பாங்காகும். ஒவ்வொரு மூர்த்தத்துக்கும் வரைவிலக்கணம் அமைந்தமையும் சைவத்தின் தனிச்சிறப்பாகும். அடியவர்கள் மீது நிறைந்த பெரும் கருணையினால் கோயில் கொண்டு எழுந்தருளும் இறைவனது திருவருள் குறைவின்றி நிறைவாகப் பொலிந்து விளங்கும் பொருட்டு செய்யப்படும் வழிபாட்டின் தொகுப்பே மஹாகும்பாபிஷேகம் எனப்படும். வழிபட்டுவரும் ஆலயங்களை புனருத்தாபனம் செய்வது கிடைக்கமுடியாத பெரும் புண்ணியமாகும். ஆலய கட்டடங்கள், தூபிகள் பழுதடைதல் அஷ்டபந்தனம் பழுதடைதல், என்பன வழிபாடு செய்யும் கோயில்களில் ஏற்படும் குற்றங்களாகும்.

இதை நிவர்த்தி செய்தல் அடியவர்களது பெரும் தொண்டாகும். நல்லதொரு சுபமுகூர்த்தத்தில் மந்திரபூர்வமாக பூஜிக்கப்பட்ட கும்பநீரை அபிஷேகம் செய்தலே கும்பாபிஷேகமாகும். அதன் மகத்துவம் முழுவதும் அபிஷேகத்தின் முன் அது அமைந்த இடத்திலே பூஜிக்கப்படும் வழிபாட்டில் தங்கியுள்ளது. அந்த அருமையான இடம்தான் மஹா யாகசாலை, அனைத்து விதமான கிரியைகளும் இந்த யாகசாலையை மையமாகக்கொண்டுதான் செய்யப்படும். மஹா யாகத்தின் அமைப்புகள் குண்ட அமைவுகள் வேதிகை அமைவுகள் காமிக ஆகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. மஹா கும்பாபிஷேகத்தில் கடஸ்தாபனம் எனும் கிரியையில் மந்திர பூர்வமாக அமைக்கப்படும் கும்பம் எந்தத் தெய்வ வடிவையும் ஆவாகிக்கக் கூடியதாக அமைந்துள்ளமையாகும்.

எமது அடியவர்களின் சமய அனுஷ்டானங்களில் அக்கினி வழிபாடு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இவை பஞ்சபூத வழிபாட்டில் தனி இடத்தைப் பெற்றுள்ளது. இந்தளவு சிறப்புக்கள் வாய்ந்த மஹா கும்பாபிஷேகம் இன்று வட்டு.வடக்கு பிரமனாச்சித் தோட்டம் கற்பக விநாயகப் பெருமானுக்கு நடைபெறுகின்றது.

தேவஸ்தான முதல்வர் புண்ணியமூர்த்தி குடும்பத்தினர்கள் தேவஸ்தான மஹோற்சவ விழா உபயகாரர்கள், சதுர்த்தி உபயகாரர்கள், மீள அடியவர்கள் அனைவரினதும் விடாமுயற்சினால் குறுகிய நாள்களில் பாலஸ்தாபனம் நிகழ்ந்து திருப்பணி நடந்து இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

தூய வடிவான ஸ்தூபி அபிஷேகம், மூலமூர்த்தி அபிஷேகத்தைத் தரிசிக்கப்பெறும் அடியார்கள் அனைவரும் சகல நன்மைகளையும் பெறுவார்கள்.

கற்பக விநாயகப் பெருமானுடைய கும்பாபிஷேக கைங்கரியங்களைப் பக்தியுடனும் பணிவுடனும் தன்னலமற்ற சேவையுடன் நடத்தி வருகின்ற தர்மபரிபாலகர்கள், அடியார்களுக்கும் எல்லாம்வல்ல துங்கக் கரிமுகத்து தூமணிப்பெருமானுடைய திருவருள் நிறைவாகக் கிடைக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்தக் கும்பாபிஷேகத்திலே கலந்துகொண்ட சர்வபோதக சிவாச்சாரியார்கள், சர்வ சாதக சிவாச்சாரியார்கள், ஆலய அர்ச்சகர், யாக சம்ரச்சகர்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்புடன் நடைபெறும், கும்பாபிஷேக வைபவத்தின் பலன் எல்லோருக்கும் நிறைவாகக் கிடைக்கவேண்டி கற்பக விநாயகர் திருவடித் தாமரைகளைப் பூஜித்து எனது மனப்பூர்வமான நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*லோகா சமஸ்தா சுகினோ பவந்து.*

### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



வளம் நிறைந்த திருவூர் வட்டுக்கோட்டை இந்தத் திருவூரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் பிரமனாச்சித் தோட்டக் கற்பக விநாயகப் பெருமானின் திருவருள் பெருமைக்குரியது. இந்தத் திருக்கோயிலோடு கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலம் தொடர்பு கொள்ளக்கூடிய பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகங்கள், சித்திரத்தேர் வெள்ளோட்டம் மற்றும் பல சிறப்பு வைபவங்களில் கலந்து கொண்டு உரையாற்றி வழிபாடு செய்தமை மறக்கமுடியாது. துரிதகதியில் தெய்வீக வளர்ச்சி கண்ட இந்தக் கோயிலை நன்முறையில் சித்த வைத்தியர் பரிகாரியார் அமரர். புண்ணியமூர்த்தி அவர்களின் குடும்பத்தவர்கள் பரிபாலித்து வருவது குறிப்பிடத்தக்கது. காலந்தவறாது பூசை மற்றும் சிறப்பு விழாக்கள் திருக்கோயிலை மேன்மைப்படுத்தியுள்ளமை அனைவரும் அறிந்ததே. இந்த ஆலயம் சார்ந்த அடியவர்களின் ஒற்றுமையும், நிறைந்த பக்தியும் திருக்கோயிலின் உன்னத வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளமை குறிப்பிடவேண்டும். அருள் நிறைந்த கற்பகவிநாயகர் திருக்கோயில் பல்வேறு திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். மஹா கும்பாபிஷேகத்தோடு இந்தத் திருநாடு நீதிநெறியோடு நிம்மதியோடு திகழப் பிரார்த்தித்து அடி யார்களுக்கு நல்லாசியும் வாழ்த்தும் கூறி அமைகிறேன்.

*"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"*

ஆறு. திருமுருகன், தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தலைவர் சிவபூமி முதியோர் இல்லம், தொல்புரம்.

### அற்புதம் நல்கும் கற்பகன்

பழைமையும் பெருமையும்மிக்க அருள்மிகு பிரமனாச்சித் தோட்டத்துக் கற்பகப் பிள்ளையாரின் கும்பாபிஷேகப் பெருவிழா, அருள்பாலித்த கற்பனைப்போற்றி வணங்குகின்றோம்.

நாச்சியார் அம்மையாரால் வழிபாடு செய்யப்பட்டு பெருவளர்ச்சி பெற்றிருக்கும் இந்த ஆலயம் அவரின் வழித்தோன்றல்களால் பக்தியோடு போற்றிப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. எமது தந்தையார் சித்த வைத்தியர் அமரர் ஆறுமுகம் புண்ணியமூர்த்தி அவர்களது காலத்தில் 1964 இல் இந்த ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்பின்னர் 01.06.1987 இல் பிரமஸ்ரீ சி.சர்வேசரக்குருக்கள் [மயிலணி, சுன்னாகம்] அவர்கள் மஹாகும்பாபிஷேக பெருவிழாவை நடத்தி வைத்து அடியவருக்கு கற்பகக் கணேசனின் திருவருளைக் கிடைக்கச் செய்தார். இந்தக் காலப் பகுதியில் நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவினாலும் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது. இந்தக் கும்பாபிஷேகத்தின்போது பிரதான தூபி இரட்டைப் பஞ்சாங்கமாக நிர்மாணிக்கப்பட்டது, குறிப்பிடத்தக்கது. இந்த அழகிய வேலையை எமது ஊர் சிற்பக்கலைஞர் சிற்பக் கலாமணி திரு.ச. கணேசமூர்த்தி அவர்கள் பக்திப்பரவசமிக்கதாக நிறைவேற்றித்தந்திருந்தார். இதற்கு 12 ஆண்டின் பின் 04.07.1999 இல் சிவஸ்ரீ ச.மு. பாஸ்கர [ரவி] குருக்கள் அவர்களால் மஹா கும்பாபிஷேகம் நடத்தி வைக்கப்பட்டது. இந்த விழாவின்போது யாகசாலை, கொடிக்கம்பம், கட்டுத்தேர் என்பன அமைக்கப்பட்டன. சிவஸ்ரீ ச.மு.பாஸ்கர[ரவி] குருக்கள் அவர்களின் நல்லாசியுடனும், நல்வழிகாட்டலுடனும் இந்த ஆலயம் பெருவளர்ச்சி கண்டு வருகின்றது. அவன் அருளால் 2004 இல் புதிய சித்திரத்தேரில் எம்பெருமான் பவனி வரும் காட்சியையும் கண்குளிர கண்டு மகிழ்ந்தோம். 03.07.2011 இல் மஹா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ ச.மு. பாஸ்கர [ரவி] குருக்கள் அவர்களால் நடத்த திருவருள்பாலித்த கணேசனைத் தொழுது வணங்குகின்றோம்.

ஆலய எழுச்சிக்குப் பங்கேற்கும் ஆலயகுரு ஏனைய சிவாச்சாரியார்களை வணங்கி மகிழ்வடைகின்றோம். ஆலய வளர்ச்சியில் பெரும் பங்காற்றும் விநாயகன் அடியார்களையும் வாழ்த்துகின்றோம். எம் வாழ்வில் கிடைத்தற்கரிய மஹா கும்பாபிஷேகப் பேற்றினைத் தந்த கற்பகப் பிள்ளையாரைப் போற்றி வணங்குகின்றோம்.

*"எல்லாம் அவன் செயலே"*

தேவஸ்தான முதல்வர்.

**கே.எஸ்.பாக்கியலக்சுமி**
ஜொயினரி வேக்ஸ்
பதிவு இல: வி.டபிள்யூ/எவ்.ஐ.என்/ஆர்/ஐ/12/2000
டச்சு வீதி, தொல்புரம் கிழக்கு. சுழிபுரம், யாழ்ப்பாணம்.

**THARAN TRADERS**
130, St.ROAD,
JAFFNA.
T.P: 0212222664, 7184

உ
ஓம் மஹாகணபதி துணை
விநாயகர் மர அரிவு ஆலையும் மர வியாபாரமும்
VINAYAGAR SAWING TIMBER WORK
Tholpuram East, Chulipuram.
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

With best compliments from...!
**KAJAMUGAN HARDWARE**
கஜமுகன் ஹாட்வெயர்
கட்டடப் பொருள்கள், கம்பி வகைகள், சீமெந்து, PVC பைப் வகைகள், பெயின்ற் வகைகள், Mecson Mesh நெற் வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
147, 149 STANLEY ROAD, JAFFNA
TEL: 0212222833
FAX: 0212222368
147, 149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Aum
PAKIYARATNAM HARDWARE STORES
பாக்கியரத்தினம் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
163, 165, Main Street,
Chankanai.
T.P: 0213212713

**சாரகாஸ் சென்ரர்**
789, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
சகல விதமான சமையல் அறை, மின்சார உபகரணங்களையும் அதற்கான உதிரிப்பாகங்களையும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தை வன்னியில் முன்னெடுக்க நடவடிக்கை

கிளிநொச்சி, ஜூலை 3

அரச ஓய்வூதியர்களின் பகிரங்க சேவை நம்பிக்கை நிதியத்தைக் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளில் இந்தப் பிரதேச ஓய்வூதியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அகில இலங்கை பகிரங்க சேவை நம்பிக்கை நிதியம் ஆரம்பிக்கப்பட்டு பத்தாவது ஆண்டு விழா மிக அண்மையில் கொழும்பில் கொண்டாடப்பட்டது.

அதன் போது வெளியிடப்பட்ட மலரில் மேற்படி மாவட்டங்களில் இந்த நிதியத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமை பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டது. ஓய்வூதியர்களுக்கு நன்மையளிக்கக் கூடிய நிதியத்தின் செயற்பாடுகளை வன்னிப் பிரதேசத்தில் ஆரம்பிப்பதற்கு சமூக சேவையில் ஆர்வமுள்ள ஓய்வூதியர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.


இலங்கையில் 2001 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதியர்களுக்கு நன்மை வழங்கும் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்ட போதும் யாழ். மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு தான் ஆரம்பிக்கப்பட்டது.

ஆயினும் மிகக் குறுகிய காலத்தில் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் இதில் இணைந்துள்ளனர். அரசு ஓய்வூதியர்களின் நன்மை கருதித் தனது நிதிப் பங்களிப்பை மேற்கொண்டு வருகின்றது.

இதன் மூலம் எந்தவொரு ஓய்வூதியரும் மாதாந்தம் இருபது ரூபா செலுத்தி இதில் இணைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றமைக்கான கொடுப்பனவு, கண்வில்லைக் கொடுப்பனவு, மிகக்குறைந்த வட்டியில் பத்தாயிரம் ரூபா கடன், பிள்ளைகள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானால் கல்விக்கான நன்கொடை, மரணப் பணிக்கொடைக் கொடுப்பனவு போன்ற நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நன்மைகளை வன்னிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கும் பெற்றுக் கொடுக்கவே இந்த நிதியத்தின் கிளைகளை ஆரம்பிக்கும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-121)

## சேவையே கண்...




ஓயாத கரங்கள்: திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தின் கட்டடமொன்றைப் புனரமைத்து வழங்கும் நடவடிக்கைகளில் சேவாலங்கா நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

# வருடாந்த மகோற்சவம்

வவுனியா, ஜூலை 3

வவுனிக்குளம், சிவபுரம் சிவன் கோயிலின் வருடாந்த மகோற்சவம் சென்ற 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை மறுதினம் 5 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 6 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், 7 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட இந்தக் கோயிலின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-121)

# உல்லாசப் பயணிகளை கவர்ந்திழுக்கும் மன்னாரிலுள்ள பெரிய பெருக்க மரம்




மன்னார், ஜூலை 3

மன்னார் பள்ளிமுனைக் கிராமத்தில் பெரிய பெருக்கமரம் ஒன்று காணப்படுகின்றது.

பயோப்பா என அழைக்கப்படும் இந்த மரம் பருமனில் பெரிதாகக் காணப்படுகின்றது. இந்த மரத்தை பள்ளிமுனையில் வாழ்கின்ற மக்களும் அங்குள்ள கத்தோலிக்க தேவாலயமான சென். லூசியா ஆலய நிர்வாகிகளும் பராமரித்து வருகின்றனர்.

இந்த மரம் சுமார் இருபது மீற்றர் சுற்றளவும் எட்டு மீற்றர் உயரமும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இந்த மரக்கிளைகளைக் குதிரைகளுக்கான உணவுக்கென அரேபியர்கள் கொண்டு வந்தபோது அவற்றிலிருந்து வீழ்ந்து முளைத்த விதையிலிருந்து இந்த மரம் முளைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மரத்தை மன்னாருக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

ஆனால் இதனைப் பாதுகாப்பதற்கு அரசு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (க-601)

# சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் பாடசாலை அதிபர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 3

பாடசாலை நேரத்தில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் சிறுமியைத் தனது அலுவலகத்துக்கு அழைத்து பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டார் என்ற சந்தேகத்தில் அதிபர் ஒருவரைச் செட்டிகுளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

செட்டிகுளம் கன்னாட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் 7 வயதுச் சிறுமி அதே பாடசாலை அதிபரால் நேற்று முன்தினம் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டார்.

அதிபர் அந்தச் சிறுமியைத் தனது அலுவலகத்துக்கு அழைத்து இவ்வாறு நடந்து கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினர் இந்த விடயம் தொடர்பாக செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்தனர்.

அதை அடுத்து பாடசாலை அதிபரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

(க-14)

# மல்லாவி மத்திய கல்லூரியில் உள்ளக விளையாட்டு அரங்கு

மல்லாவி, ஜூலை 3

மல்லாவி மத்திய கல்லூரியில் சகல வசதிகளையும் கொண்ட உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்று கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர்கள், மாணவர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. வடமாகாண உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் சத்தியபாலன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சிமுகாமை கலாநிதி நா. எதிர்வீரசிங்கம் வழிநடத்தினார். தேசிய விளையாட்டு வீராங்கனை சுசந்திகா இதில் கலந்து கொண்டு பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

இந்தப் பயிற்சிக்கான உபகரணங்களை வடமாகாண ஆளுநர் தமது நிதி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கியிருந்தார். இந்தப் பயிற்சி முகாமின் இறுதியில் துணுக்காய் கல்வி வலயத்தினர் இங்கு பயன்படுத்திய உபகரணங்களை மல்லாவி மத்திய கல்லூரிக்கு வழங்கியதால் இந்த உள்ளக விளையாட்டு அரங்கு திறந்து வைக்கப்படுவது சாத்தியமாயிற்று.

இந்த நிகழ்வில் துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர் அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விளையாட்டு அரங்கைத் திறந்து வைத்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் செ.அரவிந்தன், பழைய மாணவர் சங்கச் செயலாளர் நா.துளசிதாஸ் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (க-425)

# 22 ஆயிரத்துப் பத்து வெடிபொருள்கள் அகற்றப்பட்டதாக டாஷ் நிறுவனம் அறிவிப்பு



கிளிநொச்சி, ஜூலை 3

கிளிநொச்சி, கண்டாவளை, ஆனையிறவு ஆகிய இடங்களில் இதுவரை 22 ஆயிரத்துப் பத்து வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளதாக வெடிபொருள்களை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள டாஷ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி ஆனையிறவு, கண்டாவளை, பெரியகுளம், பிரமந்தனாறு, புளியம்பொக்கணை ஆகிய பகுதிகளில் இனங் காணப்பட்ட வெடிபொருள்கள் ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் அரசுகளின் நிதியுதவியுடன் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதிகளில் இதுவரை 243 மிதிவெடிகளும், வெடிக்காத நிலையில் காணப்பட்ட ஆட்லறி எறிகணைகள், சிறிய மற்றும் நடுத்தர எறிகணைகள், கைக்குண்டுகள் என 157 வெடிபொருள்களும் 21 ஆயிரத்து அறுநூற்றுப் பத்து துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டு அவையாவும் பாதுகாப்பான முறையில் அழிக்கப்பட்டதாகவும் டாஷ் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

(க-6)

# நீர்ப்பாசனப் புனரமைப்பு வேலைகள்

வவுனியா, ஜூலை 3

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடக்கு மாகாண சபையின் மூலம் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் பல நீர்ப்பாசனப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை அரசினது நிதி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் ஆகியவை மூலம் மூர்ண். பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகாலக் கருத்திட்டத்தின் கீழ் இந்த வேலைகள் நடைபெறவுள்ளன.

இவற்றுக்கான கேள்வி கோரல்களை மேற்கொள்ள முடியுமென திட்டப் பணிப்பாளர் எந்திரி சோ. சிவபாதம் அறிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் வேலன்குளம் நீர்ப்பாசன அணைக்கட்டு வேலை, வாய்க்கால் புனரமைப்பு, பெரிய தம்பனைக் குளத்தின் நீர்ப்பாசன அணைக்கட்டு வேலை, நீர்ப்பாசன வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் என்பன நடைபெறவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மருதன்குளம் நீர்ப்பாசன அணைக்கட்டு வேலை, நீர்ப்பாசன வாய்க்கால் புனரமைப்பு வேலை என்பனவும் நடைபெறவுள்ளன. (க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் பாலசுப்பிரமணியம்



யாழ்ப்பாணம், கந்தர்மடம், பெருமாள் கோயிலடி, ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் 23.06.2011 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - அரியரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் பத்மா (கனடா), பத்மன் (கனடா), ராஜன் (ஜேர்மனி), சீலன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகன் (கனடா), கார்த்திகா(கனடா), நிரஞ்சனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான திருமதி வேலாயுதம், இரட்ணசிங்கம், இராமநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும் மகேஸ்வரி (கனடா), மலர்வதி, சற்குணதேவி (இலங்கை), தெய்வேந்திரராஜா, ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கந்தையா, தில்லைநாதன் மற்றும் ஜெகநாதன் (இலங்கை), பரமேஸ்வரி (ஜேர்மனி), ரஞ்சா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகலனும் அவினேஷ் (கனடா), பிரவின் (கனடா), ஹரேஷ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று St. John's Norway Cemetery Crematorium, 256 Kingston Road, Toronto, M4L 1S7 இல் பி.ப. 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:

மோகன்
(Simcoe Auto Group Owner Sutton)
கனடா, தொ.பே: +16477090285
பத்மா (மகள்) கனடா
தொ.பே: + 14168465657
செல்லிடப் பேசி: +14167248118
பத்மன் (மகன்) கனடா
தொ.பே: +16472800889
ராஜன் (மகன்) ஜேர்மனி
தொ.பே: +4915203551696
சீலன் - ஜேர்மனி
தொ.பே: +4971191245000

(சி/1324)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பொருள் காண்பது அறிவு - ஆன்மிகம்




இலக்கியக் காட்சி - 92

தெய்வப்புலவர் அறத்துப்பாலில் இல்லறம், துறவறம் இரண்டுக்கும் பொதுவான ஒழுக்கமுறை களைப் பற்றிக் கூறிய பின் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் வீடுபேற்றுக்கு நிமித்த காரணமாகச் செவ்விய பொருளைக் காண்பதே மெய்யுணர்வு என இலக்கணங் கூறுகின்றார்.

*''எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு''* [குறள் 355]

உலகத்தார் எந்தப்பொருளுக்கும் ஏதோ ஒரு தன்மையைக் கற்பித்துக் கூறிக் கொள்வார்கள். ஆயினும் நாம், கற்பனை களைக் கழித்து மிகுதியாக நிற்கும் உண்மைப் பொருளைக் காணவேண்டும்; அதுவே மெய்ப் பொருள் என்பது தெய்வப்புலவரின் அறிவுரையாகும்.

இங்கே ஆன்மிக தத்துவம் கூறப்பெற்றிருப்பது உணரத்தக்கது. பிறவியை ஒழித்து வீடுபேறு அடைவதற்குரிய வழிகளைச் சந்தேக விபரீதமின்றி உணர்ந்து கொள்வதற்கு இந்த மெய்யுணர்தல் அதிகாரம் பாடப் பெற்றிருக்கிறது.

'இருள்சேர் இருவினை' இவ்வுலகில் பிறவியெடுப்பதற்குக் காரணமாய் அமைகிறது எனக் கடவுள் வாழ்த்திலேயே கூறியுள்ள தெய்வப்புலவர்,

*''இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி*
*மாசறு காட்சியவர்க்கு''* [குறள் 352]

என மெய்யுணர்தல் அதிகாரத்தில் ஞாபகப்படுத்துதலைக் காணலாம். மாயை என்னும் மருள்நீங்கப் பெற்ற மெய்யுணர்வாளருக்கு இருள் என்னும் நரகம் நீங்கிப் பேரின்பம் கிடைக்கும் என்கிறார்.

இந்த நில உலகிலும் பார்க்க வீட்டுலகம் மிகவும் அண்மையானது மெய்யுணர்வாளருக்கு என்கிறார்.

நாம் காணும் பொருள் பாம்போ, கயிறோ எனத் தெரிந்து கொள்ளாத நிலை மயக்கம்; கயிற்றைப் பாம்பென நினைப்பதும் பாம்பைக் கயிறென எண்ணு வதும் விபரீதம்; பாம்புதான் அல்லது கயிறு தான் என உண்மையை அறிவது மெய்யுணர்வாகும். அதுவே மெய்ப்பொருள்.

இதுபோலவே, மயக்கம், விபரீதம் இன்றி மெய்ப் பொருளாகிய இறைவனை அடைவதற்கு, பேரின்பம் பெறுவதற்கு ஆன்மாக்கள் முயலவேண்டும்.

மெய்ப்பொருள் எதுவென்ற மெய்யுணர்வு பெறுவதற்குச் சில எடுத்துக் காட்டுகளைப் பார்ப்போம்.

குருஷேத்திரப் போர்க்களத்திலே கிருஷ்ண பரமாத்மா சாரத்தியஞ் செய்யத் தேரில் யுத்தஞ் செய்ய வந்த அர்ச்சுணன், தான் வந்திருக்கும் நோக்கத்தை மறந்து ஏதோ மயக்கத்தில் நிற்கின்றான். அங்கே எதிரிகளாக நிற்பவர்கள் யார்? பெரிய தந்தையின் பிள்ளை கள்; மதிப்புக்குரிய வில்லாசிரியர் துரோணர்; பிதாமகன் பீஷ்மர்; சகோதரன் என்று அறியப்பெறாத கர்ணன் இவர்களைப் பற்றிய மெய்ப் பொருளைப் பகுத்தறிய வேண்டிய நிலையில் பார்த்தன் நிற்பது கிருஷ்ண பரம்பொருளுக்கு விளங்குகிறது.

துரியோ தனன் முதலியோர் சகோதரர் என்றாலும் இதுவரை சொல்லொணாத் துன்பஞ் செய்தவர்கள்; ஈ இருக்கும் இடந்தானும் பங்கு தரமாட்டோம் என்று இருப்பவர்கள். பெரியோர்களும் கர்ணனும் செஞ்சோற்றுக்கடன் கழிக்கத் தீமைக்குத் துணை செய்பவர்கள்.

தீயவர்களை அழித்தலும் நல்லவர்களைக் காத்தலுமே எனது அவதார நோக்கம். போர் என்று வந்து விட்டால் சொந்தம், பந்தம், வேண்டியோர், வேண்டாதவர் என எல்லாவற்றையும் எனது செயலாக விட்டுவிடு. உன் செயலாக எதனையும் எண்ணி மனதில் குழப்பங் கொள்ளாதே எனப் பகவான் கீதோபதேசஞ் செய் கிறார். பார்த்தன் மெய்யுணர்வு பெறுகிறான். போர் புரியத் தொடங்குகிறான்.

இன்னும் சந்திரனுக்குக் கலைகள் வளர்வதும் (வளர்பிறை), தேய்வதும் (தேய்பிறை) கற்பித்துக் கொள்கிறோம். ஆனால், சூரிய ஒளிபெற்றுப் பிரகாசிக்கின்ற சந்திரனைச் சுற்றுப்பாதையில் பூமி மறைப்பதால் சூரிய ஒளியைப் பெறாமல் வளர்வதும் தேய்வதும் போல நமக்குத் தெரிகிறது.

இது புவியியல் உண்மையாகும் என்ற மெய்ப் பொருளை நாம் அறி வோமாக.

மேலும் வட்டவடிவமாகக் காட்சி தரும் சூரியன்

மட்டுவில் நா. நல்லதம்பி

உண்மையில் வெப்பமான ஒளியைத் தருகின்ற கோள வடிவம் என்ற மெய்யுணர்வை நாம் அறிவோம்.

இவைபோன்று 'கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை' என்ற கற்பனை கலந்த தொடர் ஒரு மனிதனைக் குறிக்கின்றது. பொறுமை நிறைந்த பெருமைபெற்ற யானை போன்ற கூரிய பார்வையுடைய சேரவம்சத்து அரசன் என்பது எல்லாம் கற்பனைகள். அவற்றைக் கழித் தால் எஞ்சி நிற்பது மனித உடல்.

அதிலும் உடல் அழிந்துபோக, உயிர் மெய்ப் பொருளாகிய இறைவனோடு ஐக்கியமாகி விடுவது காண்போமாக.

எனவே எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதே அறிவு என்பது தெய்வப்புலவரின் அறிவுரையாகும். ✱

---

# வெள்ளைப் புறா ஒன்று

சிறுகதை



அப்படி நடக்கும் என்று யாரும் எதிர்பார்க்க வில்லை.

மகேசன் வந்த வேகத்தில் மதனுக்கு கன்னத்தில் விட்டார் ஓர் அறை. மகேசன் மதனின் உற்றார் உறவினரோ, அல்லது வளர்ப்புத் தந்தையோ அல்ல. மதன் வெறும் பதினொரு வயது மாணவன். புலமை பரிசில் தேர்வுக்குத் தோற்றிவிட்டு பெறுபேற்றை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மாணவன்.

மகேசன் அயலில் ஒன்பது பத்து வீடுகள் தள்ளி வசிக்கும் ஒரு ஒழுக்கசீலரான- சண்டை சச்சரவு எதற்கும் செல்லாத ஒரு பேர்வழி.

அவர், அதுவும் ஒரு சிறுவனுக்கு, அந்தச் சிறுவன் வீட்டிலேயே அவனின் பெற்றோருக்கு முன்னிலையில் வைத்துக் கன்னத்தில் அறைவதென்றால்....... மதனின் தந்தைக்கு ஆத்திரமென்ற ஆத்திரம். பக்கத்திலிருந்த ஒரு கொட்டன்தான் கையில் கிடைத்தது. எடுத்துவிட்டார் அடி மகேசனுக்கு. தடுக்கக் கையை நீட்டிய அவருக்குப் பலமான அடி. கை முறிந்து விட்டது.

அயலவர்களின் அவலக்குரல், விலக்குப்பிடிப்பு, ஆரவாரத்திற்கிடையே மகேசனின் மனைவியும் ஓடிவர, இழுபறிகளிடையே, வாய்த்தர்க்கம்; ஏச்சு, பேச்சு; சமரசப்படுத்துபவர்களின் விமர்சனம், விசாரிப்பு என ஒரே சந்தையாக சத்தம் எழுந்தது மதனின் வீட்டில்.

இதற்கிடையில் மகேசனின் ''ஒன்லி சண்''- ஒரே ஒரு தவப்புதல்வன் மயூரனும் அவ்விடத்துக்கு ஓடி வந்தான். மயூரனின் வலக்கண்ணின் இமை அருகாக இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. கண்ணடியும் வீங்கிப் போயிருந்தது. மயூரனுக்கும் பதினொரு வயதுதான். மதனுடன் கூடப்படிப்பவன்.

இந்த அடிபிடி சண்டை ஏற்பட்டதே மதன், மயூரனின் பிரச்சினையிலிருந்துதான். பிரச்சினை தோன்றியதற்குக் காரணமே ..... ஒரு புறா. அதுவும் வெள்ளைப்புறா ஒன்றிலிருந்துதான்.

மதன், மயூரன் குடும்பம் அந்தக் கிராமத்தில் ஒற்றுமையாக வாழ்ந்த குடும்பம். அதற்காக அவர்கள் நெருங்கிய சொந்தக்காரர் அல்ல. மதனும், மயூரனும் ஒன்றாக ஒரே பள்ளிக்கூடத்தில், ஒரே வகுப்பில் படிப்பதால் ஏற்பட்ட ஒரு பிணைப்பே இந்த இரண்டு குடும்பங்களுக்குமிடையே நெருக்கம் ஏற்படக் காரணமாகியது.

மகேசனின் அடி கொடி எல்லாம் அந்தக் கிராமம் தான். பிறந்தது, மணம் புரிந்தது, வாழ்ந்ததெல்லாம் அந்தக் கிராமத்தில் - அந்தத்தாய் வீட்டில்தான், மயூரன் - மகேசனின் ஒரே ஒரு தவப்புதல்வன் அவதரித்ததும் அந்த வீட்டில்தான். அதுவும் மணம்முடித்து பத்துப் பதினொரு வருடங்களின் பின் பிறந்தவன். அப்பொழுது மயூரனுக்குப் பத்து பதி னொரு வயதாகிவிட்டது. ஆயினும் அதன்பின் இன்னும் ஒரு பூச்சி புழுக்கூட மகேசனின் மனைவி யின் வயிற்றில் உருவாகவில்லை..

இதனால் மயூரன் செல்லமென்ற செல்லம். ''அந்தச் செல்லத்துக்கு'' மதன் தனது வீட்டில் வைத்துத் தடியால் அடித்து வலதுகண்ணருகே இரத்தம் சொட் டச் சொட்ட அலற வைத்தது. மகேசனின் ஆத்திரத்தைக் [illegible] ... ஒற்றைக் குருடாகவே காலம் காலமாக வாழ்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

ஒரே ஒரு செல்லத்துக்கு, அதுவும் எங்கேயோ இருந்து இடம்பெயர்ந்து வந்து- அடைக்கலம் தேடி ஓரிரு வருடங்களே இந்த மண்ணில் வாழ்ந்து வரும் மதன்- சின்னப் பொடியன் அடித்து- இரத்தக் காயம் ஏற்படுத்துவதென்றால்....

செல்லமாக வளர்க்கப்படுபவர்களிடையே ஒரு 'குறுகுறுத்த' தன்மை கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். மயூரன் படிப்பில் கவனம் குறைவு. அயற்பிள்ளைகள் புறா வளர்க்கவே, அடம் பிடித்து, புறா வாங்கித் தருமாறு கேட்டு வாங்குவித்தான். ஏழு எட்டுப் பெட்டிகள் கூடாக்கி அதில் ஒவ்வொரு கூட்டிலும் இரண்டு மூன்று சோடிப் புறாக்கள் வாங்கி வளர்த்தான்.

அவை பெருகவே, அதிலும் ஒரு 'பிஸினஸ்' புறாக்களைப் பறக்க விட்டால் இவை கரண மடிக்கும். கை தட்டினால் புறாக்கள் தாமாகவே வந்து அவனது தோளில் அமரும். வேறு புறாக்களையும் அவனது புறாக்கள் அழைத்து வரும். அழைத்து வரப்படும்

செ.செல்வநாதன்

புறாக்கள் மயூரன் கூட்டு வாசிகள் ஆகிவிடும்- ஆக்கப் பட்டுவிடும். புறாப் பைத்தியமாகவே இருந்தான் மயூரன்.

மயூரன் புறாக்கள் பற்றிக் கூறவே மதனுக்குப் புறா வளர்க்கும் ஆசை தெற்றிக் கொண்டது. விலைக்குப் புறா வாங்கித் தருமாறு தந்தையிடம் அடம் பிடித்தான். புலமைப் பரிசில் பரீட்சை முடிந்தபின் வாங்கித்தருவதாகக் கூறிப் பணத்தையும் கொடுத்திருந்தார்.

தேர்வு முடிந்த கையோடு புறாவை வாங்கினான் மதன். மயூரனிடமிருந்துதான் புறா கொள்வனவு. அதுவும், தான் மயூரன் வீட்டுக்குச் செல்கையில் பார்த்து வைத்திருந்த எவ்வேளையும் துருதுருவெனத் துள்ளித் திரியும் அந்த வெள்ளைப் புறாவையே வாங்கி, தான் உருவாக்கிய மரப்பெட்டிக் கூட்டினுள் அடைத்து வளர்த்தான். பறக்க விட்டால் கரணமடித்து மீண்டும் தனது கைகளில் வந்து அமர, மதன் தனது வெள்ளைப் புறாவைப் பழக்கி வைத்தான்.

அவற்றைக் கொஞ்சி மகிழ்வான். 'பொலபொல' வென விடிய, புறா பார்க்கச் சென்று விடுவான். ஏப்ரல் விடுமுறை... புலமைப் பரிசில் பெறுபேறு வெளி வரப் போகின்றது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 03.07.2011 முதல் 09.07.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்



மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். அதேநேரத்தில், பதட்டம், படபடப்புடன் செயற்படலாம். எதிர்பாராத உதவி கிடைக்கும். செலவுகள் கட்டுக் கடங்காமல் செல்லும். ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகள் ஏற்படும். தொழில் ரீதியான விடயங்களில் முன்னேற்றம் காணலாம். சுயதொழில் புரிவோருக்கு வருமானம் அதிகரிக்கும். எந்த வேலையையும் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். எதிர்ப்பு, போட்டிகள் விலகும். பணத் தட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்களில் குளறு படிகள், கடும் பேச்சுவார்த்தைகளால் மனஸ்தாபம் போன்றவை ஏற்படலாம். பெண்கள், பொழுது போக்கு விடயங்கள், பயணங்கள் போன்றவற்றால் சந்தோஷம், மகிழ்ச்சி உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் சந்தோஷம் உண்டு. அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாகும். அரசியல்வாதிகள் சந்திப்பால் நன்மையுண்டு. தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

### இடபம்



வீண் அலைச்சல், தண்டச் செலவு, ஏமாற்றத்தைச் சந்திக்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். திட்டமிட்ட காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பல நாள் முயற்சிகளுக்குப் பலன் கிடைக்கும். பணவரவு உண்டு. தொழில், உத்தியோக ரீதியான குழப்பங்கள் தொடரும். எந்த விடயத்திலும் தீர்க்கமான முடிவுகள் எடுக்க முடியாமல் தவிக்கலாம். பிள்ளைகள் வழியிலும், வீட்டைச் சீரமைப்பதிலும் செலவுகள் ஏற்படலாம். சேமித்த பணம் கூடத் திடீரென செலவுகள் உருவாகிக் கரைந்து போகலாம். மனைவி, குழந்தைகளின் விருப்பங்கள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம். கையில் காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பெண்கள், சகோதரிகள் வழியில் உதவிகள் கிடைத்து உற்சாகம் அடைவீர்கள். மற்றவர்கள் பொறாமைப்படும் வகையில் ஆடை, ஆபரணங்கள் அணிவீர்கள். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுகள் மூலம் அவதிப்படலாம். நண்பர்களை நம்பி எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டாம். மனைவி, குழந்தைகளின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம்.

### மிதுனம்



ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி, உற்சாகம் அடைவீர்கள். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். மருந்துப் பொருள்கள் வாங்கலாம். உங்களின் முயற்சிகளில் தடை, தாமதங்கள் தொடரும். கால நேரம் பார்க்காமல் வேலை பார்த்தாலும், விமர்சனங்கள்தான் அதிகமாக இருக்குமே அன்றி, பாராட்டு கிடைக்காது. வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். பிள்ளைகளின் பொறுப்பான செயற்பாடு உங்களைப் பெருமைப்பட வைக்கும். பொன், பொருள்கள் சேரும். வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். குடும்பத்திற்கு தேவையான பொருள்களை பற்றாக்குறை இன்றி வாங்கிக் கொடுப்பீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கடுமையான பேச்சுவார்த்தைகளை, விமர்சன பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். அரசியல், அரசாங்கம், அதிகாரிகள், மருத்துவம், தகப்பனார் தொடர்பான விடயங்கள் சாதகமாக இல்லை. பெண்கள், பயணங்கள், ஆடம்பர ஈடுபாடுகளால் செலவு உண்டு. ஊக்கம், உற்சாகம் கூடும். பணம் வரும்.

### கடகம்



திட்டமிட்ட காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். கடன் வசூலிப்பு முயற்சிகள் பலன் தரும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அடமானமாக வைத்த பொருள்களை மீட்கலாம். பெண்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர பொருள்கள் வாங்குதல், பயணங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவுப் பெண்கள் சிலரின் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். சகோதரர்கள், பங்காளிகள், வீடு, மனை பராமரிப்பு, பொலிஸ் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக அமையும். கடன் பிரச்சினைகளால் ஏற்பட்ட கவலைகள் மாறும். உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கை நிறைவேறலாம். பெரிய மனிதர்களின் நட்பு, உதவி கிடைக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். பணிபுரிவோர் கவனமாக செயற்பட வேண்டும். விமர்சனங்களை எதிர்கொள்ளலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் ஏற்படலாம். தர்ம, புண்ணிய காரியம் செய்வீர்கள்.

### சிங்கம்



குழப்பங்கள் அதிகரிக்கும். தேவையற்ற பயம் குடிகொள்ளும். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். காரிய அனுகூலம் உண்டு. பல நாள்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் வெற்றிகரமாக முடிவுக்கு வரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் அடிக்கடி தவிக்கலாம். அதேநேரத்தில் உங்களின் மதிப்பு, கௌரவம் மேம்படும். பிள்ளைகளால் பெருமை அடையும் சூழ்நிலை உருவாகும். நீங்கள் எதிர்பார்த்த சில விடயங்கள் சாதகமாக நடக்கும். பணிபுரிவோருக்கு வருமானம் கூடும். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கத் திட்டம் போடலாம். நீண்ட தூர பயணங்களால் செலவு உண்டாகலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை, மருத்துவம் தொடர்பான வகையில் ஆதாயம், அனுகூலம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வகையில் தொல்லைகள் உருவாகலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வருவது தள்ளிப் போகலாம். தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம்.

### கன்னி



மறதி, கவனக்குறைவு, தடை தாமதம், தண்டச் செலவு போன்றவற்றைச் சந்திக்கலம். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல் உண்டு. ஆறுதலான, மாறுதலான கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். எதிலும் தடை, தாமதங்கள், இடையூறுகள், விமர்சனங்கள் போன்றவை தொடரும். வேலையாள்களை வைத்து தொழில் புரிவோர் அவர்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். தொழில், வியாபார ரீதியாக பொறுமையை சோதிக்கும் சம்பவங்கள் அவ்வப்போது நடக்கலாம். எந்த விடயத்திலும் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் போன்றவர்களால் அனுகூலம், உதவி பெறலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். முகவர் தொழில் புரிவோர் ஏற்றம் காண்பர். அரசாங்க வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம். மாணவர்கள் எதிர்பார்த்த உயர் கல்வியில் சேரலாம். பெண்கள், பயணங்கள், விருந்து, உபசரிப்புகள், போன்றவற்றால் சந்தோஷம் அடையலாம். மனதிற்கு சந்தோஷம் தரும் செய்தி கேட்கலாம்.

### துலாம்



முக்கியமான காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். தடு மாற்றங்களையும், குழப்பங்களையும் சந்திக்கலாம். வரவுகளை மீறிய செலவுகள் தொடரும் போது அதைச் சமாளிக்கும் வகையில் ஏதாவது பணவரவுகள் வரும். தொழில் ரீதியாக மதிப்பு, கௌரவம் மேம்படும். அதேநேரத்தில், கூட்டுத் தொழில் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். பிள்ளைகளின் தேவைகளைக் குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். ஆடம்பர ஈடுபாடுகளால் செலவுகள் அதிகரிக்கும். மகிழச்சியான செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும். சகோதரர்கள், பங்காளிகள், உத்தியோக ரீதியான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். பணிபுரிவோர் வேலை செய்யும் இடத்தில் பிரச்சினை வராமல் இருக்க வாக்கு வாதங்களையும், கடும் பேச்சுக்களைக் குறைக்க வேண்டும். வாகனங்களில் செல்லும் போதும் கவனம் அவசியம். மாமன், மைத்துனர்கள் உதவிகரமாக இருப்பர்.

### விருச்சிகம்



பணவரவுகளைப் பெறலாம். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். பரபரப்பாகவும், உற்சாகமாகவும் செயற்படுவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். தொழில் ரீதியான அனுகூலங்கள் தொடரும். செல்வாக்கு அதிகரிக்கும். கடன் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். பிள்ளைகள் உடல் நலனிலும் அக்கறை தேவை. தொழில் ரீதியாக சில உயர்வுகளை எதிர்கொள்ளலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டமும் நிறைவேறும். கூட்டுத் தொழில் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். கணவன் மனைவி உறவிலும் சிறு, சிறு பிணக்குகள் ஏற்படலாம். அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை, மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வகையில் சிரமங்களே அன்றி, ஆதாயம் இல்லை. எந்த விடயத்திலும் பொறுமை அவசியம். மற்றவர்கள் பேச்சைக் கேட்டு சில வேலைகளில் இறங்கி விட்டு அவதிப்படுவீர்கள். எந்த வேலையையும் தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். வீடு, நிலம் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும்.

### தனுசு



குழப்பங்களும், தடுமாற்றங்களும் அதிகரிக்கும். சிறிய பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ் வீர்கள். கலகலப்பு கூடும். தொழில் ரீதியான வேலை நெருக்கடிகள் தொடரும். கடும் பிரயத்தனம் மேற்கொண்ட பின்னரே எதிலும் வெற்றி கிடைக்கும். புதிய தொழில் ஆரம்பிக்க மேற்கொண்ட நடவடிக்கைகளில் சாதகமான பலன்களைக் காணலாம். சிறிது, சிறிதாக சேமித்த பணம் கைக்கு கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். பிள்ளை இல்லையே என ஏங்கிக் கொண்டிருந்தவர்கள், அது தொடர்பான நல்ல் செய்திகளைக் கேட்கலாம். சகோதரர்கள், பங்காளிகள், சகலைகளால் நன்மை அடையலாம். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களிலும் முன்னேற்றம் உண்டு. சகோதரிகள், உறவுப் பெண்கள், திடீர் பயணங்கள், சந்தோசமான செயற்பாடுகள் போன்றவற்றால் செலவு, பற்றாக்குறை போன்றவற்றைச் சந்திக்கலாம். அரசியல்வாதிகள் கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள்.

### மகரம்



ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வகையில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். திடீர் பயணங்கள் செல்லலாம். பிள்ளைகள் தொடர்பான சுபச் செலவுகள் உண்டு. சிறு உடல் உபாதைகளுக்கு ஆள்படலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தொடர்பான தொல்லைகள், சிரமங்கள் ஏற்படும். வெளிவட்டாரத் தொடர்புகளும் விரும்பும் விதத்தில் இருக்காது. உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்களில் சந்தோஷம் உண்டு. எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் குழப்பங்களுக்கு ஆள்படலாம். புதிய பொறுப்புகளால் போராட்டமான நிலைமைக்கு ஆள்படலாம். பிள்ளைகளின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளாலும் எரிச்சல் அடையலாம். இடமாற்றம், வீடுமாற்றம் போன்றவற்றையும் எதிர்கொள்ளலாம். பழைய விடயங்களை நினைத்தே அடிக்கடி கவலை அடைவீர்கள். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள்.

### கும்பம்



ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். நண்பர்கள் சந்திப்பால் கலகலப்பு, சந்தோஷம் உண்டு. அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். மற்றவர்கள் பேச்சைக்கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு அவதிப்படலாம். எந்த வேலையிலும் சிரமங்கள், பிரயாசைகள், கடின முயற்சிகள் அதிகம். சுணங்கி, சுணங்கித் தான் காரியங்கள் நடக்குமே அன்றி, எதுவும் எடுத்த வேகத்தில் முடிவுக்கு வராது. வசதிக்கேற்ற வகையிலோ எந்த வேலையையும் செய்ய முடியாது. மாமன், மைத்துனர்கள், நண்பர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி பாசம் அதிகரிக்கும். அவர்கள் வழியில் உதவி கிடைக்கலாம். மனதில் தெம்பு, தன்னம்பிக்கை குடிகொள்ளும். ஆடை, ஆபரணங்கள், விலை உயர்ந்த பொருள்கள் வாங்கலாம். பயணங்கள் பலன் தரும். பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். தொழில் ரீதியான அலைச்சல் அதிகரிக்கும். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல் அதை நீங்களே செய்ய நேரிடலாம். கேளிக்கை கொண்டாட்டம் உண்டு.

### மீனம்



குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்ட வேலைகளை மாற்றி அமைப்பீர்கள். மறதியால் அவதிகளுக்கு ஆள்படலாம். ஊக்கம், உற்சாகம் குடிகொள்ளும். விருந்து, விசேஷங்களாலும், பணவரவுகளாலும் சந்தோஷம் உண்டு. சில நாள்களுக்குப் பின் நடக்கும் என நினைத்த காரியம் ஒன்று திடீரென நடந்து விடலாம். அசதி, சோர்வு, உடல் உபாதை, வீண் அலைச்சல் போன்ற பிரச்சினைகள் தொடரும். கணவன் மனைவி இடையேயான உறவில் பிரச்சினை ஏற்படலாம். பல விடயங்களில் அவசரப்பட்டு முடிவுகள் எடுத்து விட்டு அவதிகளுக்கு ஆளாகலாம். பணப்புழக்கம் கூடும். வீட்டுத் தேவைகள் குறைவின்றி நிறைவேறும். சகோதரர்கள் உதவிகள் கிடைப்பதோடு, அவர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பரப் பொருள்கள் வாங்குதல் போன்றவை எல்லாம் நினைத்தது போல நடக்கும். வருமானத்தைப் பெருக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். புத்தி தடுமாற்றங்கள், குழப்பங்களுக்கு அவ்வப்போது ஆள்படலாம். தந்தை வழியில் செலவு, மனஸ்தானம் போன்றவை உருவாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறக்காத எறும்பு



ஒரு கட்டெறும்பு தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது. மரத்திலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த புறா ஒன்று மரத்திலிருந்த இலை ஒன்றைப் பறித்து நீரில் வீசியது. எறும்பும் தத்தித் தத்தி வந்து அந்த இலையின் மேல் ஏறிய பின்னர் அந்த இலை காற்றில் அசைந்து மெதுவாகக் கரைப் பக்கம் ஒதுங்க எறும்பு தரையில் ஏறித் தப்பியது.

மற்றொரு நாள். ஒரு வேடன் அந்தப் புறாவைக் குறி வைப்பதைப் பார்த்தது அந்த எறும்பு. ஆனால் புறாவோ இதை அறியாமல் வேறெங்கோ பார்த்துக் கொண்டிருந்தது.

அன்று தன்னைக் காப்பாற்றிய புறாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது தனது கடமையாக எண்ணிய எறும்பு விரைந்து சென்று வேடனின் காலில் நறுக்கென்று கடித்தது. கடியின் வலி தாங்க முடியாமல் கத்திய வேடனின் குறி தப்பியது. சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய புறா தனக்கேற்படவிருந்த ஆபத்தை அறிந்து அந்த இடத்தை விட்டுப் பறந்து சென்றது. அன்று புறா நமக்கென்ன என்று அலட்சியமாயிருக்காமல் உதவி செய்ததால்தான் புறாவின் உயிர் தப்பியது. அந்த சிறிய உருவம் கொண்ட எறும்பும் நன்றி மறக்காமல் செயற்பட்டது. எவருக்கும் எந்த நேரத்திலும் நம்மால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும்.

அதுபோல் நமக்குச் செய்த நன்றியையும் எந்தக் காலத்திலும் மறக்கக் கூடாது என்பதை அந்த எறும்பு எடுத்துக் காட்டியுள்ளது.

தே.ரீகன்,
யாழ்.மத்திய கல்லூரி.

# இறக்கும் வரை அரசன் நான் !



தந்த தகிர்த தகிர்த தாம்
திந்த திகிர்த திகிர்த தெய்

மச்சம் தின்னும் சிங்கம் நான்
மகாவீர சிங்கம் நான்
அச்சம் என்றால் என்ன வென்று
இன்னும் நான் அறிந்திடேன்

தந்த தகிர்த தாம்
திந்த திகிர்த திகிர்த தெய்

இந்தக் காட்டுக்கள் அரசன் நான்
நினைத்ததொல்லாம் செய்வன் நான்
எந்தநாளும் அரசன் நான்
இறக்கும் வரையில் அரசன் நான்

தந்த தகிர்த தகிர்த தாம்
திந்த திகிர்த திகிர்த தெய்

யோ.தட்ஷாயினி, தரம் 6ஏ,
யா/ஸ்கந்தவரோதய கல்லூரி.

# பொது அறிவு

* இலங்கையில் நன்னீர் நிலையங்களில் எத்தனை வகையான மீனினங்கள் காணப்படுகின்றன?
  81 வகையான மீனினங்கள்
* எந்த நோய்க்கான மருந்தைத் தயாரிக்க பாம்பின் விஷம் பயன்படுகிறது?
  தொழுநோய், ஆஸ்மாநோய்.
* அணு கொள்கையை முதலில் வெளியிட்டவர்?
  சயோன் தாற்றன்
* கடல் நீரின் அடர்த்தி ஆற்று நீரின் அடர்த்தியிலும் பார்க்கக் கூடியதாக இருக்கக் காரணம்?
  கடல் நீரில் உப்புக்கள் அதிகளவில் இருக்கின்றமையாகும்.
* வீட்டு மின்சுற்றில் ஒரு மின்குமிழின் இழை அறுந்த போதிலும் ஏனைய மின்குமிழ்கள் ஒளிர்வதற்குக் காரணம் என்ன?
  மின்குமிழ்கள் சமாந்தர இணைப்பில் இருப்பதேயாகும்.
* பீடைகளால் இலங்கையின் மொத்த விவசாய உற்பத்தியில் எத்தனை வீதம்வீணாகின்றது?
  18 சதவீதம்
* 150 மைல் வேகத்தில் ஓடக்கூடிய மிருகம் எது?
  சீற்றா
* இலங்கையின் நிலப்பரப்பில் எத்தனை வீதமான நிலம் பயிர்ச்செய்கைக்கு உகந்தது?
  19 சதவீதமான நிலம்
* வெள்ளொளி 7 நிறங்களால் ஆனது என்பதை முதலில் கண்டறிந்தவர் ?
  சேர்.ஐசாக் நியூற்றன்.

ஆ.கபிலன், தரம்5
புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.



# வாழ்க்கையின் தத்துவம்

* பிரார்த்தனை என்பது கடவுளிடம் ஏதாவது கேட்பதல்ல. அது ஆன்மாவின் ஏக்கமாகும்.
* காலமென்னும் ஆழ்கடலில் பயணம் செய்யும் நமக்கு கலங்கரை விளக்கமாகத் திகழ்பவை நல்ல புத்தகங்களே.
* தோல்வி என்றால் நீங்கள் தோற்றவர் என்று பொருளல்ல இன்னும் வெற்றி அடையவில்லை என்றுதான் பொருள்.
* தனியாகப் போராடிக் கொண்டிருக்கும் மனிதனே உலகில் வலிமை மிக்கவன்.
* உயர்வு தேடுபவனுக்கு உயர்வு வருவதில்லை, உயர்வுக்குத் தகுதியுடையவனுக்கே உயர்வு வருகிறது.

# விடுகதைகள்

1. ஒருவருடைய கழுத்து, கை, கால், உடல் போன்றவற்றை வெட்டுபவனை ஏன் என்று கேட்க யாரும் இல்லை அவன் யார்?
2. நடக்கவும் மாட்டான், நகராமல் இருக்கவும் மாட்டான் அவன் யார்?
3. கிளையே இல்லாத மரத்தில் அலுப்பே இல்லாத மனிதன் ஏறுகிறான் அவன் யார்?
4. குளிக்காவிட்டால் சிவப்பு, குளித்து விட்டால் அவன் நிறம் கறுப்பு அது என்ன?
5. தன் தலையைத் தானே தானே விழுங்குபவன் அவன் யார்?

ர.குவேதினி
6'ஏ' கிளி. பரந்தன் இ.ம.வி.

விடைகள்
1.தையல்காரர்
2.கடிகாரம்
3.பேன்
4.நெருப்பு
5.ஆமை

# விடை தெரியுமா? 114

## உங்களுக்கும் பரிசில்கள்

1. ஐம்பெரும் காப்பியங்களும் எவை?
2. நீர் எருமையின் உணவுகள் எவை?
3. வெட்டுக்கிளிபோல் தேற்றமுடைய இன்னொரு பூச்சி எது?
4. உலகில் மிகப் பெரிய விமான நிலையம் எங்குள்ளது?
5. கடலுக்கடியில் நகரங்கள் காணப்படும் நாடு எது?

### விடைகள் 112

1. சிலி நாட்டில் உள்ளது, 20 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது
2. உக்ரைனி
3. ஜூன் 14
4. ஸ்லம்டாக் மில்லியனர்
5. சைஜீன் பிங்

### வெற்றி பெற்றவர் விவரம்

★சி.நிறோஜன், யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
★யோகராசா சுபாஷினி, யாழ். மட்டுவில் கமலாசினி கனிஷ்ட மகா வித்தியாலயம்
★யோ.சிவரஜினி, யாழ். மட்டுவில் கமலாசினி கனிஷ்ட மகா வித்தியாலயம்
★ப.தனுஜா, வ. சைவப்பிரகாசம் மகளிர் வித்தியாலயம்
★சீனோன் அஞ்சலோ, கண்டி. கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரி

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 08.07.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.


# சிந்தனைத் துளிகள்

* அறியாமையுடன் நூற்றாண்டுகள் ஒருவன் வாழ்வதைவிட, அறிவுடன் ஒருநாள் வாழ்வதே மேலானது.
* பணிவு என்பது தாழ்வின் சின்னமல்ல அது ஒழுக்கத்தின் அறிகுறி.
* அறிவு உள்ளவனுக்கும், முயற்சி உள்ளவனுக்கும் வறுமை தடையாகாது.
* இலைகள் விழும் போது மரம் அழுதால் மரத்துக்கு ஒருபோதும் வசந்தகாலம் கிடையாது.
* மனிதன் திரியாக எரிய முன் வராது விட்டால் ஒருபோதும் தீபமாக ஒளிவிட முடியாது.



சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.






சா. அபிஷனா,தரம் 3
சென்.ஜோண் பொஸ்கோ.



அ.சோபிகன்,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.




பி.மோகனப்பிரசாத், தரம் 8 சி
யாழ்.இந்துக் கல்லூரி.



தே.விதுஷ்ன், தரம் 6பி,
யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரட்டை வாழ்வு

பாதங்கள் இரண்டு
பாதைகள் இரண்டு
மனமெங்கு போகும்?
கண்கள் இரண்டு
காலங்கள் இரண்டு
கனவெங்கு தோன்றும்?
உருவங்கள் இரண்டு
துருவங்கள் இரண்டு
உணர்வெங்கு சேரும்?
உள்ளங்கள் இரண்டு
உண்மைகள் இரண்டு
உறவெங்கு வாழும்?
தவறுகள் புரிந்த முகமதை
மறைத்து மறுமுகத்தோடு
புதுமனை புகுந்து
புதுவாழ்வில் இணைந்து
ஓராண்டு போனாலும்
ஆறாது நம் வடு

# அவசியம்

அபிவிருத்தியை விட
அமைதி முக்கியம்
ஆக்கிரமிப்பை விட
அனுசரணை அவசியம்!

துவேசத்தை விட
தூய அன்பு முக்கியம்
துன்மார்க்கத்தை விட
சன்மார்க்கம் அவசியம்!

சண்டையை விட
சமரசம் முக்கியம்
சந்தேகத்தை விட
சந்தோசம் அவசியம்!

சினங் கொள்வதை விட
பொறுமை முக்கியம்
சிற்றின்பத்தை விட
பேரின்பம் அவசியம்!

பொய்யுரைப்பதை விட
மெய்யுரைப்பது முக்கியம்
பொன்னகையை விட
புன்னகை அவசியம்!


கவிக்குயிலன்,
சேனையூர்-06



# என்னவளின் உள்ளம்

பலநாள் கண்ணில்
பட்ட பள்ளம் மேல்
அன்று ஏதோ தெரியாது
தடக்கி விழுந்துவிட்டேன்..
அழகைக் கொட்டிக்கிடக்கும்
பெட்டகமாய் இருந்ததால்
எனக்கு விழ்ந்த வலி
தெரியவில்லை..
ஐயோ என்று சொல்லக் கூட
மொழி வரவில்லை
அங்கு ஒரு விழியிருந்து
என்னைப் பலியாக்க நினைத்தது
போலியான மனித வாழ்க்கையில்
பள்ளம் மேடு சகஜம் என்று
மீண்டும் வேலியருகே ஒரு பள்ளம்
தாலியோடு பெண்கள் கூட்டம்
பள்ளம் தாண்டி காலியாகின...
எவருமே விழாத பள்ளத்தில்
எனக்குத்தான் இடமொன்று இருந்தது
விழுந்ததனால் பயன் ஏதும் உண்டோ
என்று சிந்தித்தேன் வந்தது
பலதாரக மந்திரங்கள்
விழுந்தேன் எழிலில்
விழுந்தேன் விழிகளில்
மனதைப் பறிகொடுத்து
அலைந்தேன் திரிந்தேன்
பள்ளத்தில் ஆனேன் போதை
தடுமாறினேன் பாதை
தடுமாற வைத்தாளே கோதை
மொத்தத்தில்....
விழ்ந்த இடம்பள்ளம்தான்
இருந்தும் அது என்னவள் உள்ளம் தான்.

ஜெயராம் ஜெகன்,
புதுக்குடியிருப்பு



# தலைக்குள் கல்யாணம்

தரகர் வந்தார்
கை நிறைய சாதகமே
வயது தான் இருபதாம்
வெள்ளை நிறப் பெண்ணாம்
மாப்பிளையோ கறுப்பு
பரவாயில்லை என்றாள் பெண்;
பெண் வெளிநாட்டில் வைத்தியர்,
புடைவை கட்டவே தெரியாது
குணமோ தங்கம்
பணமோ கோடிக்கணக்கு
இறுக்கமான ஆடை ரொம்பப் பிடிக்கும்
தலை முடியோ
முழங்காலைத் தொடுகுதாம்
மாப்பிள்ளையை பணம் செலவழித்து
பெண்ணே கூப்பிடுகிறாள்!
வெளிநாடு சென்ற மாப்பிள்ளைக்கு
அதிர்ச்சி மேல் அதிர்ச்சி
திருமணத்துக்கு 2 மாதம் பொறுக்க வேண்டுமாம்
பொம்பிள்ளை 8 மாதக் கர்பிணி
புரியாது திகைத்த மாப்பிள்ளைக்கு
மாமியார் பதில் கொடுத்தார்
வெள்ளைக்கார குடும்பத்துக்கு
பிள்ளை இல்லையென்று
அவர்களுக்கு என் மகள் தான்
''வாடகைத் தாய்''
குழந்தையைப் பெற்றுக் கொடுத்தால்
ஒருகோடி கிடைக்குமாம்
மாப்பிள்ளையோ
ஏதுவுமே கூறமுடியாது
வாயடைத்து நின்றார்!

சா.ஜிந்துஜா
கோண்டாவில்.

# சலனங்கள்

எதிர்வு கூறல்களில்
எதிர்காலக் கனவுகள்
முதிர்ந்து போக
நிகழ் காலங்கள்
நீண்டு
பூப்பெய்திப் போகின்றன
நிச்சயங்கள்
மரணித்துப் போனதால்
நினைவுகளில்
பூச்சியங்கள்
பூத்துக் குலுங்குகின்றன
சோகச் சுமைகளில்
மீள முடியாமல்
வாழ்வும் வனப்பும்
துயரமுடைகளை
சுமந்து... சுமந்து..
சுமைதாங்கியாய்
சாய்ந்து போனது
இழப்பும் கனப்பும்
இனிய வசந்தத்தின்
எதிர்பார்ப்பும்
இயல்பு நிலைக்குள்
ஒளிந்து கொண்டன
யதார்த்தங்கள்
மட்டுமே
அர்த்தங்களை
அலங்கரித்துக் கொண்டது
அடுத்த...
தலைமுறைகளின்
எச்சங்களுக்காக...



க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

# போகாதே என்னை விட்டு

நான்
காதலித்துக் கைப்பிடித்த
மின்சாரப் பெண்ணே நீயும்
சம்சாரம் ஆனதில் எனக்கு
ஏகப்பட்ட சந்தோஷம்
காதலித்த நாள்களில்
என்வீடு வந்து நீ
திரும்பிச் சென்றதனை
தர்மமென ஏற்றுக் கொண்டேன்
பெரிய இடம் உனக்கு
ஒத்துவராது எனப் பலர்
சொன்ன போதெல்லாம்
உள்ளூர ஒரு பயம்....
எனினும்
உன் வீட்டார் உடனடியாய்(ச்)
சம்மதம் தந்ததோடு
பணத்தோடு குணமும்
கல்வியும் சேர்வது நல்லதென
கூறியதோடு அமையாது
என்வீட்டில் நீயும்
நிரந்தரமாய் இருக்க
ஒப்புக் கொண்டதை(ப்)
பெருந்தன்மை என்பதா
எனக்குத் தெரியவில்லை.
உன்னுடைய வரவின் பின்
என்னில்லம் கொஞ்சங் கொஞ்சமாய்
புதுப் பொலிவு பெறும் போது
உண்மையில் மகிழ்ந்ததோடு
உன்னிடமும் சொல்லிடுவேன்
என்னிடம் இருந்துனக்கு
கிடைப்பதென்னவோ
கணிசம்தான்
நீயோ என்னுடைய
வாழ்வொளி ஆகிவிட்டாய்
என்று சொல்வதில் நான்
எப்போதும் வெட்கப்பட்டேன்
உன் வீட்டார் அருமையாய்
அழைக்கின்ற போதெல்லாம்
குதிக்காலில் நின்று
பார்த்துவிட்டு நீயும்
குதித்தோடி என் வீடு
வந்திடுவாய் வழக்கமிது
ஆனால்
சுயநலக் காரனாய் நான்
உன்பிறந்த வீட்டைச் சிறிதும்
எண்ணாமல் விட்டது
கயமை என இப்போது
நன்றாகத் தெரிகிறது.
என்னுடைய வளர்ச்சியில்
மகிழ்பவள் நீயென்று - நான்
எண்ணியது ஒன்றும்
தப்பாகி விடவில்லை
ஆயின்
ஒளிவு மறைவின்றி என்னோடு
எப்போதும் பேசும் நீ
திடீரென ஏதும்
பேசாமல் தாய் வீடு
செல்வது ஏனென
ஒன்றும் புரியவில்லை
அதனால்
சந்தேகம் ஒன்றுமில்லை
ஊடலும் உந்தன் குணம்
ஏனென்று கேட்பதற்கு
நாவேனோ எழவில்லை
ஏனெனில் என்மேல் நீ
ஏகப்பட்ட அன்பு
கொண்டுள்ளாய் அதிலெனக்கு
சந்தேகம் ஒன்றில்லை
ஆக
நீயெது செய்தாலும்
அதில் தர்மம் ஒன்று இருக்கும்
என்பதை நானும்
உண்மையாக நம்புகிறேன்
வேளை வரும் போது
சொல்வதோடு மட்டுமல்ல
மீண்டும் பழைய படி
என் வீட்டில் எப்போதும்
தங்கிடுவாய் அதனால்
சத்தமிட்டு அயலவரை
தட்டிவிடும் எண்ணமில்லை
ஆகவே
கனக்க நாள் வேண்டாம்
கூடிய விரைவில்
என் வாழ்வில்
ஏற்றி வைத்த ஒளியை
கையாலே தட்டி
அணைத்து விட என்றும்
விரும்பாதே பெண்ணே....

-சிவாணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அரங்கில் இலங்கையின் போர்க்குற்றங்கள்

சந்திரசேகர ஆசாத்

ஞாயிறு காரம்

அண்மையில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசு உரிய விசாரணைகளை உடனடியான நடத்த வேண்டும் எனவும் அப்படி நடத்தப்படாவிட்டால் சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் சர்வதேச நாடுகளுக்கு ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளது. இது முன்னெப்பொழுதையும் விடக் கடும் தொனியிலும் அடுத்த நடவடிக்கை தொடர்பான எச்சரிக்கையையும் வெளிப்படுத்துகிறது என்பதை நாம் அவதானிக்க முடியும்.

இதேபோன்ற ஒரு அறிவிப்பைக் கடந்த வாரம் பிரிட்டனும் வெளியிட்டிருந்தது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவந்த போது அது ஒரு தலைபட்சமானதும் பக்கச் சார்பானதும் உள்நாட்டு விவகாரங்களிலான தலையீடு எனவும் குற்றம் சாட்டப்பட்டு நிராகரிக்கப்பட்டது. எனினும் ஐக்கிய நாடுகளின் செயலாளரைச் சந்தித்து சில பேச்சுக்களை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர் நடத்தியிருந்தனர்.

அடுத்த ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் போட்டுக் காண்பிக்கப்பட்ட இலங்கையில் கொலைக்களம் என்ற வீடியோ நாடா பெரும்பாலான உலக நாடுகள் மத்தியில் பெரும் அதிர்வை ஏற்படுத்தின. இலங்கை அரசு எவ்வளவுதான் அது போலியானது எனவும் செயற்கையான நடிகர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது எனக் கத்தினாலும் சர்வதேசம் அந்த ஒளிநாடாவில் காட்டப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகக் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

இலங்கை அரசு இவை இலங்கையின் உள் விவகாரங்களில் தலையீடு, இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியை விரும்பாத நாடுகளின் சதி, விடுதலைப் புலிகளிடம் பணம் பெற்று மேற்கொள்ளப்படும் மோசடிகள் எனப் பல்வேறு விதமாக ஓங்கிக் கத்தினாலும் சர்வதேசம் எதையும் நம்பத் தயாராக இல்லை. அது மட்டுமன்றி இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு என்ற குற்றச்சாட்டை உடைக்கும் வகையில் மேற்படி விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசு உரிய விசாரணைகளை நடத்த வேண்டும் என்றே கோரி வருகிறது. அப்படிச் செய்யத் தவறினால் மட்டுமே சர்வதேசம் சுயாதீனமான விசாரணைகளை நடத்தும் எனத் தெரிவித்து வருகிறது.

அதாவது இலங்கையின் இறைமை பற்றியோ, படையினரின் ஒழுக்கம் பற்றியோ இனியும் சொல்லி சொல்லிச் சமாளிக்க முடியாத அளவுக்கு நிலைமை முற்றி விட்டது மட்டுமன்றி, இலங்கை அரச தரப்பின் பொய்கள் அம்பலமாகியும்விட்டன. போர்க்குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் அல்லது சர்வதேச அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

ஒரு சுதந்திரமான விசாரணையில் போர்க்குற்றங்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள் கொண்டு வரப்படும் போது அவைக்கு கட்டளையிட்டவர்களின் பெயர்களும் அம்பலத்துக்கு வர வேண்டிய நிலை எழும். அப்படியான ஒரு நிலையில் பல உயர் மட்டங்கள் மேடைக்கு வர வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே இலங்கை அரசு ஒரு நியாயமான, சுதந்திரமான விசாரணையை நடத்த முன்வரப் போவதில்லை. ஆனால் அப்படி ஒரு விசாரணையை நடத்தத் தவறினால் மேலும் சில ஆபத்தான விளைவுகள் சர்வதேச அளவில் உருவாகலாம். இப்படியான நிலையில் இலங்கை அரசு பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரம் கொண்ட இரு நாடுகளான சீனாவையும் ரஷ்யாவையுமே நம்பியுள்ளன. இந்த நாடுகள் இலங்கை விடயத்தில் பிறநாடுகள் தலையிடக் கூடாது என்ற கருத்தையே வெளியிட்டு வருகின்றன. அதேவேளையில் ஐ.நா நிபுணர் குழுவுக்கு எதிராக இலங்கை முறை மீறிய நடவடிக்கைகளில் இறங்க முயன்ற போது அந்த நாடுகள் இலங்கையை அடக்கி வாசிக்கும்படி எச்சரித்திருந்தன. அதுமட்டுமன்றி சனல் - 4 வீடியோ வெளியீடு பற்றி அவை பாதகமாகவோ சாதகமாகவோ எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

இன்று ரஷ்யாவோ, சீனாவோ பொதுவுடமை நாடுகள் அல்ல. மூன்றாம் உலக நாடுகளை ஏகாதிபத்தியங்களின் பிடியிலிருந்து விடுவிக்கப் போராடும் நேர்மை இப்போ அவையிடம் இல்லை. இப்போது அந்த நாடுகளும் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் போன்ற உலகப் பொருளாதார மேலாதிக்கத்தைக் கைப்பற்றும் நோக்கில் செயற்பட்டு வருபவை. ஆனால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் முக்கியத்துவம் கருதி இலங்கையை அவைகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அளவுக்கு மட்டுமே ஆதரவு இருக்கும். தனது மிகப் பெரும் சந்தையாக அமெரிக்காவைக் கொண்டிருக்கும் சீனா இலங்கைக்காக அமெரிக்காவுடன் முரண்படப் போவதில்லை. எனவே இலங்கைக்கான சீன ஆதரவு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கும்.

ரஷ்யாவை நம்பியிருந்த ஈராக் அதிபர் சதாம் ஹூசைன் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டதும் சீனாவையும் ரஷ்யாவையும் நம்பிய லிபியாவின் கேணல் கடாபி கைவிடப்பட்டுத் தனிமைப் படுத்தப்பட்டதையும் நாம் மறந்து விட முடியாது.

ஆனால் இந்தியா இலங்கையின் அண்டை நாடாக இருந்த போதும் இலங்கையுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்த போதிலும் இலங்கை இனப் பிரச்சினையுடன் நேரடியாகத் தொடர்புபட்ட போதிலும் போரில் கூட பெருமளவு பங்களிப்பு வழங்கிய போதிலும் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக காத்திரமான எந்த ஒரு கருத்தையும் வெளியிடவில்லை. இந்திய மத்திய அரசின் சார்பில் ஒரு நீண்ட மௌனமே நிலவி வருகிறது.

இலங்கை நேர்மையான முறையில் விசாரணைகளை நடத்திய பொறுப்பானவர்களைத் தண்டிக்க வேண்டுமெனவும் அப்படிச் செய்யத் தவறும் பட்சத்தில் இந்தியா சர்வதேச நாடுகளுடன் இணைந்து இலங்கை மீது பொருளாதாரத் தடையை அமுல்படுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தமிழக சட்ட சபையில் ஏகமனதாக தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது. இது தொடர்பாகத் தமிழக முதல்வர் ஜெயலலிதா நேரடியாகவே இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசியிருந்தார். மன்மோகன்சிங் உரிய நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்தார்.

அவரும் இலங்கைக்கு ஒரு உயரதிகாரிகள் மூவர் கொண்ட குழுவை அனுப்பினார். அவர்களும் ஜனாதிபதி உட்படப் பல அரச தரப்பினருடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் தொலைபேசியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனும் பேச்சுக்களை நடத்தினர். அவர்கள் தங்களுக்குப் பேச்சுக்கள் திருப்தியளிப்பதாகத் தெரிவித்துவிட்டுப் போய்விட்டனர்.

ஆனால் சில நாள்களின் பின்பு அலரிமாளிகையில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமீபத்தில் இலங்கை வந்த இந்தியக் குழு எவ்வித அழுத்தத்தையும் பிரயோகிக்கவில்லை எனவும் அதைச் செய், இதைச் செய் எனவோ வலியுறுத்தவில்லையெனவும் 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றியே அதற்கு மேலான அதிகாரத் தீர்வு பற்றியோ எதுவும் பேசவில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

இதை ஆமோதிப்பது போன்று இந்தியப் பிரதமர் அடுத்தநாள் பத்திரிகையாளர்களுடன் உரையாடிய போது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா எந்த அவசரப்பட்டு தீர்மானத்தையும் எடுக்காது எனவும் பொறுமையுடனும் நிதானத்துடனும் செயற்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்குச் சர்வதேச நாடுகள் பல்வேறு விதமான அழுத்தங்களை மேற்கொள்ளும் நிலையில் இலங்கைக்கு ஆதரவு வழங்கும் நாடுகளும் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே ஆதரவை வழங்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்தியாவின் இப்படியான கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு ஏமாற்றமளிப்பவையாகவே உள்ளன. இனப்பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வு காணக்கூடிய வாய்ப்பை இந்தியாவின் நிலைப்பாடு சிதைத்து விடுமோ என்ற அச்ச நிலையை தோற்றுவித்துள்ளது.

அதுமட்டுமன்றித் தமிழக மக்களின் உணர்வுகளையும் இந்திய மத்திய அரசு உதாசீனம் செய்கிறதா என்ற கேள்வியும் எழுப்புகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் ஏனைய மேற்கு நாடுகளை விட இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் கூடுதலான ஒரு தார்மீகக் கடப்பாடு உண்டு என்பதை எவரும் மறுத்துவிடமுடியாது.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதன் மூலம் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரின் குடியுரிமை பறிக்கப்பட்டது. கல்லோயா, கந்தளாய் போன்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலமும் பின்னால் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் மூலமும் கிழக்கும் தமிழ் மக்களின் நில உரிமை சுவீகரிக்கப்பட்டது. 1950 இல் தனிச் சிங்களச் சட்டம் மூலம் தமிழ் மக்களின் மொழியுரிமை பறிக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு தரப்படுத்தல் மூலம் தமிழ் மக்களின் உயர்கல்வி கற்கும் உரிமைக்குப் பங்கம் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறு காலத்துக்கு காலம் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது அவற்றுக்கெதிராகத் தமிழ் மக்கள் அமைதி வழிப்போராட்டங்களை நடத்தினர். இந்தப் போராட்டங்கள் இனக்கலவரம் என்ற பேரில் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் மூலமும் இராணுவ வன்முறைகள் மூலமும் ஒடுக்கப்பட்டன. காரணமின்றி இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் விசாரணையின்றிச் சிறையில் அடைக்கப்படுவதும் தொடர்ந்தன.

இப்படியான ஒரு நிலையிலேயே தமிழ்மக்கள் ஆயுதப்போராட்டத்தில் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஆரம்ப கட்டத்தில் இந்தியாவும் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கியது.

இதன் வளர்ச்சிப் போக்கில் விடுதலைப்புலிகள் தமக்கென சில கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை வைத்திருக்கவும் ஆயுதப் போராட்டம் மூலம் தமிழ் மக்களின் தாயக உரிமையை வென்றெடுக்க முடியும் என்ற ஒரு நம்பிக்கை ஏற்படும் நிலையும் உருவாகியது. அதுமட்டுமன்றி விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் பேரம் பேசக் கூடிய ஒரு வலுவான சக்தியாகவும் உருவெடுத்தனர்.

ஆனால் மேற்குலகும் இந்தியாவும் விடுதலைப் புலிகளைப் பயங்காரவாதிகள் எனப் பிரகடனம் செய்து அவர்களை அழிப்பதில் இலங்கை அரசுக்கு எல்லாவித உதவிகளையும் செய்தனர். புலனாய்வுத் தகவல்கள், தொழில்நுட்ப உதவிகள், படைப் பயிற்சிகள், போர் ஆலோசனைகள் என்பனவற்றை தாராளமாக இந்தியா வழங்கி விடுதலைப்புலிகளை அழிப்பதில் ஒரு காத்திரமான பங்கை வகித்தது.

இந்த நடவடிக்கையின் மூலம் தமிழ் மக்களின் பலம் சிதைக்கப்பட்டதுடன் அவர்களின் பேரம் பேசும் சக்தியும் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இப்படியான ஒரு நிலையில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் மேலும் வலுவடைந்துள்ளதுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இலங்கை அரசு ஒரு ஏமாற்று வழிமுறையைக் கையாண்டு வருகிறது.

இவற்றுக்கு எதிராகத் தமிழ் மக்கள் வாய் கூடத் திறக்க முடியாத வகையில் தமிழ் மக்களை நோக்கித் துப்பாக்கிகள் நீட்டப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலைமையை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியதில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு உண்டு. எனவே இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது இந்திய அரசின் தார்மீகக் கடமையாகும். இந்த விடயத்தில் தமது கடமையை உணர்ந்து அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போன்றவை ஆர்வம் காட்டி வருகையில் இந்தியா மௌனம் சாதிப்பது ஒரு நியாயமான அணுகுமுறையாக இருக்க முடியாது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகச் சர்வதேச நாடுகள் அக்கறை காட்டி வரும் இந்த வேளையில் இலங்கை அரசு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தியா தனது கடமையைச் செய்யத் தவறினால் அது ஒரு பெரும் வரலாற்றுத் துரோகமாகவே அமைந்து விடும். அதுமட்டுமன்றி இலங்கையின் இனப்பிரச்சினை என்றுமே தீர்க்க முடியாத வகையில் புரையோடிப் போகும் ஆபத்தை எவராலும் தவிர்க்க முடியாத நிலையும் ஏற்பட்டு விடும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு நினைவஞ்சலிகள்

மலர்வு:
05.07.1954

உதிர்வு:
24.06.2009





## திருமதி தியாகராசா வள்ளிநாயகிதேவி

நீங்கள் நடந்த பாதை எல்லாம் அம்மா அம்மா என்று கூப்பிடுகின்றோம்
கேட்கவில்லையா? வேளைக்கு வேளை ருசியாகச் சமைத்து அன்னமிட்ட
கைகளைத் தேடுகின்றோம் - தெரியவில்லையா?
காதிருந்தும் ஏனம்மா செவிடாக இருக்கின்றாய்
கண்ணிருந்தும் ஏனம்மா குருடாக இருக்கின்றாய்
மனிதன் பிறப்பதும் இறப்பதும் நியதிதான் - ஆனால்
எங்களைச் சிறு பிள்ளைகள் போல் வளர்த்த
செல்லமான அம்மாவின் இறப்பை எங்களால் ஏற்க முடியவில்லையே?
பாவிகள் இருவரையும் விட்டு பாசமுள்ளவர்களிடம்
சென்றுவிட்டாயா அம்மா? இது ஆண்டவன் நியதியா இல்லாவிடில்
பாவிகள் எங்களின் தலைவிதியா? உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள்
எல்லோரும் தேடுகின்றார்கள் ஓடோடி வந்திடம்மா எம் அன்னையே!
எம் அம்மாவே..! ஆண்டுகள் எத்தனை சென்றதம்மா அடைந்த துயர் போகவில்லை
உடைந்த மனம் தேறவில்லை பெற்ற தாயே நீங்கள் அருகிருந்தால்
வாழ்வில் பெரும்பேறு வேறு என்ன வேண்டும்? தெய்வத்தின் பேறு பெற்ற
எம் பெரும் தெய்வமே.... எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
என்றும் எங்கள் தாய் நீங்கள் ஈராண்டு கழிந்தாலும்
அம்மா தங்களின் பாச நினைவுகள்
காலத்தால் அழியாது கனவிலும் உம் நினைவே-நீங்கள்
விண்ணுலகு சென்றாலும் விலகாது உம் நினைவு எம் மனதை விட்டு
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*என்றும் உங்கள் நினைவுடன்:*
கணவர், பிள்ளைகள்.

தம்மனை , அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(5346)(48,19,27)

## House Available

On Rent For Immediate Occupation
200m From Jaffna Campus, 3Rooms, 2 Toilets
Water & Electricity
Codntact - 011 2337991, 0778957637

## காணி விற்பனைக்கு

நீர்வேலி அரச கேசரி பிள்ளையார் கோயிலுக்கு பின் வீதியில் குடியிருப்புக்கு உகந்த நான்கு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777425888, 0718132356, 0776111108

## G.C.E (A/L) 2011

CHEMISTRY, BIOLOGY பாடப்பரப்புகள் முடிக்கவில்லையா Past Paper செய்யவில்லையா. Royal, Vishaka பயிற்சிகள் வீடு வந்து கற்பித்தல். அழையுங்கள் வித்யா சுழற்றுங்கள் 0777730838 (Rs. 500/= Per hour) (Tamil - English) Medium.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 09.08.1980 ஆம் ஆண்டு பிறந்த நட்சத்திரம் பூசம் கிரகபாவம் கூடிய தனியார் வங்கியில் பணிபுரியும் (Diploma BCS) மணமகனுக்கு பெற்றோர் படித்த அழகிய மணமகளைத் தேடுகின்றனர்.
*தொடர்பு: 0777699787*

## LAND FOR SALE


யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதிக்கு 15 யார் தூரத்தில் பிரபல பாடசாலைகள் புகையிரத நிலையம் பெரிய ஆஸ்பத்திரிக்கு நடை தூரத்தில் 4 பரப்பு நாற்சதுரக் காணி பழைய வீட்டுடன் சுற்றுமதில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
தரகர் வேண்டாம்.
தொடர்பு: 0777667011, 0112586435
காணி பார்வை நேரம்: காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை



## சந்நிதிமுருகன் அன் ரவல்ஸ்

திருமண மற்றும்
சுற்றுலாவுக்கான பஸ் சேவை

குளிரூட்டப்பட்ட
திருமணக் கார்



Phone: 021 222 8076,
077 711 0199, 077 201 8275

241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோயில் அருகில்)

## மணமகள்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1977 ஆயிலியம், 34¾ பாவம் B.A.(Hons) படித்த பெண்ணுக்கும், 1983 சித்திரை 54¼ பாவம் B.Com, H.N.D.A படித்து முடித்த பெண்ணுக்கும் தகுந்த வரன்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
அ.முத்துமாரி 0774934226
ksutharman @ yahoo.com

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1979ஆம் ஆண்டு, பூரட்டாதி 3, செவ்வாய் தோஷம் இல்லாத கிரகபாவம் 70, பட்டதாரி ஆசிரியைக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். விவாக பொருத்துனர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 021 300 6050

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொ யிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

## இறைச்சிக்கோழி விற்பனை


கல்பேட், புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
விஜயகுமார்
குளப்பிட்டி வீதி , ஆனைக்கோட்டை.

## வீடு வாடகைக்கு

கந்தர்மடம் சந்திக்கு அருகில் 5 அறைகள், விசாலமான வரவேற்பறை, 2 குளியலறைகள், வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கிய சகலவித வசதிகளுடைய வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள், காரியாலயங்கள் விரும்பத்தக்கது.
*தொடர்பு: 0213214422*

## மணமகள் தேவை

1977 ஆம் ஆண்டு பிறந்த, திருவாதிரை நட்சத்திரம், 17 ¾ பாவமுடைய, தனியார் வங்கியில் உயர் பதவிவகிக்கும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: 0779515721
(5374)



*தோற்றம்: 22.07.1954*
*மறைவு: 25.06.2009*

## அமரர் சின்னத்தம்பி நடேசமூர்த்தி *(J.P)*

(இலங்கை வங்கி,
பாதுகாப்பு உத்தியோகத்தர், அச்சுவேலி)
திதி: துதியை

ஈராண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்.

ஆஸ்பத்திரி வீதி,
தோப்பு, அச்சுவேலி.

(5353)(48,23,24)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஜனை

நா. பரமேஸ்வரன்

வலிகாமம் வடக்கிலுள்ள புராதன ஆல யங்களுள் பொற்கலந்தம்பை வைரவர் ஆலயமும் ஒன்று. இங்கு பிரதி செவ் வாய்க்கிழமை மாலைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். இங்கு நடைபெற்ற கூட்டுப் பிரார்த் தனை பற்றி விவரிக்கிறது இந்த நடைச் சித்திரம். எதிர்வரும் மூன்றாம் திகதி பொற்கலந்தம்பை வைரவருக்குக் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

நேரம் ஐந்தரை மணியாகிறது. இன்றைக்கு வசனை (பஜனை). வசனைக்குப் பொக்கலந்தம்பைக்குப் போக வேணும். வசனைக்குப் போனால் ஒன்றரை ரூபா தருவார்கள். ஒன்றரை ரூபாய்க்காக கீரிமலையிலிருந்து பொற்கலந்தம்பைக்கு சைக்கிள் ஓட வேண்டும். நான் போய் தயாபரனை அழைத்துக் கொண்டு புறப்பட்டேன். நான் 'பார்இல்' இருக்க தயாபாரன் சைக்கிளை ஓட்டினான். நாங்கள் பொற்கலந்தம்பை வீட்டையடைந்தபோது ஐயாம்மா கட்டிலில் இருந்தவாறு மண்ணெய் விளக்குக்கு எண்ணெய் விட்டுக் கொண்டிருந்தார். ''உந்த வாங்கிலை சின்னமணி வாத்தியார் தந்த அரிசி கிடக்கு எடுத்துக் கொண்டு போ'' என்றார் ஐயாம்மா. வாங்கிலிருந்த அரிசியை எடுத்துக்கொண்டு கோயிலை நோக்கிப் புறப்பட்டேன். பொற்கலந்தம்பை வைரவர் கோயில் வலிகாமம் வடக்கிலுள்ள புராதன ஆலயங் களுள் ஒன்று (தற்போது இந்தப் பிரதேசம் பொற்கலந் தம்பை, விழிசிட்டி, தையிட்டிப் புலம் கிராமங்கள் வித்தகபுரம் என இலங்கை அரசு சூட்டிய பெயரால் அழைக்கப்படுகின்றன). கோயிலை அடைந்ததும் கிணற்றில் தண்ணீரை அள்ளிக் காலைக் கழுவி விட்டு கோயிலைத் திறந்தேன். இந்தக் கோயில் கிணறு மிகவும் ஆழமான கிணறு. கிணற்றுக்குள் மூன்று பேரை மூடக்கூடிய அளவு தண்ணீர் நிற்கிறது. கிணறு இறைப்பதானால் சாதாரண நீரிறைக்கும் இயந்திரத்தால் இறைக்க முடியாது. செல்லையா அண்ணையின் சில்லுப்பூட்டிய பெரிய வில்லியஸ் 'வாட்டர்பம்மால்' தான் இறைக்கலாம். மடைப்பள்ளியைத் திறந்து பித்தளைச் சட்டியையும் அகப்பையையும் எடுத்து வந்து கிணற்றடியில் வைத்துக் கழுவி விட்டு, கொண்டு போய் அடுப்பில் வைத்துப் பனை ஓலையைக் கொளுத்தி வைத்து இருந்த தென்னம் பாளை, கொக்கரை என்பவற்றை வைத்துப் பனை மட்டையையும் வைத்தேன். அடுப்பு எரியத்தொடங்கியது. ஆதிமூலத்தி னுள் சென்று தூண்டாமணி விளக்கைக் கொளுத்தி விட்டு மடைப்பள்ளிக்குள் போய் தேங்காயை உடைத்து துருவத் தொடங்கினேன். சின்னமணி வாத்தியார் மடைப் பள்ளிக் கதவில் பிடித்த படி ''ஐயா இந்தாங்கோ பால்'' என்றார். எழுந்து பாலை வாங்கி வைத்து விட்டு மறுபடியும் தேங்காயைத் துருவத் தொடங்கினேன். இந்த சின்னமணி மாஸ்ரராலை பெரிய கரைச்சல். முந்தியெல்லாம் வசனைக்குப் புக்கை பொங்கிறேல்லை. வெற்றிலை, பாக்கு, பழம் தான் வைச்சு பூசை பண்ணுறது. இவர் தான் இப்ப வசனைக்கும் புக்கை பொங்கவேணு மெண்டு தொடங்கியிருக்கிறார்.

உலை கொதித்து விட்டது. அரிசியைக் கழுவி இரு கைகளாலும் அள்ளி மூன்று தடவை அடுப்பைச் சுற்றி விட்டு சட்டிக்குள் போட்டேன். கோயில் வாச லுக்கு வந்த போது நடராசா அண்ணை சட்ட விளக்கு களுக்கு எண்ணெய் விட்டு கொளுத்திக் கொண்டிருந் தார். நடராசா அண்ணை போனகையுடன் சாருவும் தங்கைமாரும் வந்து அமர்ந்து தேவாரம் படிக்கத் தொடங்கினர். நான் மடைப்பள்ளிக்குள் சென்று தேங்காய்ப்பூவினுள் தண்ணீரை விட்டுப் பிழிந்து பூவையும் சேர்த்து வெந்து கொண்டிருந்த புக்கைக்குள் போட்டேன். (நாங்கள் வழமையாக பாலைப் பிழிந்து தான் விடுவோம். சின்னமணி வாத்தியார் பூவையும் சேர்த்துப் போட்டுத் தான் பொங்குவார். அத்துடன் வெள்ளைப்புக்கை தான் சின்னமணி வாத்தியாருக்கு விருப்பம். சர்க்கரை கொண்டு வரமாட்டார்.) புக்கையைக் கிளறி இறக்கிய பின் பாலை அடுப்பில் வைத்தேன். புக்கையை கிண்ணங்களுக்குள் போட்டு ஒவ்வொரு சுவாமிக்கு முன்பும் வைத்து விட்டுப் பாலை வார்த்து நாகதம்பிரானுக்குக் கொண்டு போய் வைத்தேன்.

சாரு பூசைக்கு ஆயத்தமா என்றார், நான் ஓம் என்றேன். திருப்புகழுடன் கூட்டுப் பிரார்த்தனையை முடித்தார் சாரு. நான் மணியை அடித்துப் பூசையைத் தொடங்கினேன். பிள்ளையார், வைரவர், முருகன் நந்தி, பலிபீடம் என்பவற்றுக்குப் பூசை செய்து விட்டு அரச மரத்தினுள் இருந்த சிவலிங்கத்துக்குப் பூசை செய்யப் போனேன்.

பொற்கலந்தம்பை வைரவர் கோயிலின் மேற்கு வீதியில் கிணற்றுக்கருகே ஒரு அரச மரமும் வேப்ப மரமும் பின்னிப் பிணைந்தவாறு காணப்படுகின்றன.

அரசும் வேம்பும் பிணைந்திருப்பதைச் சிவனும் அம்மனும் இணைந்திருப்பதாகக் கூறி அந்த மரத்தின் நடுவே ஒரு சிவலிங்கத்தை வைத்து வழிபட்டு வரு கின்றனர் ஊர் மக்கள். இந்த சிவலிங்கத்துக்கு தினமும் அபிடேகம், பூசை எல்லாம் நடைபெறும். (இப்போது புதிதாக வந்த குருக்கள் சிவலிங்கத்தை இடம் மாற்றி விட்டதாகக் கூறப்படுகிறது) காலாதிகாலமாக மரத் தினுள் இருந்த சிவலிங்கத்தை வழிபட்டு வந்த இந்தப் பகுதியில் வாழ்ந்த சைவப் பெரியார்களெல்லாம் முட் டாள்களா என்ற கேள்வி என்னுள் தற்போது எழுகிறது.

நான் சிவலிங்கத்துக்குப் பூசை செய்து விட்டு, நாகதம்பிரானுக்கும் பூசை செய்து விட்டு நாகதம்பிரானுக் குள்ளிருந்த அலுமினியப் பேணிக்குள் பாலை விட்டு கொத்துப் புக்கையையும் கிள்ளிப்போட்டு வாழைப்பழத் தினுள் ஒரு துண்டைப் பிய்த்துப் போட்டு கதவை மூடி னேன். பாம்பு வந்து பால் குடிக்கும் என்பது பக்தர் களின் நம்பிக்கை. அடுத்த நாள் காலையில் கதவைத் திறந்து பார்த்தால் சில சமயங்களில் பால், பழம் வைக் கும் பேணி காலியாயிருக்கும், பல சமயங்களில் அப்ப டியே இருக்கும். சண்டேசுர பூசையை முடித்து விட்டு விபூதி, சந்தனம், பிரசாதம் என்பவற்றைக் கொடுத்த பின் னர் புக்கையைப் பெட்டியுடன் எடுத்து வந்து சின்ன மணிவாத்தியாரிடம் கொடுத்து விட்டுக் கதவுகளைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டேன். தயாபரன் வீட்டு வாசலில் இருந்த அரைச் சுவரில் அமர்ந்து காலை ஆட்டிக்கொண் டிருந்தார். சேர்ட்டை எடுத்து அணிந்து கொண்டு புறப்பட் டோம். கும்மிருட்டு, ஒற்றையடிப் பாதை. தினமும் போய் வந்து பரிச்சயப்பட்டமையால் சைக்கிள் தன் பாட்டில் சென்றது. கருகம்பனை வாசிகசாலைச் சுவரு டன் சைக்கிளைச் சாத்திவிட்டு உள்ளே போனோம். தயாபாரன் ஆசிரியர், ரவி ஆகியோருடன் வெளி மேசையில் அமர்ந்து நாட்டு நடப்புகளை அலசத் தொடங்கினார். நான் உள்ளே போனேன். கதிர்காமநாதன் குப்பி விளக்கை வைத்துக் கொண்டு சிவாஜியின் சாதனைப் பட்டியலைப் படித்துக் கொண்டிருந்தார். நானும் ஆர்வத்துடன் வாங்கிப் படித்தேன்.

நானும் கதிர்காமநாதனும் சரியான சிவாஜி பைத்தியங்கள். ராக்கையில் பேசும் படமும் (சஞ்சிகை) அடுக்கி வைத்திருந்தார். பேசும் படங்களை எடுத்துப் பார்த்து விட்டு மணிக்கூட்டைப் பார்த்தேன் நேரம் 9.30. சரி வாத்தியண்ணை (கதிர்காமநாதனை அப்படித் தான் கூப்பிடுவோம் தகப்பன் ஆசிரியர் என்றபடியால்), போட்டு வாறம் என்று சொல்லி விட்டுச் சைக்கிளை எடுத்துக்கொண்டு கீரிமலை நோக்கிப் புறப்பட்டோம்.

# கண்டங்கத்தரி வயிற்றுப் பொருமலுக்குச் சிறந்த நிவாரணி


## இம்பூறல்

**வேறுபெயர்:-** சாயவேர், சிறுவேர்
**தாவரவியற் பெயர்:-** Oldenlandia umbellate (ஒல்டின்லாண்டியா அம்பலேற்றா)
**குடும்பம்:-** Rubiaceae (ரூபியோசியே)
**சிங்கஸ் பெயர்:-** இம்பூறல்
**சமஸ்கிருதப் பெயர்:-** ரஜன
**ஆங்கிலப் பெயர்:-** Chay Root

முற்காலத்தில் ஆடைகளுக்குச் சாய மேற்றுவதற்கு இதன் வேர் பயன்படுத்தப்பட்டதால் சாய வேர் எனப்படுகிறது. யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் இது ஒரு முக்கிய பணப்பயிராக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இது சிறு துண்டு தனி இலைகள் பூக்கள் சிவப்பு அல்லது வெள்ளை நிறம். இதன் இலையை ஊறவைத்த புழுங்கலரிசியுடன் சேர்த்து அரைத்து ரொட்டியாகத் (தோசைக்கல்லில்) சுட்டுச் சாப்பிட்டுவர தொய்வு, முட்டு, மூச்சிரைப்பு, நாட்பட்ட இருமல் என்பன மாறும். இலைச்சாற்றைப் பாலுடன் கலந்து பருகிவர நெஞ்செரிவு நீங்கும்.

இதன் இலை, தண்டு, வேர் என்பவற்றைக் குடிநீர் செய்து குடித்துவர இரும, இரைப்பு, தொய்வு, சளியுடன் இரத்தம் வருதல் போன்ற நிலைமைகள் தணிவடையும். சளியுடன் இரத்தம் வெளிவரும் நிலைகளுக்கு இம்பூறல் சிறந்தமருந்தாக பயன்படுகிறது. அதனால்தான் ''இம்பூரலை அறியாதவன் இரத்தங்கக்கி செத்தானாம்'' என்று ஒரு பழமொழியும் உள்ளது.



## புலிதுடக்கி

**வேறுபெயர்:-** ஈங்கை, ஈகை, ஈயக் கொழுந்து, இண்டு
**தாவரவியற் பெயர்:-** Mimosoideae (மைமோசொய்டியோ)
**சிங்களப் பெயர்:-** வல் ஹிங்குருபட்ட
**சமஸ்கிருதப் பெயர்:-** ஜனனி

சங்க இலக்கிய நூல்களில் ஈங்கை என்று அழைக்கப்படும் புலிதுடக்கி தற்காலத்தில் இண்டு, இண்டங்கொடி என்று அழைக்கப்படுகிறது. இது முட்கள் நிறைந்த ஒரு கொடி, தண்டு ஓரளவு அடித்திருக்கும். அதில் வளைந்த முட்கள் பல காணப் படும். கூட்டிலைகள் 10-15 பிரிவுகளாக இருக்கும். இலைக்காம்பிலும் முட்களுண்டு. இலைக் கோணத் தில் பூந்துனர் உண்டாகும். பூக்கள் வெண் மஞ்சள்நிறம்.

குழந்தை மருத்துவத்தில் முக்கியமாக பயன்படுகிறது. இதன் இலைச்சாறு சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் குழந்தைகளின் மாந்த நோய்க்கு அருமருந்தாகிறது.

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

ஈயக்கொடீந்து, தூதுவளைஇலை, சங்கன் இலை, திப்பலி, கண்டங்கத்தரி, சுக்கு இவற்றைச் சமவளவில் எடுத்துக் குடிநீர் செய்து பருகிவர வரட்டிருமல்,நாட்பட்ட இருமல், தொண்டைப் புகைச்சல் என்பன நீங்கும்.

## கண்டங்கத்தரி

**வேறு பெயர்-** கண்டங்காரி
**தாவரவியற் பெயர்-** Solanum xanthocarpum (செலோனம் க்சாந்தோகாபம்)
**குடும்பம்-** Solanaceae (சொலனேசியே)
**சிங்களப் பெயர்-** கட்டுவல் பட்டு
**சமஸ்கிரதப் பெயர்-** கண்டல் காரி
**ஆங்கிலப் பெயர்-** Wild Egg Plant

கண்டம் என்றால் தொண்டை, கழுத்து. கத்தரி என்றால் கத்தரித்தல். தொண்டையைப் பற்றிய இருமலை, சளியை வெட்டுவது என்ற பொருளில்



இதற்குக் கண்ட கத்தரி என்று பெயர்.

இது சிறு செடி வகுப்புக் குரியது. நிலத்தை அண்டிப் படர்வது போல காணப்படும்.

இலைகள், தண்டுகள், காயின் காம்பு என்பனவற்றில் முட்கள் காணப்படும். பூக்கள் ஊதாநிறம். காய்கள் சிறியவை. வட்ட வடிவம் பழம் மஞ்சள் நிறம்.

இதன் இலை, காய், பழம், விதை, வேர் என்பன மருத்துவத்தில் பயன்ப்டுகின்றன.

இதன் இலைச் சாற்றுடன் நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி தலைக்கு வைத்து வர தலைவலி, ஒற்றைத்தலைவலி, பீனிசம் என்பன நீங்கும்.

வேரைக் குடி நீரிட்டு அதில் திப்பலிப் பொடியும் தேனும் சேர்த்துப் பருகிவர இருமல், வரட்டிருமல், குரல்கம்மல்,தோண்டைப் புகைச்சல் என்பன நீங்கும்.

இதன் விதையைப் பொடித்துத் தணலில் இட வரும் புகையைப் பற்களில் படச் செய்தால் பல் வலி, வாய் நாற்றம் என்பன நீங்கும்.

காயைக் கறிசமைத்துண்டு வர மலச்சிக்கல், வயிற்றுப் பொருமல் என்பன நீங்கும்.

(தொடரும்...)



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S).
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 169

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| 10 | | 11 | | ■ | 12 | | ■ |
| 13 | | | ■ | 14 | | ■ | 15 |
| | ■ | 16 | | | ■ | 17 | |
| ■ | 18 | | ■ | 19 | 20 | | |
| 21 | | ■ | 22 | | | ■ | |
| 23 | | | | ■ | 24 | | |

அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### இடமிருந்து வலம்

1. காந்தியின் ஆசிரமம்
5.எந்நேரமும்
7.எரிந்தபின் மிஞ்சுவது
8.பார்வைக்கு வைப்பது இங்கு
10.நீங்களும் இவனே
12.கோல்
13. ஓர் அரிசி வகை
14. இரவு/ இருள்
16.இராமரின் புத்திரன்
17.பருந்து வகைப் பட்சி
18.இணக்கத்துக்கான சொல்
19.கூறல்/ சொல்லல்
21.பல வீடுகளில் காலை உணவு இதுதான்.
22. இன்று அல்ல
23.கட்டுப்பாடு இல்லாமல் அலைவது
24.வதங்குதல்

### மேலிருந்து கீழ்

1.சேர்ந்து வாழ்தல்
2.மாப்பிள்ளை, மாமன் - மாமிக்கு கொடுக்கும் வெகுமதி
3.புதல்வன்
4.வலிமை
5.ஒரு பாத்திரம்
6.கணிகை
9.இளம் சமுதாயத்தை இலகுவாகப் பிடிப்பது
11.மண்டையோடு
14.அன்பு கொண்டவன்
15.கொண்டாடுதல்/ நெருங்கி உறவாடல்
17.எவர் என்பதைப் பேச்சு வழக்கில் இப்படியும் அழைப்பர்.
18. வருடம்
20.ஒரு வாசனைப் பொருள்
21.பாவம் செய்தவன்
22. ஆணுமல்ல, பெண்ணுமல்ல

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிர சுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 169**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 13.07.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7.சொற்சிலம்பம்போட்டி இல.169 க்கான விடைகள் 17-07-2011 ஞாயிறு உதயனில் ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

### பாராட்டுப் பெறுவோர்

**கா.வேலுப்பிள்ளை,**
407 ஹொறவ பொத்தான வீதி, இறம்பைக்குளம் வவுனியா.

**திருமதி செ.இரஞ்சிதமலர்,**
புத்தூர் மேற்கு, புத்தூர்.

**க.ஸ்ரீஸ்கந்தராசா,**
'ஸ்ரீஅகம்' சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளர்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படு வதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவ தால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 167 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)அபகரி (4)பதவி (7)பட்டை. (8)மின்னல். (9)வாடி (10)தடி. (11) வாவை. (12)தனிநாடு (14)மான். (15)கத்தரி. (18)துரிதம். (19) குரு. (20) விண்கல். (21)புடம். (22)திடும் (23) தழும்பு

### மேலிருந்து கீழ்

(1)அபவாதம் (2)பட்டினி. (3)கடை. (4)பன் (5)தனவான் (6)வில்லை (8)மிடி. (10)தடுத்தல் (13)நாகரிகம் (14)மாரி (16)தம் (17)கரும்பு (18)துண்டு (19)துடம். (20)விதி. (21)புழு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 1676 இற்கான சரி யான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **து.கிறிஸ்ரபெல்,** 32, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

2 ஆம் பரிசு — **சு.திருப்பரங்கிரிநாதன்,** இமையாணன், உடுப்பிட்டி.

3 ஆம் பரிசு — **ல.சுஜித்தா,** நுணாவில் சந்தி, சாவகச்சேரி.

4 ஆம் பரிசு — **ந.சேர்ச்சிலம்மா,** 02, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

5 ஆம் பரிசு — **த.சாரதாதேவி,** அரசடி வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# வெள்ளைப் ...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதில் சித்தியடைந்து விடுவான் என்ற இனிய எதிர்பார்ப்பும் ஓரிடமும் செல்லாது பரீட்சைக் கென விழுந்து விழுந்து படித்த, இறுக்கமான நிலையில் இருந்து விடுபட்ட நிலைமையும் உல்லாசமாகப் புறாவுடன் பொழுதைக் கழிக்கத் தூண்டியது.

அன்பாக ஆசையாக வளர்த்த வெள்ளைப் புறா, இரண்டு மூன்று நாள்களாக மதனின் கூட்டுக்குத் திரும்பவில்லை. இப்போ திரும்பி வரும் பின்னர் திரும்பி வரும் என்று ஆசை யோடு எதிர்பார்த்தான். ஏமாற்றம் தான் மிச்சம்.

மயூரன்தான் கை தட்டித் தனது புறாவை இறக்கித் தனது கூட்டில் வைத்திருக்கிறான் என்ற செய்தி மதனின் காதுகளுக்கு எட்டியது. மயூரன் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. தனது வீட்டில் சொல்லாமல் மயூரனின் வீடு நோக்கி ஓடினான். அங்கே அவன் வளர்த்த வெள்ளைப் புறா , கம்பி வலைக் கூட்டினுள் இருந்து மதனுக்குக் கண் சிமிட்டியது. கழுத்தை வெட்டி ஒரு பார்வை பார்த்தது.

அது தனது புறா. அதனைத் தருமாறு கேட்டன் மதன். 'தரமாட்டன்' என்றான் மயூரன். பக்கத்தில் இருந்த தடியை எடுத்து 'பளார்' என விட்டான் ஒரு அடி மயூரனுக்கு. கண்ணுக் கருகே, இமையடி பிளந்து இரத்தம் செட்டவே, பயத்தில் தனது வீடு நோக்கிப் பறந்தான் மதன்.

மகனின் அவலக்குரல் கேட்டு ஓடிவந்த மகேசன், மயூரனைக் கண்டு பதறிப்போனார். தான் கைநீட்டி அடித்துவளர்க்காத மகன், கன்னம் பிளந்து, இரத்தம் வடிய, வழிய அழுதுகொண்டு நிற்பதைக்கண்டு சினங் கொண்டார். வெகுண்டெழுந்தார். மதனின் வீடுநோக்கிச் சென்று, பிரளயப்படுத்தி விட்டார்.

இப்போ மதன்- மயூரன் குடும்பத்தினர் ஒருவருடன் ஒருவர் ஐக்கியமில்லை, உற வில்லை. உட்பகை ஊறிக்கொண்டே இருந்தது. குழாயடியில் இருவரின் தாயார்மாரும் எதிரும், புதிரும்தான். தெருவில் குறுக்கு மறுக்காக மதன்-மயூரன் தந்தைமார் சைக்கிளில் சந்தித்தால், ஒரு செருமல், ஒரு இருமல், காறி உமிழ்தல்......

நீண்டநாள்களாகச் சந்திக்காமல் இருந்த மதனும், மயூரனும் குளத்தடிப் பிள்ளையார் கோயில் வயல்வெளியில் சந்தித்துக் கொண்டனர். மதனின் கையிலிருந்த சிவப்பு, மஞ்சள் வர்ணக்கடதாசியால் ஒட்டப்பட்டி ருந்த பட்டமும், அது தனது நீண்ட வாலை அழகாக அசைத்து, 'கிர்' என்று வானத்தில் எழுந்த கவர்ச்சியும் மயூரனைக் கிறங்க வைத்தது. ஆட்கொண்டது.

ஓடிச்சென்று மதன் இழுத்துக் கொண் டோடிய பட்டத்தின் நூலை ஆசையாகத் தொட்டான் மயூரன். தான் இழுத்துச்சென்ற பட்டத்தின் நூலை மயூரனிடம் கொடுத்து, "ஓடு, ஓடு. காத்து நிண்டிடப் போகுது. பட்டம் விழப்போகுது. ஓடு....ஓடு" என உற்சாகப்படுத்தினான் மதன். அதனை மரத்தின் மீதிருந்து மயூரன்-மதனின் வெள் ளைப்புறா அமைதியாக இரசித்துக்கொண்டு இருந்தது.

விர்ரென்று வானில் பறந்த பட்டம், வால் போதாமையினால் தலைகீழாக நேராக குத்தி விழவே, படக்கென்று வண்ணக் கடதாசி கிழிந்தது. மதனும், மயூரனும் பதற்றத்துட னும், கவலையுடனும் வீழ்ந்த பட்டத்தை நோக்கி ஓடினர். வயல் வேலை செய்துகொண்டி ருந்த மகேசன் இவர்களின் உறவைப்பார்த்து வியந்தார்.

இரண்டு மணியாகியும் மத்தியானச் சாப்பாட்டுக்கு மதன் வராமலிருக்கவே தேடிவந்த மதனின் தந்தை, மயூரனும், மதனும் தென்னை மர நிழலில் இருந்து பட்டத்தைச் சீர்செய்துகொண்டிருப்பதையும், மகேசன் அதனை இரசித்துக்கொண்டிருப்பத னையும் கண்டார். மகேசனின் கண்களும், மதனின் தந்தையின் கண்களும் சந்தித்த போது- இருவரின் உதட்டிலும் புன்னகை பூத்தது.

மரத்திலிருந்த வெள்ளைப் புறாவும் [illegible]
[illegible] குறுகுறுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகள் பலவிதம்,,,

✱பறவைகளில் மிகப் பெரிய முட்டையிடும் பறவை தீக் கோழி ஆகும்.

✱பறவைகளில் தன் உடலமைப்புடன் ஒப்பிடும்போது மிகப்பெரிய முட்டையிடும் பறவை கிவி பறவை. கிவி பறவையின் முட்டை அதன் உடம்புடன் ஒப்படும்போது 1/3 பங்காகும்.

✱ பறவைகளின் முட்டைகளில், தீக்கோழியின் முட்டை யானது மிகக் கெட்டியான ஓட்டைக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக இதனை வேக வைப்பதற்கு 2 மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றதாம்.

✱ பறவைகளில் மிகச்சிறிய முட்டையிடும் பறவை ஹம்மிங்பேர்ட் பறவை. இதன் முட்டையின் நீளம் 0.39 அங்குலம்.


✱ Royal Albatross பறவைகள் அடைகாத்து அதன் முட்டை யிலிருந்து குஞ்சுகள் வெளியாவதற்கு 79 நாள்கள் தேவைப் படுகின்றன.

✱ Albatross பறவைகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவைதான் முட்டையிடுகின்றதாம்.

✱ பூமியிலிருந்து முற்றாக அழிவடைந்துபோன மடகாஸ் கரின் யானைப் பறவையானது 27பவுண்டுகளுக்கும் அதிக மான நிறையில் முட்டையிட்டதாம்.

✱ முட்டையிடும் ஒரு சராசரி பேட்டுக் கோழியானது வருடாந்தம் 257 முட்டைகளை இடுகின்றதாம்.

✱ சாதாரணமாக ஒரு முட்டையின் நிறையில் 12சதவீத வகிபாகத்தை முட்டையின் மேல் ஓடானது பெறுகின்றது.



# தெல்லிப்பழை மேற்கு வித்தகபுரம் பொற்கலம்தம்பை
# ஸ்ரீ ஞானவைரவர் ஆலய
# மஹா கும்பாபிஷேகச் சிறப்புமலர்
## 03.07.2011



## செஞ்சொற் செல்வரின் ஆசியுரை



தெய்வீகம் நிறைந்த பூமி தெல்லிப்பழை. இந்தத் திருநகரின் தென்மேற்குத் திசையின் காவல் தெய்வமாக வீற்றிருந்து அருள்பாலிப்பவர் வித்தகபுரம் பொற்கலன்தம்பை ஞானவைரவர். பெருமான் திருத்தலத்தை தரிசிக்க முடியாது போன பக்தர்கள் அகத்தில் சுமந்து அனுதினமும் வழிபட்டனர். ஊரை விட்டுப்புறப்பட்டு பல திசைகளிலும் உறவுகள் பிரிந்து வாழ்ந்த போதிலும் தங்கள் குல தெய்வங்களின் நினைப்பைக் கைவிடாத பண்பாட்டை மக்கள் கொண்டிருந்தனர்.

தற்போது வித்தகபுரம் செல்லும் அனுமதி கிடைத்தவுடன் தங்கள் இருப்பிடங்களைத் துப்புரவு செய்யமுன் இஷ்ட தெய்வமாக விளங்கும் வைரவப்பெருமானின் திருக்கோயிலை புனரமைத்து மஹா கும்பாபிஷேகம் நிறைவேற்றுவது மெச்சத்தக்க விடயமாகும். ஊரை ஒன்றுபடுத்தும் உன்னத நிலையம் திருக்கோயில். தங்களை வாழவைத்த குலதெய்வத்தை மறவாத நன்றியுடைய பக்தர்களை வாழ்த்துகின்றேன். எல்லாம் வல்ல வைரவப் பெருமானின் அருட் கடாட்சம் வித்தகபுரத்தின் மேன்மைகளை என்றும் காக்கப் பிரார்த்தித்து வாழ்த்துக் கூறி அமைகின்றேன்.

ஆறு. திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## சிவாச்சாரியாரின் ஆசியுரை

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழிக்கு ஏற்ப முன்னோர்களால் வழிபாடு இயற்றப்பட்ட தெய்வம்தான் பொற்கலந்தம்பை ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஆவார். இப்பெருமானுக்குரிய ஆலயம் யுத்தம் காரணமாக சுமார் 20 வருடங்கள் வழிபடமுடியாது இருந்தது.

எனினும் எம் பெருமான் இந்த ஆலய அடியார்களின் உள்ளத்தில் உறைந்து நிறைந்திருந்தமையால் தற்போது ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டும் புதுப்பித்தும் மெருகூட்டியும் இன்று கும்பாபிஷேகம் நிகழ ஞானவைரவப் பெருமானின் திருவருள் கிடைத்துள்ளது. அடியார்கள் யாவரும் எம் பெருமானின் கும்பாபிஷேகத்தைத் கண்டு களித்து எல்லா நலன்களும் எல்லோரும் பெற்று ஆனந்தமாய் வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ ஞான வைரவப் பெருமானை வணங்கி ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ சண்முகராசா,
ஆலயச் சிவாச்சாரியார்.

## பொற்கலம்தம்பை அருள் ஞானவைரவரே அருள் தாரீர்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் தெல்லிப்பழை என்னும் ஊர் மேவும் பொற்கலந்தம்பைப் பதியிலே எழுந்தருளி நாடிவரும் அடியார்களுக்கு வரங்களையீந்து நல் வாழ்வு நல்கி அருள் பாலித்துக்கொண்டிருக்கிறார். அந்த அடியார்களுக்கும் ஞானவைரப் பெருமானுக்கும் பெருஞ்சாந்தி எனப்படும் மஹா கும்பாபிஷேகம் இன்று வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளதை எண்ணும்போது மனம் இன்பப் பக்தி உணர்வினால் உந்தப்பட்டு இறும்பூதெய்துகின்றது.

காவல் தெய்வமாக மிளிர்கின்ற ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் எங்களையெல்லாம் துன்பத்தினின்றும் காத்தருளி ரட்சித்து அருள்புரிகின்றார். இப்பொன்னான நன்நாளிலே அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வு நல்கவேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து ஞானவைவரப் பெருமானின் மலர் பாதங்களை வணங்கி அமைகின்றேன்.

"நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு"

தி.செல்வரத்தினம், செயலாளர்.

## தொண்டன் உரை

"பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவன்
குருதியு மகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்"

எம்பெருமான் ஞானவைரவர் எம்பதியிலே இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளாய் வீற்றிருந்து எமையெல்லாம் இரட்சித்துக் காத்தருளும் பேறு எம்பெரும் பேறு. நாற்கரையும் கல்விளைந்த பூமி. ஆனால் கோயில் சூழவுள்ள 35 இக்கும் மேற்பட்ட அடி ஆழக் களிமண்ணானது. எம்பெருமானின் புதுமை அன்றோ. இந்தக் கோயில்கீழ் ஏழு கிடாரம் பொன் உண்டு என்று அரசர் காலந் தொட்டு இன்றுவரை ஒரு ஐதீகம்கூட உண்டு.

ஆல், அரசு, அருளி, புளி என இன்னோரன்ன விருட்சங்கள் சூழ்ந்த எமபெருமான் ஆலயம் இன்று போரனர்த்தத்தால் ஆல், அரசு, அருளி விருட்சங்கள் இழந்து போனமை மனக்குறையே. போதாக்குறைக்கு மூலஸ்தானம் தவிர்ந்த ஏனைய விக்கிரகங்கள் களவாடப்பட்டமை எம் துர்ப்பாக்கியம்.

ஓலைக் கொட்டிலாய்ப் பலநூறு வருடங்கள் எம்பெருமான் வாசஸ்தலமிருந்த நிலை 32 வருடங்களுக்கு முன் கட்டடமாய் மாறிக் கடந்த காலங்களில் சூனியப் பிரதேசமாயிருந்த இந்தப் பெருமிகு ஆலயத்தின் நிர்வாகசபை உறுப்பினரால் என் தந்தை இருந்த போது தற்பானந்தக் குருக்கள் ஆசியுடன் பாலஸ்தாபனம் நடந்த வேளை எருது கட்டியிழுக்கும் பெரும்பேறு பெற்ற நான் இன்றளவும் பதினான்கு ஆயலங்களின் பாலஸ்தாபனத்தின் போது எருது கட்டியிழுக்கும் பாக்கியம் பெற்றதும் எம்பெருமான் கிருபையே.

பல தசாப்தங்களின் பின் இன்று மக்களது பூரண ஒத்துழைப்பின் மூலம் எம்பெருமானுக்குக் கிணறு, வசந்த மண்டபம், மணி மண்டபம், மடப்பள்ளி, வாகனசாலை, லிங்கம், தண்ணீர்த் தொட்டி எனப்பல கட்டப்பட்டதும் எம்பெருமான் கிருபையே. 29.06.2011 காலை 9 மணி தொடங்கி 03.07.2011 காலை 9 மணி முதல் முற்பகல் 10.30 மணி வரை நடைபெறும் மஹா கும்பாபிஷேகத்திலும் கலந்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்ய வேண்டி அமைகின்றேன்.

தொண்டன் செ.யோகநாதன்.

## ஆலய வரலாறு

நம் முன்னோர்களினால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தெல்லிப்பழை மேற்கு பொற்கலம்தம்பை எனும் பதியிலே சிறு ஓலைக் குடிசையிலே சூலம் வைத்து வைரவப் பெருமானை வணங்கி வந்ததாக பரம்பரைக் கதைகள் மூலம் அறிய முடிகின்றது. வீரசைவ பரம்பரையினரால் பூசைகள் நடத்தப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆலயத்துக்கு அருகில் நிலத்தின்கீழ் அதனைத் தோண்டி எடுப்பதற்கு முயற்சித்தபோது கருங்குழவிகள் கொட்டியதால் நிறைவேறாமல் போனதாகவும் மரபு வழிக்கதைகள் மூலம் அறியப்படுகின்றது. இவ்வாறு வெட்டப்பட்ட குழியே தற்போது குளமாக தோற்றப்படுவதாகக் கருதப்படுகின்றது. இந்த ஆலயத்தின் அருகே புளியமரங்களும் சிறுகுளமும் அமைந்துள்ளமை மரபு வழிக் கவிதைகளில் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

1977இல் சூலத்துக்குப் பதிலாக வைரவப் பெருமானின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் 1990இல் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தற்போது சுமார் 20 வருடங்கள் யுத்தம் நடைபெற்று முடிந்து மக்கள் மீள் குடியேற ஆரம்பித்து ஆலயம் புதுப்பித்தும் மெருகூட்டப்பட்டும் மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெற ஞானவைரவப் பெருமானின் திருவருள் கைகூடியுள்ளது.

## தலைவரின் ஆசிச் செய்தி



எங்களுக்கெல்லாம் காவற் தெய்வமாக எழுந்தருளி வீற்றிருக்கின்ற பொக்கலந்தம்பை ஸ்ரீ ஞான வைரவப் பெருமானின் அழகிய ஆலயத்தைப் புதுப்பொலிவுடன் அமைத்து எம்பெருமான் நல்லருள் பாலிக்க இன்று மஹா கும்பாபிஷேகம் என்று சொல்லப்படுகின்ற குடமுழுக்கு விழா நடைபெறுகின்றது.

இந்தப் பகுதி மக்கள் மீள்குடியேற்றப்பட்டு குறுகிய காலப் பகுதியில் வைரவப் பெருமானுக்கு அடியார்களதும் பொது மக்களதும் பூரண ஒத்துழைப்பாலும் வைரவப் பெருமான் மீது கொண்ட பற்றினாலும் தாமாகவே முன்வந்து தங்களால் இயன்ற உதவிகளைச் செய்துள்ளார்கள்.

மிகச் சிறப்பாக புனரமைக்கப்பட்ட வைரவப் பெருமானுக்கு பஞ்சகுண்டபக்ஷ புனருத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது. இன்றைய நன்நாளில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

"வரம் தந்தருள்வாய் வைரவப் பெருமானே"

சு.சிவபாதரத்தினம், தலைவர்
ஆலய பரிபாலன சபை.

விளம்பர அனுசரணை




## பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசிச்செய்தி



அற்புதத்தில் அற்புதமான சிவ அவதாரம் வைரவ அவதாரம். ஒரு சமயம் மஹாமேரு மலையிலே தேவர்கள் ஒன்று கூடி வழிபட்டனர். அந்தச் சமயம் ஆதியும் அந்தமும் இல்லா முழுமுதலாக விளங்குபவர். யார் என வினவ பிரம்மதேவர் எழுந்து தானே முழுமுதற் தலைவர் எனத் துணிந்து கூறினார்.

விஷ்ணுமூர்த்தியும் ஆணவ மேலீட்டால் தாமே பிரமனென வாதிட்டார். பரப்பிரமத்தை உதறித்தள்ளி அறிவும் பொருளும் நமக்கே இந்த உலகில் முதன்மையானது என இந்த உலகத்தோர் வாதிடுவது போன்றிருந்தது. ஆனால் வேதங்கள் ஐயா என ஓங்கி நிற்க முழுமுதல் தாமே என சிவனே வெளிப்பட்டு நின்று உணர்த்தியும் பிரம்மா, விஷ்ணுவுக்கு அகந்தை நீங்கவில்லை. இறைவன் சோதியாய் இவர்கள் நடுவில் தோன்றினார். பின்பும் அகந்தை நீக்க வேண்டி அம்மை அப்பனாய் கைலையில் இருந்தருளும் கோலத்தைக் காட்டினார். உடனே விஷ்ணுமூர்த்திக்கு நல்லறிவு தோன்ற எழுந்து எம் பெருமானை வணங்கினார்.

ஆனால் பிரம்மதேவர் ஆணவ மேலீட்டால் தமது உச்சித் தலையால் சிவநிந்தனை செய்தார். இந்தச் சந்தர்ப்பத்திலேயே எம் பெருமான் வைரவக் கடவுளை தோற்றுவித்து பிரம்மதேவன் அகந்தையை மாற்றத் திருவுளம் கொண்டார். இவ்வாறு சிவநிந்தனை செய்யுதம் ஆணவ மலமுடையோரை ஆட்கொள்ள வேண்டி வித்தகபுரம் பொற்கலம்தம்பைப் பதியில் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் எழுந்தருளி நல்லருள் பாலித்து வருகிறார். எம் பெருமானுக்கு 03.07.2011 அன்று புதுப்பித்து மெருகூட்டப்பட்ட ஆலயத்தில் புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது நாம்செய்த நற்பயனே. அனைத்து அடியவரும் எம் பெருமான் கும்பாபிஷேகச் சிறப்புக்கண்டு பிறவிப்பயன் அடைய ஆசி கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ நவரத்தின பிரபுதேவக் குருக்கள்.

## சர்வபோதகாசிரியரின் ஆசிச் செய்தி



நீக்கமற எங்கும் நிறைந்து எல்லாமாய் இருக்கும் இறைவன் குணம் குறிகளைக் கடந்தவனாய் திகழ்கின்றார். ஆட்டுவித்தால் யாரொரு வர் ஆடாதாரோ என இந்த உலகம் இயங்குகின்றது.

குணங்கள் அற்ற ஒரு நாமம், ஓர் உருவம் அற்ற இறைவனுக்கு குணம் குறிகளும் குட்டி கோயிலும் கட்டி ஆயிரம் திருநாமம் பாடி வணங்குகின்றோம். சிற்றறிவுடைய ஆன்மாக்களுக்கு எளிதில் புலப்படும் படியாக குணம் குறிகள் ஆகமங்களில் வகுக்கப்பட்டுள்ளன. நுணுகி அறிபவர்களுக்கு மட்டும் அவன் சூக்கும உணர்வு நன்கு விளங்கும்.

இவ்வாறு ஜீர்ணோத்தாரணம் செய்து புதுக்கி மெருகூட்டப்பட்ட ஆலயத்தில் வரித்தல், சுத்திகரித்தல், விக்கிரகப் பிரதிஷ்டை, மித்சக்கிரகணம், யாகபூசை, கும்பாபிஷேகம், மஹாபிஷேகம், மண்டாபிஷேகம் என்னும் அஷ்ட கிரியைகள் மூலம் வித்தகபுரம் பொற்கலந்தம்பை ஸ்ரீ ஞானவைரவப் பெருமானுக்கு பெரும் சாந்தி கிரியை நடைபெறுவது நாம் செய்த புண்ணிய பலனே.

எம்பெருமானின் குடமுழுக்கு காணாது எம்பரவிப் பிணி தீராது. ஆகவே பொற்கலந்தம்பை ஸ்ரீ ஞானவைரவப் பெரு மான் கும்பாபிஷேகத்தைத் தரிசித்து அனைத்து பேறுகளும் பெற்று பெருவாழ்வு வாழ ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ கி.உருத்திரபுரேஸ்வரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களுக்குச் செலவிடும் பணத்தில் சிறுதொகையை ஒதுக்கினால் போதும்...




யாழ். போதனா வைத்தியசாலை இதய சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்ட நோயாளி ஒருவர், அங்கு அவர் கண்ட அனுபவங்களின் வெளிப்பாடாக 5 லட்சம் ரூபா பணத்தை யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்தி நிதியம் ஊடாக இதய சிகிச்சைப் பிரிவுக்குக் கையளித்துள்ளார். பல அமைப்புகள் நிறுவனங்கள் பணத்தை அன்பளிப்புச் செய்த போதிலும் யாழ்ப்பாணத்தில் தனிநபர் ஒருவர் இவ்வளவு பணத் தொகையை அன்பளிப்பாக வழங்கியமை இதுவே முதற் தடவையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது மற்றவர்களுக்கு ஒரு முன்னுதாரணமும் கூட. அவர் யாழ்ப்பாணத்தின் பிரபல உயிரியல் ஆசிரியர் என்பதுடன் பலாலி ஆசிரியர் கலாசாலையில் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. அவர் தனது பெயரைக்குறிப்பிட விரும்பவில்லை.

தான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது தன்னைப் போன்றும் ஒருவர் இவ்வாறு அதே சிகிச்சைக்காகக் கொழும்பு செல்வதே சிறந்தது என வைத்தியர்கள் சிபாரிசு செய்யத் தனக்கு மேலதிக சிகிச்சைக்குச் செல்வதற்கான வசதி இருந்ததால் சென்றதாகவும் மற்றவர் ஏதோ மருந்து எடுத்துக் கொண்டு இருக்கும்வரை இருப்போம் என்று சொன்னதாகவும் கூறி அது தனது மனதில் ஆழம் பதித்து இதற்கான தாக்கத்தை ஏற்படுத்த ஒரு காரணம் என்றும் தெரிவித்தார்.

இந்தியா, கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் சிகிச்சை பெற்ற அனுபவங்கள் உண்டு எனவும் கூறினார். இந்தியாவில் பணம் என்பதே முக்கியத்துவம் பெறுகிறது. மனித உணர்வோ மனிதாபிமான சேவையோ அங்கு பணத்துக்கேற்ற அளவு கிடைப்பதில்லை. கொழும்பில் பணத்துக்கேற்ப அவர்களது சேவை கிடைக்கிறது. ஆனால், யாழ்ப்பாணத்தில் பணத்துக்கு ஏற்ற அளவிலும் பார்க்க சேவை உயர்ந்து காணப்படுகின்றது என்றும் அவர் கூறினார். அரசு வழங்கும் நிதிக்கு அப்பாலும் வைத்தியசாலையில் தேவை ஏற்படுகின்றது. சில நோயாளிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் சில சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும். அப்படியான முடிவுகளை எடுப்பதற்கு சில ஆய்வுகள் அவசியமாகிறது. அந்த ஆய்வு தனக்கும் தேவைப்பட்ட போது அதை வைத்தியசாலையில் செய்யக் கூடிய நிலை காணப்படவில்லை. (அந்த இரசாயனப் பொருள் முடிவடைந்து விட்டது). எனவே பணம் இருந்ததால் சடுதியாக அந்தச் சோதனையை வெளியே செய்து உடனடியாகச் சிகிச்சை பெறக்கூடிய தாக இருந்தது. அன்று பணம் இல்லாத ஒருவருக்கு அப்படியான ஒரு நிலை ஏற்பட்டிருந்தால் வாழ்க்கை ஒரு கேள்விக் குறியாகி இருக்கும்.- என்றார்.

நோயாளிகள் பொதுவாக நோய்வாய்ப்பட்ட போது தாம் சுகமாகினால் குறிப்பிட்ட ஆலயத்துக்கு நேர்த்தி வைத்து அபிஷேகமும் பூசையும் செய்வார்கள். அது போன்றே தானும் ஒரு நேர்த்தி வைத்தது போன்றே செயற்பட்டதாகவும் கூறினார். தனது சிகிச்சை வெற்றியளித்தால் அதற்குரிய பணத்தொகையை இப்படியான இதய நோயாளிகளின் நலனுக்குப் பயன்பட வேண்டும் என்றும் அது இன்று நிறைவேறுவதாகவும் கூறி மகிழ்ந்தார்.

பணம் படைத்தவர்கள் வாழ்வதற்கான உலகமாக இல்லாமல் மாற்றம் காண்பதற்கு இப்படியான நல் உள்ளங்களது நன்கொடைகள் தேவையே. இப்படியான செயற்பாடுகள் அதிகரிக்குமானால் எல்லோரும் வாழும் உலகம் மலரும் எனலாம்.

(இப்படியான உணர்வு இவருக்கு ஏற்பட இதய சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களது சேவையும் ஒரு காரணமாகின்றது. இப்படியான சேவை உணர்வு அனைவரிடமும் காணப்படுமானால் நம்பிக்கையுடன் உணர்வு பூர்வமாக அர்ப்பணிப்புக்கள் வழங்க முன்வருவார்கள் எனவும் நம்பலாம்).

2005மே 18ஆம் திகதி இதய சிகிச்சைப் பிரிவு யாழ். போதனா வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. எக்கோ இயந்திரம், இதய சிகிச்சைப் பிரிவு நிலையம் போன்றவற்றை நிர்மாணிக்க ஜி.ஆர். ஹன்டி ஞாபகார்த்த நம்பிக்கை நிதியம் 24 மில்லியன் ரூபாவை அன்பளிப்பாக வழங்கி இருந்தது.

இதய சிகிச்சை விசேட விடுதி நிர்மாணிக்க 2008 மே 18 இல் யாழ். அரச அதிபர் நிதியத்திலிருந்து கிடைக்கப்பெற்றது. அதற்குரிய விஷேட கட்டில்கள் மற்றும் அனைத்துப் பெறுமதி வாய்ந்த இதய சிகிச்சை உபகரணங்களை அமெரிக்காவில் உள்ள ஐ.எம்.எச்.ஓ., இலங்கை வங்கி, லயன்ஸ் கழகம் ஆகியன வழங்கி இருந்தன.

இதுமட்டுமல்லாமல் 24 மணிநேர இதய அழுத்தம் அளவிடும் கருவிகள், எடுத்துச் செல்லக்கூடிய எக்கோ இயந்திரம், ரி.பி.எம். இயந்திரம் மற்றும் உபகரணங்களை அமெரிக்காவில் உள்ள வைத்தியர்கள், புலம்பெயர்ந்தவர்கள், நோயாளிகள் நலன்விரும்பிகளுடைய ஆதரவில் கிடைக்கப்பெற்று வருகின்றன.

இதய கத்தீற்றா ஆய்வுகூடம் பிரமாண்டமான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் வாரங்களில் இது பரீட்சாத்தமாக இயங்க ஆரம்பிக்கும் என நம்பப்படுகிறது. இதற்குரிய கட்டடங்களை யு.என்.டி.பி., ஐ.எம்.எச்.ஓ. என்பன அமைத்துக் கொடுத்துள்ளன. உபகரணங்களைப் பிரான்ஸ் அரசு இலங்கைக்கு கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது.

இப்படியாக 20 மில்லியன் ரூபா பெறுமதியான இதய சிகிச்சை உபகரணங்கள் அன்பளிப்பாகவே கிடைக்கப் பெற்றுள்ளன. கொழும்பு தேசிய வைத்திய சாலையை அடுத்து இலங்கையில் வைத்திய வசதிகளுடன் கூடிய அரச இதய சிகிச்சைப் பிரிவு யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே இயங்கி வருகிறது. இதற்கு அங்கு கடமையாற்றும் இதய வைத்திய நிபுணரது முயற்சியுடன் பல நல் உள்ளங்களின் அன்பளிப்புகளும் நன்கொடைகளுமே காரணமாகி உள்ளன. வழிபாட்டுத் தலங்களுக்கு செல விடும் பணத்தின் 10 சதவீதம் வைத்தியசாலைக்குக் கிடைக்கப் பெறுமாயின் யாழ்.போதனா வைத்திய சாலை மேலும் தரத்தில் உயர்ந்து யாழ். மக்களைக் காக்கும் எனலாம். இது போன்று மேலும் நன் கொடைகள் கிடைக்கப்பெறும் போது மேலும் யாழ். போதனா வைத்தியசாலை இதய சிகிச்சைப் பிரிவு வளம்பெறும்.

**பஞ்சவர்ணன்**

யாழ்ப்பாணத்தின் மருத்துவக் களம் கொஞ்சம் கொஞ்சமாக வர்த்தக மயப்பட்டு வரும் சூழலில் போதனா வைத்திய சாலையின் சிகிச்சை நோயாளிக்கு திருப்திகரமாக இருந்திருக்கிறது என்பது பெரிதும் வரவேற்புக்குரியது. போதனா வைத்திய சாலையின் மொத்த சேவையும் இவ்வாறு நோயாளரின் வரவேற்பைப் பெறும் போது அவர்கள் தனியார் வைத்தியசாலையை நாடுவது குறையும். ★

# புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை?

## புற்றுநோய் விழிப்புணர்வுத் தொடர் 3

வடபகுதியில் மக்களிடையே புற்றுநோய் இப்போது வெகுவேகமாகப் பரவி வருகிறது. இந்த உயிர்க்கொல்லி நோயைக் குணமாக்குவதற்கான பல நவீன சிகிச்சை முறைகள் இப்போது அறிமுகமாகியுள்ளன. ஆனால் புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்குச் செல்வதால், அதனைக் குணமாக்குவதில் வைத்தியப் பகுதியினர் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது. குடாநாட்டில் புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு வேண்டிய இருநூறு (200) மில்லியன் ரூபாவைத் திரட்டும் இலக்குடன் காலி, தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரை "(TRAIL) அடிச்சுவடு பாதை நடை பயணம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில் மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் பெருநோக்குடன் உதயனில் இக்கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது.

**1) வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்:-**


உலகளாவிய ரீதியில் வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்தே வருகின்றது. விளக்கப்படம்-1 இல் உலக சனத் தொகைப் பரம்பல் ஆண், பெண்பாலாரிடையே அதிகரிக்கும் வயோதிபர் எண்ணிக்கையை காட்டுகின்றது. வயோதிப காலத்தில், உடலின் கலங்கள் உடலின் கட்டுப்பாட்டுக்கு அமைவாக அன்றி செயற்படுவதால் அசாதாரண வளர்ச்சிகள் ஏற்படுகின்றது. விளக்கப்படங்கள் 2 மற்றும் 3 ஆனவை ஆண்கள், பெண்களில் புற்று நோயின் தாக்கம் அதிக வயதானவர்களில் ஏற்படுவதைக் காட்டுகின்றன.

**2) தனி நபர் சார்ந்த பழக்க வழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள்:**

I. புகையிலை பாவித்தல்- இதனைப் புகைப்பதனாலோ அருகிலிருந்து உள் வாங்குவதினாலோ அல்லது இதனை பாக்கு, சுண்ணாம்புடன் உட்கொள்வதனாலோ புற்று நோய் குறிப்பாக, நுரையீரல், வாய் தொண்டை மற்றும் களப்பகுதியில் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன.


II. மதுபானம் அருந்துதல்- இதன் இரசாயன மற்றும் எரிவுத் தாக்கத்தால் வாய், தொண்டை களப்புற்று நோய் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. அத்துடன் இதனால் ஈரல் பாதிப்புற்று ஈற்றில் ஈரல் புற்றநோய் ஏற்படும்.

111. பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு போன்றவற்றை வெற்றிலையுடன் உட்கொள்ளல். இவை வாய், தொண்டை, களப்புற்று நோய்களை அதிக அளவில் ஏற்படுத்தும்.




IV. வாய்ச் சுகாதாரமின்மை மற் றும் ஒழுங்கற்ற பற்களால் அல்லது சரியான அளவில் செய்யப்படாத செயற்கைப் பற்களால் ஏற்படும் தொடர் உறுத்துதல் என்பனவும் வாய்ப்புற்று நோயை ஏற்படுத்தும்.

V. மாறுபட்ட உணவுப் பழக்க வழக்கங்கள், அதிக கொழுப்பு அடங்கிய உணவு, அதிகமாக உப்பிட்ட உணவு, பொரித்த, கருக்கிய உணவுகள், நிற மூட்டிய உணவுகள் மற்றும் உறைப்பான உணவுகள் என்பன, பலவகையான புற்று நோய்களை குறிப்பாக மார்பகப் புற்றுநோய், குடற்புற்று நோய் மற்றும் களப்புற்று நோயை ஏற்படுத்துகின்றன.





படம்:2

VI. போதைப் பொருள் பாவனை மற்றும் கட்டுப்பாடற்ற/ பாதுகாப்பற்ற பாலியல் பழக்கவழக்கங்கள் இவை குறிப்பாக வைரசுக்களால் ஏற்படும் புற்றுநோய் களை அதிகரிக்கின்றன. உதாரணமாக பாலுண்ணி வைரஸ் (Human Papilloma Virus) பெண்களின் கருப்பைக் கழுத் துப் புற்றுநோயை அதிக அளவில் ஏற்படுத்துகின்றது. ஈரல் அழற்சி வைரஸ் (Hepatitis Virus B,C) மூலமாக ஈரல் புற்றுநோய் ஏற்படுகின்றது. AIDS நோயுடன் தொடர்பாகவும் புற்றுநோய்கள், குறிப்பாகக் குதப் புற்று நோய், கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் மற்றும் நிணநீர் கணுப் புற்றுநோய் ஏற்படுகின்றன.

**3) சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்கள்**

1.நகரமயமாக்கலும் பல்வேறு வகையான சூழல் மாசடைதலும்.

11. தொழிற்சாலைகள் உருவாக்கப்படலும் அதன் இரசாயன,பௌதீக கழிவுகள் சூழலில் கட்டுப்பாடுகள் கடந்து கலத்தலும்.




111. கட்டுப்பாடற்ற முறையில் விவசாயத்துக்காக பீடை கொல்லிகள், வளமாக்கிகளை பயன்படுத்தல். இதன் மூலம் சுவாசிக்கும் காற்று, குடிப்பதற்காகப் பயன்படுத்தும் நிலத்தடிநீர் மற்றும் உண்ணும் மரக்கறி வகைகள் என்பவற்றில் இரசாயனப் பதார்த்தங்கள் செறிந்து எமது உடல் கலங்களைப் பாதிக்கின்றன. பல ஆய்வுகள் மூலம் எமது பிரதேசநிலத்தடி நீரானது அதிகளவிலான நைத்திரேற்றுகள் கொண்டதாக உள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது. நாம் உட் கொள்ளும் மரக்கறிகளில் பீடைநாசனி மீதிகள் (Pesticide Residues) எவ்வளவிற்கு இருக்கின்றது என்று இன்னமும் தெரியாது. ஆனால் விவசாயிகள் பீடை நாசினிகளை கடைசியாக விசிறியதில் இருந்து ஒரு சில நாள்களிலேயே விற்பனைக்காக அறுவடை செய்கின்றனர் என்பது கண்கூடு. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாம் எமக்குத் தெரியாமலேயே உடலுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் இரசாயனங்களை உள்வாங்கி ஈற்றில் புற்றுநோயாளியாகும் துர்ப்பார்க்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றோம்.

1V. பெண்களில் மாதவிடாய் நின்ற பின்பு ஓமோன்களைப் பாவிப்பதால் மார்பகப் புற்று நோய் அதிக அளவில் ஏற்படுகின்றது.

V. சூரியனில் இருந்து வரும் அல்ரா வயலற் (UV) கதிர்கள் மூலமாகவும் ஓசோன் படல உடைவால் பூமியை அடையும் பாதகமான சூரியக்கதிர்கள் மூலமாகவும் தோல் சம்பந்தமான புற்றுநோய்கள் ஏற்படுகின் றன.

**புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தலைமையில் நெருக்கடித்தன்மை தீர்க்கப்படுமா...?

அண்மைக் காலமாகப் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்ற போக்கைக் காணக்கூடியதாக உள்ளது.

பெண் தலைமை தாங்கும் குடும்பத்தினுள் கணவரை இழந்த விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், திருமணமின்றித் தனியே வாழும் முதிர் கன்னியர்கள், கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளால் அங்கவீனமடைந்தவர்களின் மனைவியர் மற்றும் சந்தேக நபர்களாகவும் தமிழ் அரசியல் கைதிகளாகவும் சிறையில் இருக்கும் பலரின் துணைகள், குடும்ப வன்முறை காரணமாக சிறையிலிருப்பதால் ஆண் துணை அற்றவர்கள், கணவர் இருந்தும் இயலாமை, பொறுப்பற்ற செயற்பாடுகளினால் உருவான பெண்கள் மற் றும் வெளிநாடுகளில் தொழில் புரியும் ஆண்களின் குடும்பங்கள் போன்றவர்களைக் கொண்ட குடும்பங்களைக் குறிப்பிடலாம்.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் உருவாகுவதற்கான பின்னணிகளை நோக்கில், சமூகப் பொருளாதார, அரசியல், இயற்கைக் காரணிகளே அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பாக இதன் தாக்கம் அதிகளவாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலே காணப்படுகின்றன. இதற்குயுத்தம் மற்றும் அரசியல் வன்முறைகளே பிரதான காரணிகளாகக் கொள்ளப்படுகின்றன. நடந்துமுடிந்த யுத்தம் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை உருவாக்கியது எது என்பது எம் கண்முன்னே தினமும் பார்த்து அனுபவித்து வருவதன் ஊடாகப் புலப்படுகின்றது.

யுத்தத்தால் கணவரைப் பறிகொடுத்த நிலையில் குடும்பப் பொறுப்பை பெண்களே ஏற்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவற்றை விட இன்றுவரை புனர்வாழ்வு முகாம்களில் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பங்கள் தனிமையில் வாழ வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இது மேலும் பலவிளைவுகளை சமூகத்தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

2004.12.26 இல் நிகழ்ந்த சுனாமி அனர்த்தமும் வடக்கு, கிழக்கில் கரையோரக் கிராமங்களில் அதிகளவான பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் உருவாகப் பிரதான காரணியாகியது.

சமூகத்தில் அன்று தொட்டு இன்று வரை நடைமுறையிலுள்ள சீதனக் கலாசாரம் பல பெண்களின் மணவாழ்க்கையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இந்த நிலையில் ஆண் சகோதரர்கள், பெற்றோர் இல்லாத குடும்பங்கள் மற்றும் பொருளாதார ரீதியாக நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதனால் இவர்கள் திருமண வயதைத் தாண்டி முதிர் கன்னிகளாக வாழ்கின்றனர். இதைவிட ஜாதகக் குறிப்பில் குற்றம் சுமத்தி அவர்களுக்கான மணவாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்காமையாலும் எத்தனையோ பெண்கள் முதிர் கன்னிகளாகவே காலத்தைச் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். குற்றவியல் நடத்தைகள், சமூகப் பிணக்குகள் காரணமாகத் திருமணமான இளைஞர்கள் சிறைப்படுத்தப்பட்டுள்ளதால் அவர்களது குடும்பங்களை வழிநடத்த அங்கு பெண் தலைமைப் பொறுப்பை ஏற்கும் நிலை ஏற்படுகின்றது. இதைவிட, ஆண்கள் தொழில் காரணமாக உள்நாட்டின் வேறு பகுதிக்கோ வெளிநாட்டுக்கோ போகும் போது குடும்பப் பொறுப்பைப் பெண்களே அதாவது மனைவியே ஏற்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்தவகையான பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன.

இன்று பல குடும்பங்களில் குடும்ப ஒருமைப்பாட்டை அடைவது என்பது சவாலான விடயமாக மாறியுள்ளது. அதாவது சமூக நவநாகரிக மாற்றங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள், கல்வியறிவு மட்டம், தொழில், வருமானம் மற்றும் சமூக, பொருளாதார அந்தஸ்தில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள், அவர்களிடையே ஏற்படும் கருத்து முரண்பாடுகள், மற்றும் வேலையின்மை, வறுமை போன்றனவும் குடும்பங்கள் இடையே குழப்பங்களை ஏற்படுத்துகின்றன. இவற்றை விடத் தாம்பத்திய வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் திருமணத்துக்குப் பின் தகாத உறவுகளைப் பேணல் காரணமாகவும் குடும்பங்களில் குழப்பங்கள் ஏற்பட்டு சிலர் பிரிந்து வாழ்கின்றனர். இவ்வாறு பிரிந்து வாழ்பவர்களில் பலர் விவாகரத்துப் பெற்றும் உள்ளனர்.

கணவர் இயலாமை மற்றும் அங்கவீனராகக் காணப்படுவது பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் உருவாக ஏதுவாக அமைகின்றது. அதாவது கணவர் திருமணத்தின் பின் சில காலங்களால் நோய் , விபத்துக்கள் காரணமாக அங்கவீனமடையும் போது அந்தக் குடும்பத்தினுடைய தலைமைத்துவப் பொறுப்பைக் குடும்பத் தலைவி சுமக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகின்றாள்.

ஆண்கள் கடின வேலை செய்தல், போதைப் பொருள்கள் பயன்பட்டாலும் ஒப்பீட்டளவில் அவர்களுடைய ஆயுள் காலம் குறைந்து காணப்பட, பெண்களுடைய ஆயுள்காலம் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இவ்வாறான பல காரணங்களால் இன்று பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. சமூகத்தில் இவர்களுக்கான பாதுகாப்பு என்பது பெரிய சவாலாகக் காணப்படுகின்றது. அதாவது, அவர்கள் தனிமையாக வாழ்கின்ற போது குறிப்பாக இளம் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களை நோக்கிக் கயவர்களின் பார்வை தொடர்வதுடன் தமது பொறிக்குள் அவர்களை இலகுவாக வீழ்த்தியும் விடுகின்றனர். மேலும் சலுகைகள், உதவிகள் என்ற பெயரில் இவர்களை இம்சைப்படுத்துபவர்களும் உள்ளனர்.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் மற்றும் உலகமயமாக்கலால் நிகழும் சமூக நவநாகரிக மாற்றங்களுக்குக் குறைந்த வருமானம் பெறுபவர்களால் ஈடுகொடுக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. மாறாக, உயர்வருமானம் பெறும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களும் காணப்படுகின்றன. இவர்கள் தமக்குரிய வளங்களை பயன்படுத்துதலில் உள்ள குறைபாடுகள், திட்ட மிடல், ஒழுங்கமைத்தல், முகாமைத்துவம் செய்தல் என்பது சவாலாகக் காணப்படுகின்றது. குடும்பச் சுமை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இதனால் விரக்தியடைகின்றார்கள்.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் தம்மைப் பற்றிச் சிந்திக்காது தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிக் கூடுதல் கரிசனை காட்டுவதால் தமது உடல் நலத்தில் அக்கறை காட்டுவதில்லை. இதனால் இவர்கள் இலகுவில் நோய்வாய்ப்படுகின்றனர். இதன் காரணமாக இவர்கள் உறவினர்களுடன் தங்கியிருக்க வேண்டி உள்ளது. இவர்கள் எதிர்காலத்தில் வாழ்க்கைபற்றிய தீர்மானம் எடுத்தலில் சுயமாக முடிவெடுக்க முடியாமல் குழப்பமடைகின்றனர்.

என்.ஹஜேந்திரன்
திட்டமிடல் (சிறப்புக்கலை), இறுதிவருடம்,
யாழ்.பல்கலைக் கழகம்.

சமூகத்தில் விதவையாக உள்ள பெண்கள், மற்றும் விவாகரத்துப் பெற்று பெண்தலைமை தாங்கும் குடும்பங்களாக உள்ளவர்களுக்குப் பாரம்பரிய பண்பாட்டு நிகழ்வுகளில் முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. மாறாக, அவர்களைப் புறக்கணிக்கும் சமூகமாக எமது சமூகம் இன்றும் காணப்படுகின்றது. இதனால் அவர்கள் உளவியல் ரீதியாகவும் பாதிப்படைகின்றனர்.

பாதிக்கப்பட்ட பெண்களைத் தொழிற் பயிற்சிகள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், உளவியல் ஆற்றுப்படுத்தல்கள் போன்றவற்றில் ஈடுபடச் செய்வதன் மூலம் அவர்களை வலுவூட்டி அபிவிருத்தி நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ள முடியும். அபிவிருத்தித் திட்டங்களில் இவர்களுக்கெனத் தனித்துவமான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அதாவது அவர்களின் குடும்பப் பருமன், பொறுப்பு, வயது, ஆற்றல் மட்டங்களைக் கருத்தில் கொண்டு அவர்கள் இலகுவான முறையில் வருமானம் ஈட்டிக் கொள்ளும் நிலைத்திரு தன்மையுடைய திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

திட்டமிடலாளர்கள், சமூக மேம்பாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள், அமைச்சரவை ஆலோசகர்கள், பெண்கள் விவகார அமைச்சு, ஜனாதிபதியின் விசேட செயலணி என்பன இவர்களின் நலனில் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும். இல்லையேல் பல்வேறு விதமான கசப்பான சம்பவங்களை நாம் எதிர்கொள்ள நேரிடும். ✱

## மனிதனின் அழிவின் பின்னும் வாழப்போகும் கரப்பான் பூச்சி

அணுகுண்டு ஒன்று வெடித்து பெரும் உயிர் அழிவு ஏற்பட்ட பின் சுடுகாடாக மாறியிருக்கும் பிராந்தியத்தைப் பார்க்கக் கூடிய ஓர் உயிரினம் ஒன்று உள்ளது என்றால் அது வீட்டில் வாழும் கரப்பான் பூச்சிதான்.

கரப்பான் பூச்சி மனிதனை விட பல ஆயிரம் மடங்கு கதிர் வீச்சைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தது. மனிதனின் அழிவின் பின்னும் வாழப் போகும் இவை தோன்றியது மனித இனம் தோன்றுவதற்கு முன்னராகும். அதாவது 350 மில்லியன் வருடங்களுக்கு முன் இவை தோன்றியுள்ளன.

உலகின் துருவப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய எல்லாப் பகுதிகளிலும் வாழும் கரப்பான் பூச்சிகளின் தாயகம் ஜேர்மனியாக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கணிப்பாகும். தற்போது உலகில் சுமார் 3490 வரையான கரப்பான்கள் வாழ்வதாகக் கணக்கிடப்பட் டுள்ளது. இவை ஆறு குடும்பங்களாக வகைப்படுத் தப்பட்டுள்ளன. கரப்பான் பூச்சி தலை, நெஞ்சு, வயிறு எனும் மூன்று பிரதான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மூன்று சோடி கால்களும்ஒரு சோடி உணர்கொம்பும் உள்ளன. கரப்பான் பூச்சிக்கு முதுகெலும்பு கிடையாது. இரண்டு சோடி அல்லது ஒரு சோடி சிறகுகள் கணப்பட்டாலும் சில கரப்பான் பூச்சிகளுக்கு சிறகுகள் கிடையாது.

கரப்பான் பூச்சியின் இரத்தம் வெள்ளை நிறமுடையது! இவற்றால் தலை துண்டிக்கப்பட்டாலும் சுவாசிக்க முடியும். சில கரப்பான் பூச்சிகளால் காற்று இல்லாமல் 45 நிமிடங்கள் வாழமுடியும்.

உலகின் மிகப்பெரிய கரப்பான் பூச்சி இனம் ஆஸ்திரேலியாவில் காணப்படுகின்றது. இந்த இனக் கரப்பான் பூச்சிகள் 9 சென்ரிமீற்றர் வரை வளரக்கூடியவை. இதன் நிறை 30 கிராமை விட அதிகமாக இருக்கும். இந்தக் கரப்பான் நிலத்தை 3 அடி ஆழத்துக்குத் தோண்டி வசிக்கின்றது. இதற்கு சிறகுகள் கிடையாது.

கரப்பான் பூச்சியின் உணர்கொம்புகள் சூழலை அறிய உதவுகின்றன. இரவில்(இருட்டில்) உணவு வேட்டையை செய்யும். இவை எந்தப் பாகுபாடுமில்லாமல் எல்லாவிதமான உணவையும் வெட்டியும் அரைத்தும் உண்கின்றன. அப்படி உணவுப் பஞ்சம் ஏற்பட்டால் காகிதம் சவர்க்காரம் போன்றவை கூட உணவாகும். இதற்கு இதன் வலிமை வாய்ந்த தாடைகள் உதவி செய்கின்றன. கரப்பான் பூச்சியினால் மூன்று மாதங்கள் வரை உணவில்லாமல் உயிர் வாழ முடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் வங்கியின் பொன்விழா 2011

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் அவர்களது வாழ்த்துச் செய்தி



மக்கள் வங்கி வெற்றிகரமாக அரை நூற்றாண்டுக் கால வங்கிச் சேவையை நிறைவு செய்து பொன்விழாவைப் பெருமையுடன் கொண்டாடுகிறது. இதனையொட்டி வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் நான் உவகையடைகின்றேன்.

மக்கள் வங்கியானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை மக்கள் மனமறிந்த வங்கி என்ற ரீதியில் மக்களுடன் ஒன்றிணைந்த வங்கியாக, சமூகத்துடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டதாக, இலங்கையின் ஒட்டுமொத்த குடித்தொகையினருக்குமான வங்கியாக சிறந்த சேவைகளை ஆற்றி வருகின்றது.

குறிப்பாக நெருக்கடியான காலங்களில் தோளோடு தோள் நின்று சிறப்பான சேவைகளை வழங்கி வந்துள்ள மக்கள் வங்கி, தனது ஆரம்ப கால குறிக்கோள்களினின்றும் வழுவாது, கூட்டுறவு மற்றும் கிராமியப் பொருளாதார அபிவிருத்திக்கான தனது நிதியியல் பங்களிப்பினைத் தொடர்ந்தும் வழங்கி வருவது பாராட்டுக்குரியதாகும்.

எமது பகுதியைப் பொறுத்தவரையில் விவசாயம், சிறுதொழில், சுயதொழில், மீன்பிடி, சிறுகைத்தொழில் உள்ளிட்டவற்றுக்கான பல்வேறு கடன் திட்டங்களையும் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான வீட்டுக் கடன் திட்டங்களையும் மக்கள் வங்கி வழங்கி வருகின்றது. இது குறித்து நான் எமது மக்களின் சார்பாக மக்கள் வங்கிக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தகைய பெருமைவாய்ந்த வங்கியியலில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள மக்கள் வங்கி, தொடர்ந்தும் பல நூற்றாண்டுகளுக்குத் தனது சிறப்பான சேவைகளை எமது மக்களுக்காக வழங்க வேண்டுமெனவும் நிறைவான பொருளாதார அபிவிருத்தியுடன் கூடிய உன்னதமான வங்கிச் சேவையினை தொடர்ந்தும் வழங்க வேண்டுமெனவும் குறிப்பாக யுத்தம் மற்றும் பிற அனர்த்தங்கள் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும் கூறி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டக்ளஸ் தேவானந்தா நா.உ,
செயலாளர் நாயகம்- ஈ.பி.டி.பி,
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்,
இணைத் தலைவர் - யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு.

(கி/1314)

உதயன்
03 ஜுலை 2011 ஞாயிற்றுக்கிழமை

## இருபாலை கிழக்கு கேணிக்குளம் பதி

# அருள்மிகு லிங்க விநாயகர் (பழம்பிள்ளையார்) தேவஸ்தான

# அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக

# சிறப்புமலர் (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை


## அருள் ஆசியுரை



இலங்காத் துவீபத்தின் வடபால் சைவமும், தமிழும் செழிப்புற்று ஓங்கும் யாழ்ப்பாணத்தின் வடக்கே மருதநிலமும் கேணிக்குளமும் ஒருங்கிணைந்த நன்செய்பெரு விருட்சங்கள் சூழ்ந்த இருபாலை கிழக்கு கேணிக்குளம் பதியில் பல்லாண்டு காலம் கோயில் கொண்டு அருள்பாலிக்கின்ற லிங்க விநாயகப் பெருமானுக்கு அமைத்த வானளாவிய தூபிகளோடு அமைந்த ஆலயத்தில் பஞ்சகுண்ட பக்ஷ பிரதட்சிணா மகாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா இனிது நிறைவேறுவதையிட்டு இறும்பூதெய் துகிறேன். இருபாலைப் பதியின் பல்லாண்டு பழமை வாய்ந்த சிறப்பினால் பழம் பிள்ளையார் என்று போற்றப்படும் இந்த ஆலயம் சைவக்குருமார் பாரம் பரியத்தில் தோன்றி பலதலைமுறைகளாக சைவக் குருமார்களின் பராமரிப்பிலும் நெறிப்படுத்தலிலும் வளர்ந்து இன்று பல்வேறு பிரதேச அன்பர்களின் உள்ளங்களில் உறைந்து பேரருள் பாலிக்கின்ற விநாயகப் பெருமானின் குடமுழுக்குவிழா சிறப்புற நிகழ அவன்தாள் இறைஞ்சி எனது அருளாசியுரை யையும் வாழ்த்துரையையும் வழங்கி அமைகிறேன். இந்த ஆலயத்தில் நித்திய, நைமித்திய கிரியைக ளாகிய கொடியேற்ற நிகழ்வுகளோடு பிரதிஷ்டா கும்பாபிஷேகம் வரை நிகழ்த்துகின்ற பெரும் பேறு பெற்ற அடியேன் கிரியைகளிலே மகோன்னதமாகப் போற்றப்படும் இவ்வாலயம் சிறப்புற அமைத்து மகாகும்பாபிஷேகத்தையும் சிறந்த முறையிலே நிகழ பல வகைகளிலும் முன்னின்றுழைத்த அன்பர்கள், அடியார்கள் அனைவருக்கும் லிங்க விநாயகப் பெருமானின் திருவருட்கடாட்ஷம் என்னென்றும் கிடைக்கவேண்டி நிற்கிறோம்.

*பத்ததி வித்தக சிரோன்மணி*
சிவஸ்ரீ.ந.கேதீஸ்வரக்குருக்கள்
அநுராதபுரம்.

## லிங்கப் பிள்ளையார் கோயில் மகாகும்பாபிஷேகம்



கோப்பாய் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள இருபாலைக்கு கேணிக்குள லிங்கப்பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வு 03.07.2011 இன்று நடைபெறுவதையிட்டு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்'' என்ற வாக்கு ஆலயங்களின் சிறப்புக்களை எமக்கு எடுத்துரைக்கின்றன. ஆலயங்கள், ஆன்மீக சிந்தனைகளை உருவாக்கும் இடமாகவும் கலைகளை வளர்த்திடும் இடங்களாகவும், அமைதியையும் மனச்சுமைகளையும் நீக்கும் இடங்களாகவும் ஊரை அடையாளப்படுத்தும் இடங்களாகவும் விளங்குகின்றன. அந்த வகையில் லிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வளர்ச்சியும் அமையப் பெற்றுள்ளது. இந்த ஆலயம் பல பழைய வரலாறுகளையும் கொண்டிருந்தாலும் மிக அண்மைக்காலங்களில் துரித வளர்ச்சி அடைந்துள்ளது. சிறந்த முறையில் புனருத்தாரணம் செய்யப்பட்டு சித்திரத்தேரையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இதற்கு முன்னின்று அயராது பாடுபட்ட ஆலய குரு கேசவன் ஐயாவும் ஊர்மக்களும் போற்றப்படவேண்டியவர்கள்.

அமைதியான சூழலும், அருகில் வயலும் வயல் சார்ந்த கேணிக்குளமும் வீரகத்திப் பிள்ளையார் ஆலயமும் அமைந்திருப்பது மேலும் ஆலயத்துக்கு சிறப்புச் சேர்க்கிறது. இன்றைய கும்பாபிஷேகத்தில் லிங்கப் பிள்ளையார் அருள்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

*சி.உதயகுமார்.*
*கிராம அலுவலர்,*
*கோப்பாய் தெற்கு.*



## இருபாலை கிழக்கு கேணிக்குளம்பதி லிங்க விநாயகர் (பழம் பிள்ளையார்) தேவஸ்தான வரலாறு

இவ்வாலயம் நானூறு வருஷ பழமை வாய்ந்தது. ஆதியில் ஒரு பக்தரால் இலிங்க உருவில் துதிக்கை முகப்புத் தோற்றமுடைய கல் கண்டெடுக்கப்பட்டு ஒரு குடிசையில் வைத்து வழிபடப்பட்டு வந்தது. இக்குடிசைக் கோயில் தற்போதைய ஆலயத்தின் அருகில் இருந்ததாகக் கூறுவர்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முத்துச்சாமி என்பவர் தேயிலைத் தோட்டத்தில் வேலைசெய்து வந்தபோது ஒரு யானை தன்னைக் காலால் மிதிப்பது போலக் கனவுகள் பல கண்டதன் நிமித்தம், லிங்கப்பிள்ளையாரை ஆதரிக்காமல் விட்டதால் வந்ததென்று எண்ணிச் சுதையினால் கோயில் கட்டுவித்து 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதலாவது கும்பாபிஷேகம் செய்வித்தார்.

1937-1938இல் மண் நிலம் சிமெந்து போடப்பட்டும் எழுந்தருளி விக்கிரகம் வைக்கச் சபை அமைத்தும், மூசிகம், பலிபீடம், நாகதம்பிரான், வைரவர், வேல் முருகன், முதலிய பரிவார மூர்த்திகளும் வைக்கப்பட்டு (புனருத்தாரண) கும்பாபிஷேகம் இரண்டாவது தடவையாக நிகழ்ந்தது.

1955இல் முத்துச்சாமி என்பவர் மரணமடைய அவர் திரட்டிய நிதியில் செல்லையா என்பவர் திருப்பணிகளை நிறைவாக்கி 1955ஆம் ஆண்டிலேயே மூன்றாவது கும்பாபிஷேகம் செய்வித்தார்.

1972.01.12இல் இருந்து வை.சண்முகநாதன் ஐயா குடும்பத்தினர் இவ்வாலயப் பூசையை ஏற்றுக் கொண்டனர். 1982 இல் செல்லையா அவர்கள் இறக்க ஆலயம் மிக இக்கட்டான நிலைக்குள்ளானது..

1989இல் சண்முகநாதன் ஐயாவின் மகன் ச. வைத்தியநாதன் ஐயா முன் மாதிரியாகச் செயற்பட்டு தர்மகர்த்தாக்கள் நால்வருடனும் சேர்ந்து பல திருப்பணி வேலைகள் செய்து விநாயகர் உற்சவ மூர்த்தியை புதிதாக அமைத்ததுடன் கேதாரீஸ்வரர், கௌரி அம்பாள் முதலிய திருக்கோயில்களையும் அமைத்து 4ஆவது கும்பாபிஷேகம் 26.11.1993 இல் நடைபெற்றது. கோயில் அர்ச்சகர் ச. வைத்தியநாதன் ஐயாவே புவனேஸ்வரி ரீச்சரால் (தர்மகர்த்தாக்களுள் ஒருவர்) ஆலயப் பரிபாலகராகவும் நியமிக்கப்பட்டார். சிறுவனாக இருந்த கேசவன் ஐயா இவருக்கு உதவியாக இருந்தார்.

கோயில் மேற்கு வீதி இட விஸ்தீரணம் போதியதாக இல்லாமையால் திருமதி புவனேஸ்வரி சண்முகநாதன் அவர்கள் (தர்மகர்த்தாக்களில் ஒருவர்) தனது காணியை வழங்கி ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையானார்.

1994ஆம் ஆண்டு ஆவணி மாதம் சுவாதி நட்சத்திரத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்ட 10 நாள் மகோற்சவம் ஆரம்பமானது.

மாதாந்த சதுர்த்தி, பிள்ளையார் பெருங்கதை (விநாயக சஷ்டி) கேதார கௌரி பூசை, நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை, வெள்ளிக்கிழமை கூட்டுப் பிரார்த்தனை என்பன ஒழுங்காகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

1993ஆம் ஆண்டின் கும்பாபிஷேகத்தின் பின் ச.வைத்தியநாதன் ஐயாவின் காலத்தில் (2003 வரை) தம்ப மண்டபம், கோபுரவாயில் மண்டபம், மணிக்கோபுரம், வசந்த மண்டபம் கண்டாமணி, சித்திரத்தேர், தேர்மிண்டி, சண்டேஸ்வரர் உற்சவ மூர்த்தி என்னும் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன.

ச. வைத்தியநாதன் ஐயா 16.03.2005 இல் இறந்ததன் பின் அவருக்கு முன்பு உதவியாக இருந்த அவரது பெறாமகனாகிய பா.கேசவன் ஐயா ஆலய அர்ச்சகராகவும் பரிபாலகராகவும் செயற்பட்டு வருகிறார். இவரது முயற்சியில் 06.02.2011 இல் இவ்வாலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணிகள் தொடங்கின. சண்டேசுவரர் திருக்கோயில் புதிதாக உருவாக்கப்பட்டதுடன் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் எல்லாம் இடித்து 3 அடி உயர்த்தப்பட்டுப் புதிய வெள்ளைக்கல் திருப்பணியாக நிர்மாணிக்கப்பட்டு, மாபிள் பதிக்கப்பட்டு அழகிய வர்ண சிற்ப வேலைப்பாடுகளுடன் 5ஆவது கும்பாபிஷேகம் இன்று 03.07.2011 கரவருடம் ஆனி மாதம் 18ஆம் திகதி நடைபெறுகிறது.

ஆலய பரிபாலகரும் தேவஸ்தானத்தினரும்

## பிரார்த்தனை உரை



தெய்வ சாந்தியத்தை வலுப்படுத்தி திருவருள் சக்தியைப் பெருகச்செய்யவும், நித்திய, நைமித்திய கிரியைகளில் இடம்பெறும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும், பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை மகாகும்பாபிஷேகம் - குடமுழுக்கு செய்யவேண்டும் என ஆகமங்கள் கூறுகின்றன. இந்த வகையில் இன்று 03.07.2011 இருபாலையூர் கேணிக்குளம்பதி லிங்க விநாயகப் பெருமானுக்கு (வரலாற்றில் 5 ஆவது) புனருத்தாரண கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

எனது சிறிய தந்தையார் ச.வைத்தியநாதன் ஐயாவின் சிந்தனையில் உதித்த கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், முதலியவற்றைத் தலத்தை உயர்த்தி வெள்ளைக்கற் திருப்பணியும், புதிதாக சண்டேசுவரர் திருக்கோயில் திருப்பணியும் நிறைவேறியுள்ளன. கோயில் சகல பகுதிகளும் அழகிய வர்ண வேலைப்பாடுகளுடனும் அமைக்கப்பட்டுள்ளன. நிலத்தடி நீருடன் லிங்க விநாயகர் விக்கிரகம் தொடர்புபடுத்தப்பட்டு விநாயகரின் திருவருள் மேலும் அதிகரிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

கும்பாபிஷேகத் திருப்பணிகளுக்குச் சகல வழிகளிலும் துணை நின்றவர்களுக்கும் இந்த வைபத்தை சிறப்பாக நடத்தும் சிவாச்சாரியர்களுக்கும், கலந்து கொள்ளும் அன்பர்கள், அடியவர்கள் அனைவருக்கும் லிங்க விநாயகப் பெருமானின் திருவருட் கடாட்சம் கைகூடப் பிரார்த்திக்கின்றேன்.

பா.கேசவன் ஐயா
*(ஆலய அர்ச்சகரும் பரிபாலகரும்)*

## செஞ்சொற் செல்வரின் ஆசியுரை




தும்பிக்கையானை நம்பிக்கை கொண்டு வழிபாடு செய்பவர்களுக்கு இடர் இல்லை. ஞான முதல்வராகிய விநாயகப்பெருமான் இருபாலைக் கிராமத்தில் லிங்கப் பிள்ளையார் என்ற நாமத்தோடு அருள்பாலித்து வருவது பலரும் அறிந்ததே. சைவப் பாரம்பரியம் மிக்க சைவக் குருமார்களின் ஆற்றுப்படுத்தலில் இன்று பெருவளர்ச்சி கண்டுவரும் இந்தத் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். இத்திருக்கோயிலுடன் நீண்டகாலத் தொடர்பு சிறியேனுக்கு உண்டு. அமரர் சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் (ஆசிரியர்) அவர்களின் அழைப்பின் காரணமாக பலதடவை இவ்வாலயத்தில் சமயச் சொற்பொழிவு ஆற்றும்பேறு கிடைத்தது. சைவச்சான்றோர் வாழ்ந்த புண்ணிய பூமி இருபாலை. சேனாதிராச முதலியார் முதல் அறிவுலகம் அறிந்த பலரை இந்த வையகத்துக்குத் தந்த இருபாலைக் கிராமத்தில் சைவ மக்களை வழிப்படுத்தும் கோயிலாக இந்தத் திருக்கோயில் விளங்குகிறது. ஏழைகளை மதம் மாற்றும் சந்தர்ப்பங்கள் மலிந்த நிலையில் ஏழைகளின் சிந்தையை நெறிப்படுத்த இத்திருக்கோயில் செய்த பணிகளை யான் அறிவேன்.

இந்தத் திருக்கோயிலுக்காக தன்னை அர்ப்பணித்த அமரர் வைத்தியநாதக் குருக்களை நீள நினைந்து நன்றியோடு வணங்கவேண்டிய கடப்பாடு அடியவர்கள் அனைவருக்கும் உரித்தாகும். எல்லாம் வல்ல லிங்க விநாயகப் பெருமானின் மகாகும்பாபிஷேகம் நிறைவாக நடைபெற்று அனைவரும் நிறைவாக வாழப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகிறேன்.

''யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே''

ஆறு. திருமுருகன்,
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*
*தலைவர், சிவபூமி அறக்கட்டளை.*

## இறையருளை வேண்டுவோம்



ஆலய திருப்பணிகளுள் முதன்மையாக கருதப்படுவது மகாகும்பாபிஷேகம் ஆகும். அந்த வகையில் இருபாலை வாழ் மக்கள் அருள்மிகு லிங்க விநாயகருக்கு இப்பெருஞ்சாந்தி விழாவை முன்னெடுக்கும் இந்த நிகழ்வு அவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் திருநாளாகும். இந்தப் பெருவிழாவில் பங்கெடுத்து பெருந் தொண்டாற்றி புண்ணியச் செயலுக்கு உள்ளான அடியார்களில் ஒருவனாக இருந்து மேலும் பற்பல திருப்பணிகளைப் புரிந்து இந்தப் பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவாழ்வு வாழ அருள்மிகு பழம் பிள்ளையாரை இறைஞ்சுவோமாக!

கி.தங்கவடிவேல்
*சமாதான நீதிவான்(அகில இலங்கை)*

(சி/1322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் மீண்டும் ஒரு பிரளயத்துக்கு இடம் தரக்கூடாது

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் பாதுகாப்பும், உத்தரவாதமும் வழங்கப்படும் வகையில் நிரந்தரமான தீர்வுத்திட்டம் ஒன்று காணப்பட வேண்டும் என்ற கருத்துக்கு என்னிடம் மாற்றுக்கருத்து ஒன்றும் இல்லை.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே இலங்கை - இந்திய ஒப்பந்தமும் மாகாண சபைகளும் உருவாக்கப்பட்டன. அவற்றை நடைமுறைப்படுத்துவதில் தாமதமும் தடைகளும் ஏற்பட்டிருக்கலாம். எனினும் 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்திற்கமைய தீர்வு காணப்பட வேண்டும் எனக் கூறுகிறார் தனியார் பஸ் சேவைகள் அமைச்சர் ஆர்.எம்.சி.பி ரத்னாயக்க.

**அகதி முகாம்களில் குருவிக்குஞ்சுகளைப் போன்று அடைக்கப்பட்டிருந்த மக்களைக் கண்டு எனது மனம் பெரிதும் வேதனையடைந்தது. நான் கண்ட விடயங்களை ஜனாதிபதியிடம் கூறி அனைவரையும் கூடிய விரைவில் அவரவர் சொந்த வீடுகளுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று அவர்களிடம் உறுதியளித்தேன். இப்பொழுது 90 வீதமானவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு விட்டனர்.**



**யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் ரத்னாயக்கா உதயன் செய்தியாளருக்கு வழங்கிய விசேட செவ்வி**

**இரா. புத்திரசிகாமணி**

இலங்கை ஒரு சிறிய நாடு. அதனைப் பல துண்டுகளாகக் கூறுபோட முடியாது. தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் என்று பேதம் பாராமல் அனைவரும் இலங்கையர், ஒரே குடும்பம் என்ற உணர்வு ஒவ்வொருவர் மனதிலும் ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தும் அமைச்சர், சிங்களவர்களும் தமிழர்களும் இன்னும் சற்று ஆழமாகக் கூறப்போனால் இந்துக்களும் பௌத்தர்களும் பூகோள பாரம்பரிய கலாசார பண்பாடுகளில் ஒன்றுபட்டவர்கள். பௌத்த மதம் இந்தியாவில் இருந்து தானே வந்தது. இந்துக்கள் பௌத்த விகாரைகளுக்கும் பௌத்தர்கள் இந்துக் கோயில்களுக்கும் சென்று வழிபடுகின்றனர்.

பெருமாள் சாமி என்றும் பத்தினி அம்மா என்றும் கணதெய்யோ (விநாயகர்) கத்தரகம தெய்யோ (முருகன்) என்றும் பரஸ்பர நம்பிக்கையுடன் நாம் வழிபடுகிறோம் அல்லவா?

மதத்தால் பாரம்பரிய கலாசாரத்தால் ஒன்றுபட்டுள்ள நாம் சிங்களவர், தமிழர் என்று குரோதம் பாராட்டாமல் நாம் அனைவரும் இலங்கையர் என்று ஏன் ஐக்கியமாக வாழமுடியாது.

முத்தையா முரளிதரன் விக்கெட் வீழ்த்தும் போதும் சனத் ஜயசூரிய சிக்ஸர் அடிக்கும்போதும் எல்லோரும் ஒன்றாகக் கைதட்டி ஆரவாரம் செய்கிறோம் அல்லவா. விளையாட்டில் காட்டும் பரஸ்பர புரிந்துணர்வும் ஒற்றுமையும், இயல்பு வாழ்க்கையிலும் ஏற்பட வேண்டும் என்றும் அமைச்சர் ரத்னாயக்க கூறினார்.

உதயனுக்கு அளித்த விசேட செவ்வி ஒன்றின் போதே அமைச்சர் இவற்றைக் கூறினார். தொடர்ந்து அமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு:-

கே: யுத்தம் முடிந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்ட போதும் இன்னும் அங்கு வாழும் மக்கள் அச்சம், பீதிகளுக்கு மத்தியிலேயே வாழ்கின்றனர். இப்பொழுது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகச் செல்கின்றீர்கள். அங்கு கொண்டு செல்லும் செய்தி என்ன?

ப: நான் இப்பொழுது நான்காவது முறையாக யாழ். வந்துள்ளேன். புனர்வாழ்வு முகாமில் தங்கியிருந்த பிரபாகரனின் தந்தையையும் தாயையும் நேரில் கண்டு சுகம் விசாரித்த முதலாவது தென்பகுதி அரசியல்வாதி நான் என்பதில் பெருமையடைகிறேன். பிரபாகரனின் தந்தையார் என்னிடம் தமிழிலும் சிங்களத்திலும் தெளிவாகப் பேசினார். நோய்வாய்ப்பட்டிருந்த மனைவியைக் காட்டிப் பெரிதும் கவலைப்பட்டார். பிரபாகரன் உட்படத் தனது பிள்ளைகள் சிதறிப்போனதை யிட்டுக் கண்ணீர் வடித்தார். இப்படியான நிலை யாருக்கும் ஏற்படக்கூடாது என்றும் குறிப்பிட்டார். அகதி முகாம்களில் குருவிக்குஞ்சுகளைப் போன்று அடைக்கப்பட்டிருந்த மக்களைக் கண்டு எனது மனம் பெரிதும் வேதனையடைந்தது. நான் கண்ட விடயங்களை ஜனாதிபதியிடம் கூறி அனைவரையும் கூடிய விரைவில் அவரவர் சொந்த வீடுகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று அவர்களிடம் உறுதியளித்தேன். இப்பொழுது 90 வீதமானவர்கள் மீளக்குடியமர்த்தப் பட்டு விட்டனர். வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முப்பது வருட யுத்தத்தினால் சிதைவடைந்து போன யாழ்ப்பாணத்தை மீண்டும் புதுப்பொலிவுடன் கட்டியெழுப்ப அரசு சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் என்ற செய்தியுடனேயே வந்துள்ளேன்.

கே: மீளக்குடியமர்த்தப்பட்டதாக கூறப்பட்டபோதும் அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட அடிப்படை வசதிகள் எதுவும் கிடைக்கவில்லை. இன்னும் அவர்கள் தறப்பாள்களிலும் கூடாரங்களிலுமே வாழ்கின்றனர்?

ப: உலகுக்கே உபதேசம் செய்யும் அமெரிக்கா இன்னும் தனது சொந்த நாட்டில் ஏற்பட்ட அழிவுகளை சீர்ப்படுத்த முடியாமல் இருக்கின்றது. ஆனால் இரண்டே வருடங்களில் உலகமே வியக்கும் வண்ணம் நேருக்குநேர் யுத்தம் புரிந்த போராளிகளை விடுதலை செய்ததுடன் புனர்வாழ்வு அளித்துமுள்ளோம். மீள்குடியேற்றங்களை மேற்கொண்டுள்ளோம். தென்பகுதியை விடப் பல மடங்கு கூடுதலான நிதியை செலவிட்டுப் பெரும் அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளோம். எல்லா வசதிகளையும் பழையபடி செய்து கொடுக்க முடியாவிட்டாலும் அவர்கள் திருப்திப்படும் வகையில் செய்துகொடுத்துள்ளோம்.

கே: வடக்கில் இராணுவமும் பொலிஸும் இல்லாத இடமே இல்லை. அப்படி இருந்தும் அங்கே சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படவில்லை. தினசரி கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை என்பன நடந்த வண்ணமே இருக்கின்றனவே?

ப: நீங்கள் ஓர் உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். கடந்த முப்பது வருடங்களுக்கு மேல் எந்தவித வரைமுறையின்றி காடுகளில் வாழ்ந்தார்கள். இப்பொழுது விடுவிக்கப்பட்டு சுதந்திரமாக நடமாடுகின்றனர். இவர்கள் தான் இப்படியான சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முன் நிறுத்தப்பட்டுள்ளனர். வெளி ஆள்கள் எவரும் செய்யவில்லை.

கே: இப்பொழுது தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துள்ளது. ஆனால் எதிர்க்கட்சி வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரசாரங்களை நடத்த முடியவில்லை. சுவரொட்டிகளை ஒட்ட முடியவில்லை. குண்டர்களால் தாக்கப்படுகின்றனர். இந்த நிலையில் நியாயமான தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்க முடியுமா?

ப: அனைத்து வேட்பாளர்களுக்கும் போதிய பாதுகாப்பு வழங்கும்படி ஜனாதிபதி பாதுகாப்புத் தரப்பினருக்குக் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார். தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளும் துண்டுப்பிரசுரங்களையும் விநியோகிக்கும் உரிமை சகலருக்கும் உண்டு. யாரும் தடுக்க முடியாது. தென்பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவும் ஜே.வி.பியினரும் இப்படித்தானே குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர். எது எப்படியானாலும் மக்கள்தானே தீர்மானிக்கப் போகிறார்கள்.

கே: நீங்கள் மலையகத்தில் தமிழ் மக்கள் மத்தியில் வாழ்பவர். இனப் பிரச்சினை தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன?

ப: நான் தமிழ் மக்களும் சிங்களவர்களும் ஒரே குடும்பமாக வாழும் மலையகத்தில் வாழ்பவன். தமிழ், சிங்கள, இஸ்லாமிய மக்களின் ஆதரவு எனக்குண்டு. காலம் காலமாக மலையகத் தமிழ்த் தலைவர்கள் செய்யாத விடயங்களை மலையக தொழிலாளர்களுக்குச் செய்து கொடுத்துள்ளேன். மலையகம் எங்கும் பாதை அபிவிருத்திகளுடன் மத்திய மாகாணத்தில் மட்டுமல்ல ஊவா, சப்ரகமுவ, மேல்மாகாணங்களிலும் பெரும் வீடமைப்புத் திட்டங்களை உருவாக்கிக் கொடுத்துள்ளேன்.

1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் போது நான் கண்ணீர் வடித்தேன். என்னால் இயன்ற எவான தமிழ்க் குடும்பங்களுக்குப் பாது காப்பு வழங்கினேன்.

இனக்கலவரம், யுத்தம் போன்று இங்கு மீண்டும் ஒரு பிரளயம் மூன்றாவது தடவையாக ஏற்பட இடமளிக்கக் கூடாது.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளும் அபிலாஷைகளும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். அதன் அடிப்படையில் தீர்வுத்திட்டம் ஒன்றை ஏற்படுத்துவது அவசியம். அதனைப் பேச்சு மூலமே ஏற்படுத்த முடியும்.

கே: பேச்சு மூலம் ஏற்படுத்த முடியும் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேசிக்கொண்டே நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறுகின்றார்

ஏற்கனவே மங்கள முனசிங்க தெரிவுக்குழு, சர்வகட்சி மாநாடு என்பன அர்த்தமற்றவையாகிவிட்டன. காலமும் பணமும் விரயம் ஆனதைத் தவிர வேறு நன்மை இல்லை. இப்பொழுது குறிப்பிட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் காலத்தைக் கடத்தும் ஓர் உபாயம் தானே என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதே?

ப: இதில் சந்தேகப்படவேண்டிய அவசியமே இல்லை. ஜனாதிபதியை நம்பலாம். கடந்தவற்றை அசைபோட வேண்டிய அவசியம் இல்லை. நாளை நடப்பதைப் பார்க்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசு மேற்கொள்ளும் நல்ல விடயங்களுக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறியுள்ளனர். அதேபோன்று இந்த விடயத்திலும் நம்பிக்கையுடன் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதன் மூலம் பல நன்மைகளை அடைய முடியும்.

கே: அரசு வடபகுதிக்குப் பல ஆயிரம் கோடி ரூபாக்களைச். செலவிட்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனால் அங்குள்ள அமைச்சர் ஒருவர் இதனை மூடி மறைத்து எல்லாவற்றையும் தானே செய்வதாக அல்லவா பிரசாரம் செய்கின்றார்?

ப: அவரும் அரசின் ஓர் அங்கம் தானே? என்று சிரித்துக்கொண்டே கேட்ட அமைச்சர் வடக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் அரசுடன் இணைந்து செயற்பட வாருங்கள் என அழைக்கிறேன். கிழக்கில் பிள்ளையான் இணைந்து செயற்படுவது போல் வடக்கிலும் அபிவிருத்திகளை தாங்களே முன் நின்று செய்யலாம்தானே என்று குறிப்பிட்டார். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓரியண்டல் அக்கூரியம் (மல்ரி பாம் சென்ரர்)

வளர்ப்பு கலர் மீன் வகைகள், நவீன வகையான மீன் தொட்டி, மீன் தொட்டி உபகரணங்கள், வளர்ப்புக் குருவிகள், நாய்க்குட்டி இனங்கள், செல்லப் பிராணிகள், பூக் கன்றுகள், பூஞ்சாடிகள் என்பன நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
0217912997, 0754985400,0759880000

யாழ்→கொழும்பு, கொழும்பு →யாழ்
மற்றும் உள்ளூர் வான்சேவை
(குளிரூட்டப்பட்டது)
தொ.பே: 0759880000



AC & Non AC


## மரண அறிவித்தல்

### சின்னத்துரை பராசக்திஅம்மா



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டு வடக்கு, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பராசக்தி அம்மா நேற்று முன்தினம் (01.07.2011) வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் சிவபதம் எய்தினார்.

அன்னார் தொல்புரத்தைச் சேர்ந்த நல்லப்பு - செல்லப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் வட்டுவடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த கிருஷ்ணர் சின்னத்துரை (பெரியதம்பி) அவர்களின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, கிருஷ்ணமூர்த்தி, தவராசா, தவானந்தன், தவமனோகரி, லோகேஸ்வரி, சிவானந்தன், கோவிந்தராஜா, பரமேஸ்வரன், காலஞ்சென்ற சற்குணராசா ஆகியோரின் அன்புத் தாயும் தம்பிநாயகம், கமலநாயகி, சிவனேசச்செல்வி, விஜயநிர்மலா, ஏகாம்பரம், சிவபாலன், சிவசோதி, கோமதி, கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் வட்டுவடக்கு, சித்தன்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வட்டு வடக்கு,
சித்தன்கேணி.
(5417)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம் ஜூலை 3

வடக்கு மாகாண மட்ட ஒலிம்பியாட் பயிற்சியில் பங்கு பற்றி பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண மட்ட ஒலிப்பியாட் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டு யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி நெறியில் பங்குபற்றிய தரம் 5,6 மாணவர்களுக்கும், கனிஷ்ட கணித ஒலிம்பியாட் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற தரம் 8,9,10 மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதால் உரிய மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் அறிவித்துள்ளார். (ம-313)

## உயர்தர மாணவருக்கு இலவசக் கருத்தரங்கு

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்பாக அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தால் உயர்தர மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை வணிகக் கல்வியும் நாளை திங்கட்கிழமை அரசியல் விஞ்ஞானமும் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கணக்கீடும், எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை உயிரியலும் மறுநாள் வியாழக்கிழமை இரசாயனவியலும், எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை இணைந்த கணிதமும், மறுநாள் சனிக்கிழமை ஆங்கிலமும், எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பௌதிகவியலும் இடம்பெறவுள்ளன. (ம-313)


## STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY

UK → அதிகூடிய கட்டணம் -ரூபா. 150,000/- , Student Visitor Visa
USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0
CANADA → IELTS, Sponsor தேவையில்லை, No age limit, PR
POLAND → பகுதி நேர தொழில் வாய்ப்பு விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
GERMANY → Tuition Fee இல்லை, IELTS 5.5, PR
CYPRUS → பகுதி நேர தொழில் வாய்ப்பு விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
New Zealand → IELTS - 5.0 + Work Permit

நாடுமுழுவதிலும் முகவர்கள் தேவை

பஸ்னா - 0778 438403, 0771000044, அல்சரா - 0778339943

READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

## ஆங்கிலம் கற்பித்தலில் வேலை வாய்ப்புக்கு முன்னோடியான 75 நிமிட அடிப்படைத் தகுதிகாண் பரீட்சை

A/L படித்த இளைஞர், யுவதிகளின் திறமையை வெளிக் கொண்டு வருவதற்கான ஓர் ஆக்கபூர்வமான முயற்சி!

எவரும் எளிதில் விளங்கிப் படிக்கக்கூடிய தாய்மொழி மூல மொழி பெயர்ப்பு முறையிலமைந்த எமது கற்கை நெறியைப் பூர்த்தி செய்து, பின்னர் அதனைக் கற்பித்தலில் பயிற்சி பெற்று "ஆங்கில அறிவின் மூலம் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு" என்கின்ற எமது சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தத்தமது பிரதேசங்களில் கற்பித்தலில் ஈடுபடத் தகுதியானவர்களை இனங் காண்பதற்காக மேற்படி பரீட்சை நடத்தப்படுகின்றது.

தகைமைகள்: குறைந்த பட்சம் O/L இல் ஆங்கிலத்தில் S சித்தியுடன் A/L இல் 3 பாடங்களில் சித்தி

காலம்: ஜூலை 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை வசதியான எந்த நேரத்திலும் பரீட்சை எழுதலாம்.

இடம்: 5 ஆவது மாடி, வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

குறிப்பு:- O/L, A/L பெறுபேறுகள் மற்றும் பிறப்புச் சான்றிதழின் போட்டோப் பிரதியுடன் ரூபா 250 ஐ பரீட்சை மண்டபத்தில் செலுத்திய பின்னர் பரீட்சை எழுதலாம்.

மேலதிக விவரங்களுக்கு: 0770739904
Friendship English Education Service
5th Floor, Veerasingam Hall, Jaffna. (5409)

"வாழ்க வளமுடன்"

இதனைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.
எமது முகவர்கள் தங்களிடம் வரும்போது
இல்லை என்றால்....
நீங்கள் பெற்றுவிட்டீர்களா?
குரு கிர்பா வின் சேவையை
(சி/1313)


## கரைச்சிப் பிரதேச சபை - அறிவித்தல்கள்

### கட்டட அனுமதி

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்.

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அரச திணைக்களங்கள் அதிகார சபைகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இந்தச் சபை எல்லைக்குட்பட்டோர் தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயினும் அல்லது பழைய கட்டடத்தினைத் திருத்துவதாயினும் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும். புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதிபெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தி அடையாதுவிடின் உரிய கட்டணம் செலுத்திக் கட்டட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும்.

அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பூர்த்தி செய்து உரிய கட்டணங்களைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும். அனுமதி பெறாது அமைக்கப்படும் கட்டடங்கள், மதில்கள் தொடர்பாக அரச திணைக்களங்கள், அதிகார சபைகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஆதனச் சொந்தக்காரர் மீது குறித்த சட்டப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

### சூழல் பாதுகாப்பு உரிமம்

சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2008 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 'இ' பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளைப் பிரதேச எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்படி தொழிலை/வியாபாரத்தை நடத்துபவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தைச் செலுத்தி இந்த உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். இவ் உரிமம் பெறாது மேற்படி தொழில்கள்/ வியாபாரம் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதுடன் அத்தகையவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

### விளம்பரம், பெயர்ப்பலகைகளுக்கான அனுமதி-2011

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்குப் பிரதேச சபையிடம் அனுமதி பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாதுள்ள விளம்பரங்கள் பிரதேச சபையால் எந்தவித முன் அறிவித்தலுமின்றி 15.07.2011 இற்குப் பின் அகற்றப்படும். வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத தமது வர்த்தக நிலையம் தொடர்பான பெயர்ப் பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடனான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள பெயர்ப் பலகைகளுக்குப் பிரதேச சபையில் அனுமதி பெறவும். அவ்வாறு அனுமதி பெறாத பெயர்ப் பலகைகள் பிரதேச சபையால் அகற்றப்படும்.

மேலும், வியாபார, நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தமது கடைக் கட்டட எல்லைக்குள்ளேயே பொருள்களைக் காட்சிப்படுத்தவோ களஞ்சியப்படுத்தவோ முடியும். அவ்வாறு அல்லாது கடையின் வெளிப்புறத்திலோ வீதிக்கு அருகிலோ பொருள்களைக் காட்சிப்படுத்தவோ களஞ்சியப் படுத்தவோ முற்றாகத் தடைச் செய்யப்பட்டுள்ளது என்பதுடன், இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

### நடை பாதை வியாபாரம்

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மீறி நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுவோர் மீது பிரதேச சபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அந்தப் பொருள்களும் பிரதேச சபையால் கையகப்படுத்தப்படும்.

கு.தவசோதி,
செயலாளர்,
கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.

(சி/1320)

## மரண அறிவித்தல்

### திருமதி விமலாதேவி சிவசுப்பிரமணியம்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தற்போது சென்னையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த விமலாதேவி சிவசுப்பிரமணியம் 29.06.2011 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - செல்லம்மா தம்பதியரின் புத்திரியும் சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, துரைராசா மற்றும் பொன்மணி, பூமணி, பாக்கியலீலாவதி, தர்மகுலராஜசிங்கம், திருஞானசம்பந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விமல்ராஜ் (கொழும்பு) மோகனராஜ் (சுவிஸ்), திருக்குமரன்(பிரான்ஸ்), திருக்கரன்(சுவிஸ்), சுந்தர்ராஜ்(சென்னை) ஆகியோரின் பாசமிகுத் தாயும் அனுசுயா, கயல்விழி, குகராஜினி, மஞ்சுளா, தவபாளினி ஆகியோரின் அன்பு மாமியும் அபினேஷ், ஆகாஷ், அக்சயா, அபிராமி, சயந்தவி, மதுஷா, லேஷ்மா, அஷ்வத்,லேகா, டிலுக்ஷன், விஹாசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2011) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சென்னை பெசன்ட்நகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தேவி டிரேடர்ஸ் 174 B/5,
2nd Cross Street, Col - 11
சுயா டிரேடர்ஸ் 136/7, Keyzer st, col - 11 (சி/1239)

தகவல்:
எஸ். விமல்ராஜ்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னீரை நஞ்சாக்கி நாமே அருந்தும் அபாயம் குடாநாட்டில்



நன்னீரில் நஞ்சைக் கலக்கவிட்டு நமக்கு நாமே அழிவைத் தேடிக் கொள்ளும் பேரபாயம் யாழ்.குடா நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது.

இன்னும் சில வருடங்களில் குடாநாட்டில் குடி தண்ணீர்ப் பிரச்சினை பெரும் சவாலாக அமையப் போகின்றது என ஆய்வாளர்கள் அபாய அறிவித்தலை விடுத்துள்ளனர். அதேவேளை பாதுகாப்பற்ற குழி மலசல கூடங்களினால் நிலத்தடி நீரில் மலநீர் கலந்து சுகாதாரச் சீர் கேடுகளை ஏற்படுத்தி உள்ளது என சுகா தாரத்துறையினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இதோடு மட்டும் நின்று விடவில்லை. அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தும் விவசாய பீடை கொல்லி களால் குடிதண்ணீரில் விஷம் கலந்துள்ளது. இதனால் நிலத்தடி நீர் மாசடைகின்றது. என தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் பகுப்பாய்வு பிரிவினர் கூறுகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் மேலாக சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுவரும் குழாய்க்கிணறுகள், அனுமதியின்றி பொருத்தப்பட்டுள்ள (மோட்டார்)நீர் இறைக்கும் இயந்திரங்களின் பாவனை அதிகரிப்பும். இதனைச் சற்று மீட்டுப் பாருங்கள்

* மலநீர் கலத்தல்
* பீடை கொல்லி விஷம்
* இயந்திரத்தின் மூலம் நில்தடிநீர் உறிஞ்சப் படுதல்.
* இரவு நேரங்களில் மேற்கொள்ளப்படும் மண் அகழ்வு
* குளங்கள் மூடப்பட்டமை
* ஆனைவிழுந்தான் சுடலைக் காட்டில் கழிவுகள் குவித்தல்

இவை அனைத்துமே இன்று குடிதண்ணீர் மாசடைவதற் கான அதிமுக்கிய காரணிகள் என அடையாளம் காணப் பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டின் குடிதண்ணீர்த் தேவைக்கு மேலதிகமாக வீட்டுப்பாவனைக்காகவும் விவசாய நடவடிக்கைக் காகவும் மட்டுமன்றி அதிகரித்து வரும் கட்டட நிர்மாணப் பணிக்காகவும் நிலத்தடி நீர் உறிஞ்சப்படுகிறது.

நாளுக்கு நாள் குடிசனப் பெருக்கமும் நீர்ப் பாவ னையும் அதிகரித்து வருகின்றபோதும் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட நமது நிலப்பரப்பு விரிவடை யவோ அல்லது விஸ்தாரமாக்கப்படவோ இல்லை. அதற்கான சாத்தியமும் இல்லை.

### சட்டவிரோத மண் அகழ்வு

ஆனால் மண் அகழ்வு என்ற பெயரில் எமது நிலம் சிறிது சிறிதாக கடலோடு கலக்கின்றது. என்பதுதான் உண்மை. கடந்த 2008ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட குடிசன மதிப்பீட்டின் படி யாழ்.மாவட்டத்தில் 8 லட்சத்து 64ஆயிரத்து 635 பேர் வசிப்பதாக அட்ட வணையிடப்பட்டுள்ளது.

முன்பு ஒரு வளவுக்குள் ஒருவீடு, ஒரு கிணறு, ஒரு மலசல கூடம் என இருந்தன. ஆனால் இன்று தேவை அதிகரிப்புக்கேற்ப ஒரே வளவில் பல வீடுகள், பல கிணறு கள், பல மலசல கூடங்கள் என உருவாகிவிட்டன.

யாழ்.பிரதேசத்தில் பாசனக்குளங்களோ ஆற்றுநீர் பாசன வசதியோ இல்லை. முற்றும் முழுதும் நிலத்தடி நீரையே நம்பி வாழ வேண்டிய கட்டாயம். எனவே நீர் மாசடைவதை தடுத்துப் பாதுகாக்க வேண்டியது ஒவ் வொரு குடிமகனினதும் கடமை. பாதுகாப்பற்ற குழி மலசல கூடங்களின் மலநீர் கசிந்து நிலத்தடிநீரில் கலக்கின்றன. இதனால் வயிற்றோட்டம், காசநோய், புற்று நோய், சருமரோகங்கள் என்பன ஏற்பட வாய்ப் புண்டு. சிறுபிள்ளைகளுக்கு நோய் எதிர்ப்புச்சக்தி மிக மிகக் குறைவாக இருப்பதால் முதலில் இவர்களுக்கு வயிற்றோட்டம் ஏற்படும், பின்னர் படிப்படியாக தொற்று நோய்கள் தொடர்ந்து பற்றிக் கொள்ளும் வளர்ந்தவர் களுக்கு வயிற்றோட்டம் ஏற்படாவிட்டாலும் சிறுநீரக பாதிப்பு முதல் புற்று நோய் வரை பாதிக்கும் என்கிறார் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் திட்டமிடல் பணிப்பாளர் பாரதிதாசன்.

### ஆலோசனைகள் எதுவும் இல்லாமல்

மலசல கூடங்களை அமைக்கும் போதும் கிணறு களைத் தோண்டும் போதும் சம்பந்தப்பட்ட் அதிகாரி களின் ஆலோசனைகளையும் அனுமதியையும் பெற்று அதற்கமைய அமைக்கப்பட வேண்டும் என்று கூறும் பாரதிதாசன் தற்பொழுது பாவனையில் இருக்கும் குழி மலசல கூடங்களுக்கு மாற்றீடாக வடிகால் மூலம் கழி வகற்றும் புதிய திட்டம் ஒன்றை சிபார்சு செய்துள்ளதா கவும், அதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றும் தெரிவித்தார். அதனை உடனடியாக நடைமுறைப் படுத்தும் நிலையில்லை. இந்தத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் போது மலநீர் நிலத்தடி நீரில் கலப்பதை தடுக்க முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

ஒவ்வொரு வீடுகளிலும் காணிகளும் மேற்பரப்பில் தனித்தனியான வெவ்வேறு கிணறுகள் இருக்கலாம். ஆனால் நிலத்தடியில் எல்லாம் ஒன்றாகவே சங்கமமாகி உள்ளன என்பதை நம்மவர்கள் மறந்துவிடுகின்றனர். ஏதாவது ஒரு கிணற்று நீரில் மல நீர் கலந்து விட்டாலோ அல்லது உவர் நீர் கலந்துவிட்டாலோ அருகருகே உள்ள எல்லா கிணற்று நீரும் மாசடைந்துவிடும். என்பதை கருத்தில் கொள்ள வேண்டும் என்கிறார் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அதிகாரசபையின் பிராந் திய முகாமையாளர் தவேந்திரகுமார்.

### குழாய்க்கிணறு அமைக்க அனுமதி தேவை

ஒருசில குழாய்க்கிணறுகள் மட்டுமே திணைக்களத் தின் அனுமதியுடனும் ஆலோசனையுடனும் அமைக் கப்பட்டுள்ளன. ஆனால் ஆயிரக்கணக்கான குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு இயந்திரத்தின் மூலம் நிலத்தடிநீர் உறிஞ்சப்படுகின்றது. குடிதண்ணீர்க் கிணறு களுக்கு இயந்திரம் பொருத்தக்கூடாது. அதற்கு அனு மதியும் இல்லை. நாம் ஆலோசனைகளையும் அறிவுரை களையும் கூறலாம் ஆனால் நடவடிக்கை எடுக்கும் அதி காரம் எமக்கு இல்லை என்றும் அவர் கூறுகின்றார்.

நிலத்தடி நீர் மாசடைவதற்கு அவர் இன்னும் ஒரு விடயத்தையும் சுட்டிக்காட்டினார். அதாவது ஒழுங் கற்ற முறையில் மூடப்பட்டுள்ள கிணறுகள் இவை முறைப்படி மண்நிரப்பியோ சிமெந்து போட்டோ மூடப் படவில்லை. வீட்டுக்கழிவுகள், குப்பைகள் போட்டு நிரப்பப்படுகின்றன. அங்கே உருவாகும் விஷநோய்க் கிருமிகள் நிலத்தடி நீருடன் கலக்கின்றன. அடுத்ததாக ஆனைவிழுந்தான் சுடலைக்காட்டில் கொட்டப்படும் குப்பைகள் மேடாகி இன்று நோய்க் கிருமிகளை உற்பத்தி செய்யும் இடமாக மாறி உள்ளது. இதனால் நிலத்தடி நீர் மாசடைகின்றது.

அதேபோன்று கரையோரப் பகுதிகளில் தொடர்ச்சி யாக இடம்பெறும் மண் அகழ்வினால் மண் மேடுகள் காணாமல் போய் உள்ளன. இதனால் கடல்நீர் உட் புகுந்து நல்ல குடிதண்ணீருடன் கலப்பதால் எல்லாமே உவர் நீராக மாறுகின்றன. இதனைத் தனி ஒரு மனித னாலோ சட்டத்தாலோ தடுத்துவிட முடியாது. அனை வரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறுகிறார் பிராந்திய முகாமையாளர் தவேந்திரகுமார்.

### கடமை தவறும் எமது சுகாதாரப் பரிசோதகர்கள்

தற்பொழுது யாழ்.மாநகர எல்லைக்குள் 152 உண வகங்கள் இருக்கின்றன. இவற்றுள் 16 ஐஸ்கிறீம் கடைகள். விரல் விட்டு எண்ணக்கூடிய சில உண வகங்கள் மட்டுமே நீர்ப்பரிசோதனை செய்துள்ளன. ஏனைய எவையுமே நீர்ப்பரிசோதனை செய்யவில்லை என நீர் வழங்கல் அதிகார சபையின் பகுப்பாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் கூறுகின்றார்.

### ஐஸ்கிறீமில் மலநீர்

நாம் விருப்பத்துடன் சுவைத்துச் சாப்பிடும்ஐஸ் கிறீமில் மலநீர் கலந்துள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது. உணவகங்களில் சமையலறைப் பக்கம் எட்டிப் பார்த் தால் சாப்பிடவே மனம் வராது. சுத்தம் துப்புரவு இல் லாத சீர்கேட்டைக் காணமுடியும்.

**சிகா**

உணவகங்களுக்கு வருடாவருடம் அனுமதிப்பத்தி ரம் வழங்கப்படும் போதும் கட்டாயமாக நீர்ப் பரி சோதனை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது. ஆனால் எமது சுகாதாரப் பரிசோதகர்கள் இதனைக் கண்டுகொள்வதில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகின்றது.

### வசதிகள் இருந்தும் அதனைப் பயன்படுத்துவதில்லை

கடைகள் மட்டுமன்றி வீட்டுப்பாவனைக்கான குடிதண்ணீரைப் பரிசோதித்துக் கொள்ளவும், ஆலோசனை களைப் பெறவும் தேசிய நீர்வழங்கல் அதிகார சபை யின் விஷேட பகுப்பாய்வுப் பிரிவும் உண்டு. ஆனால் அதனைப் பொதுமக்கள் பயன்படுத்துவதில்லை. என் றும் பிராந்திய முகாமையாளர் கூறுகின்றார்.

### நன்னீரை நஞ்சாக்கும் கிருமி நாசினிகள்

விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் பசளை, மற் றும் பீடை கொல்லி, கிருமி நாசினிகள் மானியமாகவும் சலுகை விலையில் பெருமளவில் கிடைக்கின்றன. இதனால் விவசாயிகளும் வகை தொகையின்றி பசளை களையும் கிருமிநாசினிகளையும் பயன்படுத்துகின்ற னர். இவையனைத்தும் நிலத்தடி நீரை நஞ்சாக்கி விடு கின்றன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி அரிசி வகைகள் உட்பட 20 உணவு தானியங்களிலும், மரக்கறி வகைகளிலும் ஆசினிக் அமிலம் கலந்துள் ளது கண்டறியப்பட்டுள்ளது.

ஆசினிக் அமிலம் இல்லாத உரம் மற்றும் கிருமிநாசி னிகள் மட்டுமே இறக்குமதி செய்ய வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவித்த போதும் கண்ணில் மண் ணைத் தூவி விட்டு தவறுகள் இடம்பெற்று வருகின் றன. இவை தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறி சேன அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

எத்தனை தான் சட்டங்கள் போட்டாலும், உத்தரவு கள் பிறப்பிக்கப்பட்டாலும், நாமும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இல்லையேல் நன்னீரில் நஞ்சு கலந்து நாமே நமது அழிவுக்கு அடித்தளம் இட்டவர் களாகி விடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இப்போது விற்பனைக்கு

## தப்பிப் பிழைத்த நாது

"எம்பெருமானே! இந்தக் கண்டத்தில் இருந்து என்னைக் காப்பாத்தினால் உனக்கு நூறு நாளைக்குச் செல்போன் மாலை செய்து போடுவன்" என்று நேர்த்தி வைத்தார். நேர்த்தி வைத்ததாலோ என்னவோ நாதுவிடம் அடையாள அட்டையைக் கேட்காமல் வந்தவர்கள் சென்றுவிட்டார்கள்.









## அரசைக் கவிழ்க்க ஜெயலலிதாவின் விசுவரூபம்



காங்கிரஸ் - தி.மு.க. உறவை உடைக்க ஒரேவழி மன்மோகன் அரசைக் கவிழ்ப்பதுதான் என ஜெயலலிதா முடிவு எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

# மரண அறிவித்தல்

## தில்லைநடராசா சிவபாக்கியம் (பூபதி)



திருநெல்வேலி, வளாக வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தில்லைநடராசா சிவபாக்கியம் (பூபதி) 01.07.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லை நடராசா (வெள்ளக்கண்டு) வின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பரமேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற சீவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுப்பிரமணியத்தின் ஒன்றுவிட்ட சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, அன்னலட்சுமி, தங்கலட்சுமி மற்றும் பாலசிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் கருணாதேவி, ஜெயரட்ணம், காலஞ்சென்றவர்களான ஸ்ரீதரன் (இந்தியா), விக்கினேஸ்வரன் (நெதர்லாந்து) மற்றும் ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற லோகேஸ்வரன் மற்றும் சுகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் கதிர்காமசிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கட்டடங்கள் திணைக்களம்), சுலோசனாதேவி (இந்தியா), பிறேமலா (சுவிஸ்), ஜெயநிதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் கஜேந்தினி (இ.போ.சபை, கோண்டாவில்), தரன் (கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி), நிசாந்தன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யூரோவில்), நிரோசினி (HNDA, 4 th Year மாணவி), ஸ்ரீநிரஞ்சனி (இந்தியா), ஸ்ரீதர்சினி (லண்டன்), ஸ்ரீநிரஞ்சன் (இந்தியா), மைதிலி ( இந்தியா), தாரணி (சுவிஸ்), விதுரன் (லண்டன்), நவசீலன் (லண்டன்), சந்திரமோகன் ( இந்தியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தனுஸ் (இந்தியா), வர்ஷா (இந்தியா), தனுஸ்கா (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வளாக வீதி, திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(5431)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் சென். சேவியர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 3
வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 17,19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரு பிரிவுகளிலும் மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணி சம்பியனானது.

17 வயது பிரிவுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் சென். சேவியர் கல்லூரி அணியை எதிர்த்து ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணி ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அணியை 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா தமிழ் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி அணி, வவுனியா தமிழ் மகாவித்தியாலய அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணி மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. இதில் சென்பற்றிஸ் கல்லூரி அணி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியை 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)

# மரதன் ஓட்டத்தில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஜூலை 3
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாவட்ட ரீதியில் ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வெற்றியீட்டியவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆண்கள் பிரிவில் வெற்றியீட்டிய பத்துப்பேரின் விவரம் வருமாறு:

ர.ரஜீகரன் (குடத்தனை வடக்கு), கி.ஜெயந்தன் (பண்டத்தரிப்பு,) ப.ஜெயானந்தன் (கோண்டாவில்), ம.மாதவன் (தேவரையாளி),கு.கெங்காதரன் (சிதம்பராக் கல்லூரி), ப.ஜெயந்தன் (மானிப்பாய்), தெ.ஜெயராம் ( அல்வாய் கிழக்கு), வி.சிவாஸ்கரன்( சிதம்பராக்கல்லூரி), அ.ரஜீவ்குமார் (விக்கினேஸ்வராக்கல்லூரி), கா.பிரகாஸ் (கரணவாய் மத்தி).

பெண்கள் பிரிவில் வெற்றியீட்டியவர்களின் விவரம் வருமாறு:

நாகமதி (சண்டிலிப்பாய்), சி.நவரஞ்சினி (கரவெட்டி கிழக்கு), சி.மிலோசனா (வட இந்து மகளிர் கல்லூரி), டி.பானுமதி (நெல்லியடி), எ.மேரி துஷந்தினி (வடஇந்து மகளிர் கல்லூரி), கு.மங்கள தர்ஷினி (வட இந்து மகளிர் கல்லூரி). (ஜ-23)

# மாகாண கரம் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 3
வடமாகாணக் கல்வி திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே வவுனியாவில் இடம்பெற்ற 15, 19 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலான கரம் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

**15 வயது பிரிவு ஆண்கள்-** சென். ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.

**15 வயது பிரிவு பெண்கள்-** சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வட மத்திய மகளிர் கல்லூரி, வவுனியா, சுந்தரபுரம் சி.ரி. எம்.எம். பாடசாலை.

**19 வயது பிரிவு ஆண்கள் -** சென்பற்றிக்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.

**19 வயது பிரிவு பெண்கள்-** யாழ். இந்து மகளிர் கல்லூரி, வடமத்திய கல்லூரி, சுண்டுக்குளி மகளிர்கல்லூரி. (த-23)

# 10 ஆவது விக்கெட் இணைப்பாட்டம் நிதர்ஸன் - சுகிர்தன் புதிய சாதனை

## பற்றீசியன்ஸ் அரையிறுதிக்குத் தகுதி


பி.நிதர்சன்


டி.சுகிர்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 3
வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தும் ஐம்பது பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி யின் 3 ஆவது கால் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் பற்றீசியன்ஸ் அணிக்கும், சிறி காமாட்சி அணியும் மோதிக் கொண்டன. இதில் பற்றீசியன்ஸ் அணி சிறிகாமாட்சி அணியை 27 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்றியில் வெற்றி பெற்ற பற்றீசியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 47 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 350 ஓட்டங்களைப் பெற்றது. ஓர் அணி 50 ஓவர்களில் ஆகக் கூடிய ஓட்டங்களை பெற்ற தரவரிசையில் பற்றீசியன் அணி 4 ஆவது இடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. பி.பத்மமுரளி 65 (தொடரின் 65 ஆவது அரைச்சதம் ) கிளின்ரன் 78 (தொடரின் 66 ஆவது அரைச்சதம்), நிதர்ஸன் 77 (தொடரின் 67 ஆவது அரைச்சதம்) சுகிர்தன் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களைப் பெற்றனர். நிதர்சன், சுகிர்தன் 10 ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 106 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனை ஒன்றை நிலை நாட்டியுள்ளனர்.

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தச் சுற்றுப்போட்டியின் அரை இறுதிப்போட்டியில் ஜொலிஸ்ரார் அணியை சேர்ந்த எம்.துஜீபன், வி.நிதர்ஸன் ஆகியோர் இணைப்பாட்டமாக 64 ஓட்டங்களை யாழ். சென்றல் அணிக்கு எதிராக பெற்றமையே இதுவரை சாதனையாக அமைந்தது.

நிரூஜன் 5 இலக்குகளையும் அஜன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். 356 ஓட்டங்களை வெற்றி இலக்கா கக் கொண்டு களமிறங்கிய சிறிகாமாட்சி அணி 26.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றனர். நிரோஸன் 51 (தொடரின் 68 ஆவது அரைச்சதம்) நிரூஸன் 24 சாருஜன் 24 ஓட்டங்களை பெற்றனர். பத்மமுரளி, சஜீன்ரன், நோபேட், அலன்ரின் தலா இரண்டு இலக்குளை கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற பற்றீசியன்ஸ் அணி, யாழ். பல்கலைக்கழக அணிக்கு எதிராக அரை இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-86)

# சினேகபூர்வ ஆட்டங்களில் சென்.ஜோன்ஸ், சென்றல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 3
சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றின் 15,17 வயதுப் பிரிவுகளின் கூடைப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே இடம்பெற்ற சினேகபூர்வ ஆட்டத்தில் 15 வயது பிரிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் 17 வயது பிரிவில் யாழ்.மத்திய கல்லூரி அணியும் வெற்றி பெற்றுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை 42:17 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

தொடர்ந்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி யாழ். மத்திய கல்லூரி அணியை 16:10 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (த-23)



521 ஆவது படையணியின் ஏற்பாட்டில் வடமராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த வீரர் கேடயம் பெறுகின்றார். (த-236)

# பூப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 3
வடமாகாணக் கல்வி திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண்,பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம்:

**பெண்கள் பிரிவு**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.

**ஆண்கள் பிரிவு**
மானிப்பாய் இந்துக் கல்லூரி உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம், சென்.ஜோன்ஸ் கல்லூரி. (த-23)

# தேசிய உதை பந்தாட்டம் மூன்று நாள்கள் கொழும்பில்

வலி.வடக்கு, ஜூலை 3
இலங்கையின் 37 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டித் தொடரின் பெருவிளையாட்டுக்களில் இன்று முதல் நாளை மறுதினம் வரை ஆண், பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் கொழும்பு றொறிங்ரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளின் வட மாகாண ஆண்,பெண் அணிகளும் கலந்து கொள்ளவுள்ளன.

போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் நேற்றுக் கொழும்புக்குப் பயணமாகியுள்ளன.

தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அணிகளுக்கான வீரர்கள் வீராங்கனைகள் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட ஒரு அணியாகச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

# இரண்டாவது ஆண்டாகவும் அருணாசலம் சம்பியன்

அளவெட்டி, ஜூலை 3
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாவது ஆண்டாக அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் மாகாணச் சம்பியனாகி அசத்தியுள்ளது.

கடந்த ஆண்டும் இந்தப் பாடசாலை கரப்பந்தாட்ட அணி மாகாணச் சம்பியனாகியது.

அத்துடன் 15 வயதுப் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் இந்தப் பாடசாலையின் அணி மாகாண மட்டத்தில் 2 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. (த-36)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி, வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்திக்கு அருகில் மெயின் வீதியில் 3¼ பரப்புடைய காணியும் (1¾+1½ பரப்புத் துண்டங்களாகவோ) சுன்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் 2 பரப்புக் காணியில் அமைந்த 6 அறைகள், குளியலறைகளுடன் மற்றும் அருகில் காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் 3¼ பரப்புக் காணியில் 6 அறைகள், குளியலறைகளுடன் சகல வசதிகளுடன் அமைந்த வீடும் யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் 2½ பரப்பு 2 குளியில் அமைந்த வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. No: 0778449687

## யாழ். மாவட்ட அமைப்பாளர்
## இ.அங்கஜனின்
## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
## யாழ். மாவட்ட கிளை திறப்பு விழா அழைப்பு

**இடம்:** கோயில் வீதி, நல்லூர்
**திகதி:** இன்று (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** பிற்பகல் 2.30

இந்த நிகழ்வுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள சன சமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Dr.நிஷாந்தன்
உறுப்பினர்
யாழ்.மாநகர சபை
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி.

(சி/1349)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தில் கடந்த இருபது ஆண்டுகளாக ஒலி, ஒளி சேவை செய்து முருகன் தொண்டாற்றிய

**வீரசிங்கம் குமரேசபிள்ளை** (தம்பாட்டி)

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்க் காணிக்கையை செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலயபரிபாலனசபை,
நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்.

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் வீதி மானிப்பாயில் சிறிய நிறுவனம் ஒன்றின் பாவனைக்கு வீடு வாடகைக்கு தேவை. கொடுக்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் - 0777 110 862
(தரப்படும் வீடு மிகச்சிறப்பாக பராமரிக்கப்படும்)

## பளை வீமன்காமம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க
## பொதுக்கூட்டம்

பளை வீமன்காமம் தெற்கு J/237 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் தெரிவுசெய்வதற்கான பொதுக்கூட்டம் 05.07.2011 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு கிராம சேவையாளரின் பணிமனையில் (பழைய சந்தைக்கு அருகில்) நடைபெற உள்ளதால் இப்பிரிவுக்குட்பட்ட சகல மக்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கிராம நலன் விரும்பிகள்.

## வீடு வாடகைக்கு உண்டு

நாவலர் வீதியில் கோயில் வீதிக்கு சமீபமாக 2500 சதுர அடி இட வசதியுள்ள 5 பரப்பு (50 பேர்ச்) காணியில் அமைந்திருக்கும் தண்ணீர், வாகன தரிப்பிடம், தொலைபேசி நெற்கேபிள் வசதிகளுள்ள வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. அரச, அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள் அலுவலகமாக பயன்படுத்த மட்டும் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0718584882

## மரண அறிவித்தல்

### கந்தையா ஸ்ரீபத்மநாதன்

மானிப்பாய் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஸ்ரீபத்மநாதன் நேற்று (02.07.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்கள்ான கந்தையா - இரத்தினம் தம்பதியரின் மகனும் நாகலிங்கம் - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான துரைராசா, வவி, பவானி (உடுப்பிட்டி) ஆகியோரின் சகோதரனும் சகிலா, நவறஞ்சினி, மனோகரன், கங்காகரன், காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் லம்போதரன் ஆகியோரின் தந்தையும் சரஸ்வதியின் பெறாமகனும் யோகேஸ்வரன், சிவாம்பிகை (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் விஜயகுமார் (உதயநகர்), ஜெயசீலன் (உடுவில்), கிறிஸ்ரினா (மருதநகர்), சுகிர்தா (ஸ்கந்தபுரம்), மல்லிகா (வவுனியா) ஆகியோரின் மாமனும் யுவறாஜ், பகலவன், சங்கீதா, மகிலினி, கசீபன், மகீபன், கம்சாலினி, யதுமிதா, தர்மினா, தாட்சாயினி, டனுசன், லகிஷன், சுயந்தன், காலஞ்சென்றவர்களான கோபிகா, லோஜினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் இல. 1544, இரத்தினபுரம், கிளிநொச்சியில் நடைபெற்று [illegible] மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 1544, இரத்தினபுரம், கிளிநொச்சி. (சி/1350) தகவல்: குடும்பத்தினர்.

## கும்பாபிஷேகம்

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச் சித்தோட்டம் கற்பகப்பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று காலை விசேட பூஜை வழிபாடுகளுடன் இடம்பெறவுள்ளது.

தேவஸ்தான பிரதமகுரு வேதாகம கிரியா கலாமணி பிரம்மஸ்ரீ ச.மு.ரவிக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக கிரியைகள் இடம்பெறவுள்ளன.

(ஒ-9)

(சிறப்பு மலர் 10 ஆம் பக்கத்தில்)

* * *

இருபாலை லிங்கப்பிள்ளையார் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிக்கு இடம் பெறவுள்ளது.

சிவஸ்ரீ ந.கேதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். கிரியைகளை ஆலய பூசகர் பா.கேசவன் ஐயா நெறிப் படுத்துவார்.

(ஒ-72)

(சிறப்பு மலர் 24 ஆம் பக்கத்தில்)

* * *

தெல்லிப்பழை மேற்கு வித்தகபுரம் பொற்கலம் தம்பை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் இன்று காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

யுத்தம் காரணமாக கடந்த 20 வருடங்களின் பின்னர் புதுப்பொலிவு பெற்று கும்பாபிஷேகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

(சிறப்பு மலர் 21 ஆம் பக்கத்தில்)

## கடற்கரையில் குத்துக்கரணம் அடித்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

அல்லைப்பிட்டி கடற்கரையில் நண்பர்களுடன் சேர்ந்து குத்துக்கரணம் அடித்து விளையாடியபோது உட்காயங்களுக்குள்ளாகிச் சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காது நேற்று மரணமானார்.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த எம்.சசிக்குமார் (வயது-37) என்பவரே மரணமானவர் ஆவார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-4)

## மக்கள் வங்கியில் கணக்கு ஆரம்பித்தால் மரக்கன்றுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை தொடக்கம் மக்கள் வங்கியின் கிளைகளில் புதிய கணக்கை ஆரம்பிப்பவர்களுக்குப் பயன் தரு மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி சனிக்கிழமை வரையான காலப் பகுதியில் புதிதாக வங்கிக் கணக்கை ஆரம்பிப்பவர்களுக்கே பயன்தரு மரக்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன என்று வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் [illegible] தெரிவித்தார். (ஒ-14)

## வீடு வாடகைக்குத் தேவை

மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் 3 பேர் கொண்ட குடும்பம் ஒன்று வசிப்பதற்கு வீடு தேவை.
தொடர்பு: 0770376549

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வள்ளிப்பிள்ளை தம்பிராசா



மட்டுவில் தெற்கு, வாகையடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை தம்பிராசா கடந்த 29.06.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும் தவமணி, காலஞ்சென்ற சிவனடியான் மற்றும் பாக்கியநாதன் (கனடா), இரத்தினவரதர், வரதலஷ்சுமி (கைதடி ஆயுள்வேதம்), சிவகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் கிருஷ்ணபிள்ளை, பாலசறோஜினி தேவி, ரீற்றா, தயாநிதி, இந்திரபவன் (மினிபஸ்), மதி சோபனை ஆகியோரின் அன்பு மாமியும் நந்தினி, நிரஞ்சினி, சுகந்தினி, சிபானி, சியந்தன், சயந்தன், சுபிதா, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், கல்பனா, காண்டீபன், சசிதரன், சியானி, நோமன், தயாளன், தவரூபி, கஜந்தினி, கஜந்தன், ஜெனிற்றா, யோனதன், ஜெஸ்ரினா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் தஜீவ், லிபிசா, திபிசா, திபிஸ்னா, சஞ்சயன், லோஜிகன், சங்கீத், கனிற்றா, யனுயன், அனுஸ்ரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனத்துக்காக பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாகையடி கிழக்கு வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி இராசதுரை நாகேஸ்வரி



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை நாகேஸ்வரி நேற்று (02.07.2011) சனிக்கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் வ.இராசதுரையின் (அராலி) அன்பு மனைவியும் அகல்யா (ஆசிரியை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), சகுந்தலா (கனடா), ஜீவகாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திரதேவா (எலெக்ரிசன்), தளையசிங்கம் (கனடா), உதயசாந்தி (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: வ.இராசதுரை (கணவர்).
மு.சந்திரதேவா (மருமகன்).

## ஓராண்டு நினைவு



08.07.2011

சில்லாலை வைத்திய கலாநிதி
**பாக்கியநாதர் அத்தனாசியார்**

நித்தமும் பிரார்த்திக்கும் மனைவி
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்.

36/6,37வது ஒழுங்கை,கொழும்பு-06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர் தினேஷ் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 3

அமைச்சர் தினேஸ் குணவர்த்தன எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

மண்டைதீவுப் பிரதேசத்துக்கான குடிதண்ணீர் திட்டம், யாழ். நகரப் பகுதியில் தேசிய நீர் வழங்கல் சபையின் இரணைமடு அலுவலகம் கட்டுவதற்கான அடிக்கல் நடும் வைபவம் மற்றும் நவாலி சரசாலை பகுதிகளில் குடிதண்ணீர் திட்டங்களை ஆரம்பித்து வைத்தல் ஆகிய நிகழ்வுகளை ஆரம்பித்து வைக்கவே அமைச்சர் தினேஸ் குணவர்த்தன இங்கு விஜயம் செய்கிறார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ஒ-302)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கேட்டறிந்து அவற்றுக்கு உடனடித் தீர்வும் வழங்க ஏற்பாடு செய்வர் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. (ஒ-9)

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களின் நிலங்கள் எழுந்தமானமாக ஆக்கிரமிக்கப்பட்டு இராணுவ முகாம்களும் இராணுவ குடியிருப்புகளும் ஆங்காங்கே அமைக்கப்படுகின்றன. தமிழ் மக்கள் பாரம்பரியமாக மீன்பிடி தொழில் செய்த பிரதேசம், விவசாயம் செய்து வந்த நிலங்கள் இன்று சிங்கள மீனவர்களினதும் சிங்கள விவசாயிகளினதும் தொழில் செய்யும் இடங்களாக மாறி வருகின்றன.

புத்தர் சிலைகளும் சின்னங்களும் இந்து கிறிஸ்தவ மக்கள் வாழும் தமிழ்ப் பிரதேசங்களில் எழுந்தமானமாக நிறுவப்படுகின்றன. இதனால் தமிழ் மக்களின் நிலங்கள் இராணுவ சிங்கள மயமாக்கப்பட்டு வருவது மட்டுமல்ல தமிழர்களின் மொழி மத கலாசாரங்கள் சீரழிக்கப்பட்டு வருகின்றன.

தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த தொடர்ச்சியான நிலப்பரப்புகள் இக் காரணங்களால் துண்டாடப்படுகின்றன. தமிழ் மக்கள் செறிந்து பெரும்பான்மை பலத்துடன் வாழுகின்ற இடங்கள் இத்தகைய நடவடிக்கையினால் அவர்கள் தமது சொந்த நிலத்திலேயே சிறுபான்மையினராக்கப்படும் நிலை உருவாகி உள்ளது.

இத்தகைய செயல்கள் தமிழர்களது அரசியல் வேட்கையை அபிலாஷைகளை மழுங்கடித்தும் - சீரழிக்கும் செயல்களாக அமைகின்றன. தனித்தமிழ் பிரதேசங்களை கலப்பினப் பிரதேசங்களாக மாற்றியமைப்பதே அரசின் இந்த சூழ்ச்சித் திட்டமாகும். இதை நாம் விரைந்து தடுத்து நிறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் - என்றார்.

இக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயக மூர்த்தி, சி.சிறீதரன் உட்பட பலர் உரையாற்றினர். (ஒ-ஐ-7)


### குத்தகைக்கு / வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் கஸ்தூரியார் வீதிச் சந்திக்கு அருகில் 5 பரப்பு வெற்றுக்காணி குத்தகைக்கும் வாடகைக்கும் உண்டு.

தொடர்பு- 0773510511



### European College Of Higher Studies

★ Student Visa (IELTS கட்டாயமானது)
★ Student Visitor Visa (IELTS கட்டாயமற்றது)

I இந்த 2 விதிமுறைகளுக்கு அமைய மாணவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.
II சட்டவல்லுநர்களால் ஆவணங்கள் சரிபார்க்கப் படும்.
III Sponsor வசதி உள்ளவர்களுக்கு ஏற்றவகையிலும் இல்லாதவர்களுக்கு Sponsor வசதி செய்தும் கொடுக்கப் படும்.
IV முன் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

தொடர்பு:-European College of higher Studies, 315½, Parameaswara Junction, Palaly Road, Jaffna.
T.P. 0776327623, 0771882507



### பிற்போடப்பட்டுள்ளது

எமது திருவருட் செல்வி கலைச்செல்வி அவர்களது பூப்புனித நீராட்டு விழா நாளை (04.07.2011) திங்கட்கிழமை நடைபெற இருந்து தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் (10.07.2011) ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0214900013

திரு. திருமதி ரவீந்திரநாதன் குடும்பம் (நோர்வே)
திருமதி சிவபாக்கியம் சின்னையா.


## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் நேற்றிரவு தகவல் வெளியிட்டன.

அவரின் உடல் நிலை தொடர்பான விவரம் எதனையும் தெரிவிக்க ஆஸ்பத்திரி வட்டாரங்கள் மறுத்து விட்டன. (ஒ-ஐ-14)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்மட்டத் தலைவர்கள் மற்றும் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்தி வருகின்றார். விஜயத்தின் இறுதியாக நாளை மறுதினம் ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ மூனைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

கடந்த மாதம் 15 ஆம் திகதி 'சனல் - 4' தொலைக்காட்சி வெளியிட்ட 'இலங்கையின் கொலைக்களம்' ஆவணப் படம் இதுவரை தாம் பார்க்கவில்லை என்று பான் கீ- மூன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ஐ)

## சிவபூமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியில் முதத் தடவையாக பங்கேற்று இருந்தார்.

நேற்று இடம்பெற்ற 4x100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை அணி சார்பாக பங்கேற்று இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் பெற்றார் துஷ்யந்தன்.

இன்று இடம்பெறும் 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் உயரம் பாய்தல் போட்டியிலும் துஷ்யந்தன் பங்கேற்க இருக்கிறார்.

இந்தப் போட்டிகளில் அவர் வெற்றிவாகை சூடவேண்டும் என்று உதயன் வாசகர்கள் மனமார வாழ்த்துகிறார்கள். (ஒ-ஐ)

## சரணடைந்தோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தோடு கிளிநொச்சியில் இருந்து ஐ.நா.வின் அமைப்புகள் வெளியேறியது குறித்தும் விசாரிக்கப்படும் என்றும் பொதுச் செயலாளர் அறிவித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவை தொடர்பான செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் குறித்த பரிந்துரைகளில் ஐ.நா. சம்பந்தப்பட்ட சிபார்சை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பான் கீ மூனின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் இதனைத் தெரிவித்துள்ளார்.

''இன்னர் சிற்றி பிரஸ்'' ஊடகத்திற்கு நேற்று அளித்த செவ்வியின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்,

இறுதிக்கட்ட போரின் போது ஐக்கிய நாடுகள் அமைப்பினர் கிளிநொச்சியிலிருந்து வெளியேறியமை, சேத விவரங்களை வெளியிடாமை போன்ற விடயங்கள், சர்வதேசச் சட்டங்களுக்கு அமைய தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் சரணடைய பான் கீ மூனின் பிரதம அதிகாரி விஜய் நம்பியார் வழங்கியதாக கூறப்படும் உறுதி, அதன் பின்னர் சரணடைந்தவர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பிலான பரிந்துரையையே பொதுச் செயலாளர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று பர்ஹான் ஹக் குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இந்த விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஐக்கிய நாடுகளின் ஏனைய முகவர் நிறுவனங்களிடமும் நிபுணர் குழு அறிக்கை பற்றி கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகவும் பர்ஹான் ஹக் தெரிவித்தார். (அ)


### விற்பனைக்கு

NP-HI xxxx இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள முச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு 0774192275


## கடவுச்சீட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைக் கருத்தில்கொண்டு கடவுச் சீட்டை இங்கேயே பெற்றுக்கொள்ளும் வகையில் அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டும் என்று சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழு வேண்டுகோள் விடுத்தது. இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் பலில் ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பின்போது யாழ்.மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படும் மின்தடை, வடக்குக்கான ரயில் பாதையைப் புனரமைத்தல், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அச்சுவேலி - தொண்டைமானாறு வீதியைத் திறந்து விடுதல், தீவுப் பகுதிக்கான பண்ணைப் பாலத்தைத் துரித கதியில் புனரமைப்பது குறித்தும் வழுக்கையாற்றுத் திட்டம் மற்றும் வலி.வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மயிலிட்டி காச நோய் வைத்தியசாலையை மீளவும் இயங்க வைப்பது, பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் எனப் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் குழுவினர் அமைச்சருடன் கலந்துரையாடினர்.

இதில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவைச் சேர்ந்த பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, சு.பரமநாதன் மற்றும் யாழ்.மாவட்ட வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த எஸ்.ஜெயசேகரன், கே.ஜனக்குமார் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-9)

### கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் திருமதி உஷா தனபாலசிங்கம் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி விஜயதர்மா செல்லம்மா**

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த துயருறுக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர், நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா வைத்தியநாதன் (J.P)

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர், சுன்னாகம் தெற்கு)

கந்தரோடை, சுன்னாகத்தைச் சேர்ந்த செல்லையா - வைத்தியநாதன் நேற்று(02.07.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.ஜெகநாதன்(தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்,.C.D.O, சகோதரன்)

கந்தரோடை, சுன்னாகம்.

### திருமதி நடராசா சரஸ்வதி



உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நடராசா சரஸ்வதி நேற்று (02.07.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தங்கம்மா தம்பதியரின் மகளும், சங்கீதாவின் அன்புத் தாயும், நிர்பானந்தனின் அன்பு மாமியும், ந.அன்னம்மா, பொ.நடராசா, இ.அந்தனைட்சுமி ஆகியோரின் சகோதரியும், ந.இராசமலர், ஆ.சுலோஜனா, சிவமூர்த்தி, சு.மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈசன்கரம் தவகுளம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நிர்பானந்தன்
(அப்பன் - மருமகன்)

உசன், மீசாலை.

### சரவணமுத்து சின்னத்துரை



பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சின்னத்துரை நேற்று (02.07.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் ஆறுமுகம் சரவணமுத்து - இராமாசி பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஆசிரியர் சண்முகநாதன், சிவசுப்பிரமணியம், சிவகாமி அம்மை, சரஸ்வதி, ஆறுமுகசாமி (அதிபர்) மற்றும் பூதநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.சோதிவடிவேல்பிள்ளை
(மருமகன்)
